www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

පක්කම් 20 — பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

ஜன.21-27,1996

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL முரசு 137



## வடக்கில் பறந்த புலிகளின் விமானம் தலைநகருக்கு

## எக்ஸ்ரே ரிப்போர்ட் ஆபத்து

## கிரிக்கெட் சாதனைகள்

## பட்டுச்சேலைப் பரிசுத் திட்டம்

www.padippakam.com

# முரசம்

## உரியதைத் தரலாம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

இலங்கை வானொலியில்
புதிய தமிழ் அலைவரிசை
ஆரம்பிக்கப்பட்டுள்ளதை வரவேற்கலாம்.

ஜனாதிபதியின் செய்திதான்
ஏமாற்றமளித்துவிட்டது.
பொங்கல் பரிசாக
புதிய அலைவரிசையை
தமிழ் மக்களுக்கு தந்துள்ளதாக
தெரிவித்துள்ளார் ஜனாதிபதி.

ஜனாதிபதியிடமிருந்து
எதிர்பார்த்த பொங்கல் பரிசு
அலைவரிசையல்ல;
அரசியல் தீர்வு!

அத்திவாரமே
ஆட்டம் காணும் போது
கட்டிடத்துக்கு
வர்ணக்கலர் பூசுவதுபோல
அரசியல் தீர்வை
எதிர்பார்த்திருந்த நேரத்தில்
அலைவரிசையை
பொங்கல் பரிசு என்று
அறிவித்ததும் அமைந்துவிட்டது.

அலைவரிசையை
புதிதாகத் தந்தது
நிச்சயமாக நல்ல விடயம்.
வெகுஜனத் தொடர்பு சாதனங்களில்
தமிழுக்கு உரிய இடம்
தரப்படுவது குறித்த
அரசின் அக்கறைக்கும்
நல்லதோர் எடுத்துக்காட்டு!

அதனை
பொங்கல் பரிசு என்று
அறிவித்ததுதான்
யானைப் பசிக்கு சோளப்பொரி!

இன்னொரு விடயத்தையும்
அரசு கவனிக்க வேண்டும்.
இடம்பெயர்வுகளும்,
பற்றித் தடைகளும்
பெருந்தொகையான
தமிழ் பேசும் மக்களை
வானொலிகளில் இருந்து
அந்நியப்படுத்தி இருக்கின்றன.

இந்த நிலையில்
பொங்கல் பரிசான
புதிய அலைவரிசையும்
இலட்சோப இலட்சம்
செவிகளை எட்டமுடியாதுள்ளது.

கடந்த கால ஆட்சியாளர்கள்
அபகரித்த அலைவரிசையை
மீண்டும் தந்துள்ளதாக
ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

அவரது கூற்று பண்பாடானது.
"சேரவேண்டியதை
சேர்ப்பித்துள்ளேன்" என்றுதான்
நியாயமாக சொல்லியிருக்கிறார்.

தமிழ் பேசும் மக்களது
அரசியல் கோரிக்கைகளும்
அதேபோல நோக்கப்பட்டால்
கெட்ட போர் பட்ட மரமாகிவிடும்.

அலைவரிசையை
திருப்பி ஒப்படைக்க
யாருடைய சம்மதத்தையும்
ஜனாதிபதி கேட்கவில்லை.

தமிழ் பேசும் மக்களின்
அரசியல் கோரிக்கைகளை
நிறைவேற்றவும்- அவர்
இனவாதிகளது சம்மதத்தை
எதிர்பாக்கத் தேவையில்லை!

ஏனெனில்,
தமக்கு உரியதல்லாதவற்றை
தமிழ் பேசும் மக்கள்
கேட்கவில்லை; கோரவுமில்லை.

தமிழ் பேசும் மக்கள்
தமது பராம்பரிய பூமியில்
எப்படி வாழ வேண்டும்,
எதை எதை அனுபவிக்கவேண்டும்
என்பதை இனவாதிகள்
எப்படித் தீர்மானிக்க முடியும்?
அவர்களிடம் தீர்மானிக்கும்
பொறுப்பை எப்படிக்
கொடுக்க முடியும்?

அப்படிக் கொடுக்க நினைத்து
ஒப்பந்தங்கள் கிழிக்கப்பட்டதுதான்
யுத்தத்தில் வந்து நிற்கிறது.

எனவே-அலைவரிசை
விடயத்தில் செய்தது போல
அரசியல் தீர்வு விடயத்திலும்
அரசுதானாக முன்வந்து
உரியதைத் தரவேண்டும்.
அது ஒன்றே
நாட்டுக்கு நம்பிக்கை தரும்.

❑❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்



## பழிவாங்குதல்

ஒருவனுக்கும் தீமைக்கு தீமை செய்யாதிருங்கள் என்கிறார் பவுல் 'பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதில்செய்வேன்' என்று கர்த்தர் சொல்லுகிறார். (ரோ 12.19.) அதனால் பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள் முதலியவற்றை எங்கள் இருதயத்தில் இருந்து எடுத்துப் போடுவோமாக. அவற்றை மறந்து விடுவோமாக.

'அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்'. (1பேதுரு 5:7) அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம் முதலிய ஆவியின் கனிகளை பெற்றுக் கொள்வோமாக.

உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களை துன்பப் படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் என்று இயேசு சுவாமி சொன்னாரே. பரிசுத்த ஆவியானவர் நிச்சயம் நமக்கு உதவி செய்வார். இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் இரக்கம் பெறுவார்கள். பிதாவின் அன்பை எண்ணி என்றென்றும் அவரை ஸ்தோத்தரிப்போமாக.

ஆர்.தேவராஜ், கட்டுகஸ்தோட்டை

## ஸலாம் சொல்லுங்கள்!

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:-

★ "முஸ்லிமாகிய நீங்கள் ஒருவரையொருவர் சந்தித்தால் முதலில் ஸலாம் கூறிவிட்டு மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசுங்கள்".

★ "உங்களில் யார் ஸலாம் கூறுவதில் முந்திக் கொள்கிறாரோ அவர் அல்லாஹ்வின் அருளுக்கும் நாயகம் (ஸல்) அவர்களின் ஷபா அத்திற்கும் மிகவும் தகுதியுடையவராவார்".

★ "ஸலாமானது என்னைச் சார்ந்தவர்களுக்குக் காணிக்கையாகும். மேலும், அது காபிர்களை விட்டும் பாதுகாவலாகவும் உள்ளது."

★ "ஸலாம் என்பது அல்லாஹ்வின் திருநாமங்களில் ஒன்று. அதனைத் தங்களுக்கிடையில் பரப்பிக்கொள்ளுங்கள்."

★ ஸலாம் கூறாமல் யாராவது பேசினால் அவருடன் பேச்சைத் தொடர்வதற்கு விரும்பாதீர்கள்".

★ "மனிதர்களுள் மிகச் சிறந்தவர் ஸலாத்தை முந்திக்கொள்பவர்"

மனிதர்களிடத்திலே ஒற்றுமை, சமத்துவம் ஏற்படவேண்டும், சாந்தியையும், சமாதானத்தையும் சாற்றும் சான்றாண்மை மிக்க ஸலாத்தை உங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் கூறிக்கொள்ளுங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஏனெனில் நட்புணர்வுகளை காண்பதில் நபி(ஸல்) அவர்கள் நல்லதோர் நாகரிகத்தை அமைத்திருக்கிறார்கள்.

எனவே, நாங்களும் ஒருவருக்கொருவர் அமைதியை ஏற்படுத்திக்கொள்ள ஸலாத்தினைத் தெரிவிப்போம்!

மசூத், காத்தான்குடி-03.

## கவிதைப்போட்டி இல-134

### பரிசுக்குரிய கவிதை

### இழுத்து மூடு

இழுத்து மூடு இழுத்து மூடு.
இழந்தசொத்து பெற்றதுன்பம்,
கழுத்துவரை தொடராமல்,
இழுத்துமூடு சென்றஆண்டை
இழுத்துமூடு தொலையட்டும்!

ம. துஷ்யந்தன், மட்டக்களப்பு.

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**அலரும் பொன்னான வாழ்வு**

முந்தியபோரால் முகிழ்த்த வறுமை
முடிவின்றி உயர்ந்திட்ட நேரம்,
சிந்திய கண்ணீர் கரையின்றி ஓட
சித்தத்துள் மலர்ந்தது புது எண்ணம்!
எந்தை மாதா பூமியாள் இருக்கையில்
எதற்கு நம் மனதுக்குள் கவலை?
அந்தியும் காலையும் கொத்தியே பயிரிட்டால்
அலருமே பொன்னான வாழ்க்கை!

திருமதி. மல்லிகா பத்மநாதன், பசறை.

**வளமாகும் நிலம்**

வடமராட்சியில்
இடம் பெயர்ந்து
வன்னியில் வந்து இங்கு
விளை நிலங்களை
வளம் படுத்தும் பாலகரோ?

சீ. தேவன், வாழைச்சேனை.

**புது நெல்**

கண்ணி வெடிகளை
களையெடுத்து மண்ணில்
பொன் நெல் விளைக்க
புறப்பட்ட சித்தர்களோ?

சதா கணபதி, உடபுஸ்ஸலாவ.



**மீண்டும் தோண்டுவேன்**

கொடிய போரில் மடிந்துபோன
மனிதர்களை மட்டும்
இம் மண்ணில் புதைப்பேன்!
மறைந்துபோன
மனிதாபிமானத்தை
மறுபடியும் தோண்டி எடுப்பேன்!

பெ. அழகர்சாமி, மட்டக்களப்பு.

**அடக்கம்**

அக்கா பார்த்திருக்கத்
தம்பி குழி வெட்டி
அம்மா அழுது நிற்க
அப்பாவை அடக்கம் செய்தான்!

சீ. தங்கவடிவேல், மட்டக்களப்பு.

**தமிழன் நிலை**

காடு வெட்டி
நாடு செய்வீர்......
இன்னோர் யுத்தம்
வரின்
எங்கு செல்வீர்?

ந.சதீஸ்வரன், கண்டி.

## கவிதைப் போட்டி இல-137




### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 27.01.1996.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 137. தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

**யாருக்காக....?**

கொத்தி பயிரும் இட்டிடலாம்
"கொறித்திட" நாம் இருப்போமா?...

ரி. ராஜன், காரைதீவு.

**அழைக்கின்றாள்**

பதுங்குகுழி வேண்டாம் தம்பி!
வா பல்லாங்குழி விளையாட.

எம். சௌந்திரராஜன், ராஜகிரிய.

**என்ன பயன்?**

தேசமே செத்தபின்பு,
தோண்டித்தான் என்ன பயன்?

நஸீபியா பஹர்தீன், புத்தளம்.

**நம்பிக்கை**

புதையுண்ட எதிர்காலம்
இருளாகி யிருக்குமா?
வதைபட்ட வெண்புறா
சிதையா திருக்குமா?
மண்ணுக்குள் புதைந்த
மனிதம்தான் கிடைக்குமா?

எப்.லெனாட்குமார்,
ஹப்புத்தளையூர்.

**புதிய ஆண்டின் தீர்மானம்**

கடந்த ஆண்டு
இழப்புக்களை
கணக்குப்பார்க்க
எலும்புக்கூடு
சேகரிப்பில்
இறங்கிவிட்டாயோ?

செல்வி. சுப்ரமணியம் வாணீஸ்வரி,
-அப்பர் கலஹா.

**யார் வருவாங்க?**

ஆஸ்த்தி யிருக்கையில்
அப்பா சாவுக்கு
ஆயிரம் பேர் வந்தாங்க!
அது தொலைந்ததால்
அம்மா சாவுக்கு
அயலார் மட்டும் வந்தாங்க!
ஆஸ்த்தியு மயலாருமின்றில்லை
அண்ணன் சாவுக்கு
யாருமில்லை!

பீ.எம்.எம்.அன்ஸார். பு-தெ-வெலிகம.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுகிறவர்கள் இவர்கள்:**

*ப.நந்தன், டெமேரியாகுறாப்-பசறை.
*சு.கிர்திஸி தியாகராஜா, மட்டக்களப்பு.
*ஆரிகா ஆதம்பாவா, கல்முனை-06.
*எஸ்.ரி.ரமீஸ், அக்கரைப்பற்று-06
*என்.எம்.அஜர்தீன், நிக்கவெவ.
*வ.பிர்தௌஸ், கிண்ணியா-03.
*ஏ.லத்தீப் ஷிப்லி, புத்தளம்.
*ஜஹானி நாஸீர், நாத்தாண்டியா.
*நுஸ்ரத் ஜஹான் ஹனீபா, மாத்தளை.
*ஹுஸைன் எவனிங், மாத்தளை.
*வி.காந்தன், கல்முனை.
*ச.திருச்செல்வம், மட்டக்களப்பு.
*நஸ்ராஜ் சம்சுதீன்.
*முகமது வாபீர், புல்மோட்டை-01
*பஹ்மியாசரீப், காத்தான்குடி-05.
*வடிவேல் சுரேஸ் கிருஷ்ணா, மட்டக்களப்பு.
*கி.பவானி, மாத்தளை.
*மங்களா வாமதேவன்.
தங்களா வாமதேவன், மட்டக்களப்பு.
*எஸ்.எம்.சுபியான், நிகவெவ.
*எம்.எஸ்.ஷாஹீன் ரிஷா, எருக்கலம்பிட்டி.
*வரதன் விஜயகுமார், பொகவந்தலாவ.
*சிவாஜினி சதாசிவம், மாத்தளை.
*என்.எம்.தாஹா, கிண்ணியா-01
*வீ.ஸ்ரீதரன், மூதூர்.
*ஜெயா முருகுப்பிள்ளை, குருக்கள்மடம்.
*எம்.எஸ்.சதுல் அஸ்மியா, கந்தளாய்-07
*கே.புவனலோஜினி, இறக்குவானை.
*சித்ரா முருகையா, அவிசாவளை.
*எம்.ரி.எம். முபஸ்ஸல், கஹட்டோவிட்ட.
*பர்ஸினா முஹமட், 10ம் யூனிட்.




# வாசக(ர்) சாலை

**முன்கூட்டியே தந்தாய்**

யாழ்ப்பாணத்தில் 'ரிவிரெச' நடவடிக்கையின் போது நடந்த இரு தரப்பு செய்திகளையும் துணிந்து தந்தது முரசு மட்டும்தான். மக்களை வெளியேற்றவில்லை புலிகள் என்று சொன்ன பி.பி.ஸி. வானொலிகூட கடந்தவாரம் தனது தவறை ஒப்புக்கொண்டது. பி.பி.ஸியில் கடந்தவாரம் ஒலி பரப்பான ஒரு அறிக்கை யாழில் நடந்த சம்பவங்களை காலம் கடந்து தந்தது. அவற்றையெல்லம் முரசு முன்கூட்டியே தந்துவிட்டதை பாராட்டியேயாக வேண்டும்.

எம்.பவானி சங்கர், கொழும்பு-11

விடுதலைப் புலிகள் இல்லையென்றால் தமிழர்களின் சுயகௌரவம் என்னாகும் என்ற கேள்வி எனக்குமுண்டு. அதற்காக அவர்கள் விடும் தவறுகளை சுட்டிக்காட்டக்கூடாது என்று அவர்கள் நினைப்பது சரியாகாது. செய்தியாளர்களும் அவற்றை மக்களுக்கு மறைக்கக்கூடாது. முரசின் பாணி சரியானதான்; தொடருங்கள்.

கு.இந்திரகுமாரன், கோவில்குளம், வவுனியா.

இராஜதந்திரியார் மேலெழுந்தவாரியாக எல்.ரி.ரி.ஈ.யை தொட்டுவிட்டு, அரச தரப்பாரை மட்டும் ஒரு பிடிபிடிக்கிறார். வழக்கமான தமிழ் விமர்சகர்களின் பாணி தொற்றிக் கொண்டதோ என்று ஐயம் வருகிறது.

வ.மணிமேகலை, திருக்கோணமலை.

**சரிதான்**

புலிகள் மக்களை வெளியேற்றியது நியாயம்தான். இல்லாது போனால் உயிரிழப்புக்கள் எண்ணிலடங் காதவையாக இருந்திருக்கும். வெளியேற்றுவதில் நடைபெற்ற அவசரக் கோலங்கள் தவிர்க்கப்பட்டிருக்லாம்.

வி.பிரகாஷ், கொழும்பு-6.

இராஜதந்திரியாரும், நாரதரும் இரு வேறு கோணங்களில் அலசுவதால் நாட்டு நடப்பின் இரு பக்கத்தையும் அறியமுடிகிறது.

என்.எம்.நாஸீர், மருதானை.

கார்லோஸ் தொடர் கார்லோஸ்போலவே ஒரு கலக்குத்தான். உலக அரங்கில் பின்னப்பட்ட சதிவலைகள் கார்லோஸ் தொடர்மூலப் நம் கண்களுக்கும் தெரிகிறது.

சி.மாலினி, பேராதனை வளாகம்.

அரசியலிலும், ஆட்சிகளிலும் எத்தனை எத்தனை சூழ்ச்சிகள்! பாவம் கார்லோஸ். அவன் ஒரு அம்புதானே! மனித வெடிகுண்டு சூப்பர்.

ஜெ.ஜலால்டீன், பாணந்துறை.

'முரசு ஒருதரம் சொன்னால் அது நூறுதரம் சொன்னமாதிரி.' அரசியல் கணிப்புக்களைத்தான் சொல்லுகிறேன்.

சி.தயாளன், வவுனியா.

இராஜகுமாரனின் இராமாயணம் இலக்கியக் கடலில் நம் இதயத்தை நனைக்கிறது.

இது வெறும் புகழ்ச்சியில்லை.

திருமதி இராஜமாணிக்கம், மாத்தளை.

20ம் பக்கத்தில் வண்ணத்தோடு அரிய தகவல்கள்தரும் 'லியோடெ'க்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

அன்பின் இராஜதந்திரியாரே!

"வேலியே பயிரை மேயும்" விந்தை அன்று தொட்டு இன்றுவரை தொடர்வரை சிறப்பாக கூறினீர். நன்றி.

சுபா, கண்டி.

அன்பின் முரசே, இராமாயணப் போட்டியில் ஒரு முறை பரிசு பெற்றவருக்கு மறுமுறை பரிசு வழங்காது மற்றவர்களுக்கு வழங்கினால் பலருக்கும் வாய்ப்பளிக்கலாம் தானே?

பாதிமா றிஹானா பாருக் , உலப்பனை எஸ்டேட்.

வாரம் எழு நாட்களிலும் நடைபெறும் செய்திகளை எங்களுக்கு ஒரே நாளில் அறியத் தருகிறாய். முரசுக்கு எமது நன்றிகள்.

சரவணகுமார் ஜெய்சங்கர், ரொஸ்ஸல்ல.

நாமும் நாடுவது...!

அனைவரையும் அசத்தும் அறுவையரங்கம் வரவேற்கத்தக்கது. அச்சொட்டான அரசியலை அறிய அனைவரும் அண்டவேண்டியது முரசையே! எனவே நாமும் நாடுவது தினமுரசையே!

எஸ்.பத்மா, உமாஜினி, நவ்சாத், கொழும்பு-10.



படிப்பகம்

www.padippakam.com

# தலைநகரில் தாக்குதல் நடத்தும் திட்டம்!

# எதிரணிக்கும் புலிகள் குறி வைக்கலாம்?

## தரைப் பாதையை திறக்க படைத்தரப்பு முஸ்தீபு!

**'அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கைக்கு அரசு தயாராகிவருகிறது. பெருந்தொகையான ஆயுத தளபாடங்கள் கொழும்பை வந்தடைந்துள்ளன. மேலும் கொள்வனவு செய்வதற்கான பேரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன' என்று புலிகள் இயக்க சர்வதேச செயலகம் தெரிவித்துள்ளது. இதேவேளை தலைநகரில் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த புலிகள் திட்டமிட்டமையும் தெரியவந்துள்ளது. படகொன்றில் கொண்டுவரப்பட்ட பெருந்தொகையான வெடிமருந்துகள் உடப்பு கடற்கரையில் கைப்பற்றப்பட்டதையடுத்து புலிகளது தாக்குதல் திட்டம் வெளியாகியுள்ளது.**

(நமது நிருபர்)

### இரு முனையில்

கிழக்கு மாகாணத்திலும், வடக்கிலும் பாரிய இராணுவ நடவடிக்கையை ஒரே நேரத்தில் மேற்கொள்ளும் திட்டம் படைத்தரப்பிடம் இருப்பதாக தெரியவருகிறது.

வடபகுதியில் தரைப்போக்குவரத்தை திறப்பதற்கு வழிசெய்யும் வகையில் அங்கு அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக நம்பகமாகத் தெரிய வந்துள்ளது.

அதேவேளை கிழக்கு மாகாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பாரிய இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கான ஆயத்தங்களும் செய்யப்பட்டுள்ளன.

கிழக்கை புலிகளிடம் அரசு பறிகொடுத்துவிட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டி வருகிறது.

எதிர்வரும் தேர்தல்களில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையை வைத்தே பொதுஜன முன்னணியின் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படும்.

அந்த நேரத்தில் கிழக்கில் புலிகள் பாரிய தாக்குதல்களை நடத்தினால் அரசாங்கத்திற்கு சங்கடங்கள் ஏற்படலாம். அதனால் கிழக்கில் புலிகளை பலமிழக்கச் செய்யும் இராணுவ நடவடிக்கைகள் முதன்மையாகியுள்ளன.

### தேர்தலுக்கு முன்னர்

எதிர்வரும் தேர்தல்களுக்கு முன்னர், கிழக்கில் படைத்தரப்பின் கைகளை மேலோங்கச் செய்வது, யாழ்ப்பாணத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் கணிசமான அளவு மக்களை உள்ளடக்கக் கூடிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகள் இரண்டும் செய்யப்பட்டாக வேண்டும்.

அப்படியானால்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் குற்றச்சாட்டுகள், குறைகூறல்களில் இருந்து அரசாங்கம் தப்பிக்கொள்ள முடியும். தேர்தலிலும் கணிசமான வாக்குகளை கவர முடியும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் இவ்வாறு திட்டமிடும்போது புலிகள் அதனை முறியடிக்கும் உபாயங்களை யோசித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தாக்குதல்களை நடத்துவதைவிட, வெளியேதான் அவர்களது கவனம் திரும்பியுள்ளது.

குறிப்பாக தலைநகரில் பாரிய தாக்குதல் ஒன்றுக்காக அவர்கள் திட்டமிட்டு வருவதாக நம்பப்படுகிறது.

சமீபத்தில் புத்தளம்-உடப்பு பகுதியில் பெருந்தொகையான வெடிமருந்துகள் பொலிசாரிடம் சிக்கியிருந்தன.

தலைநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக இருக்கின்றன. அதனால் தலைநகருக்கு வெளியே புலிகளது இரகசிய விநியோக தளம் இயங்கிவருவதாக நம்பப்படுகிறது.

கடல்வழியாக வெடிமருந்துகள் கொண்டுவரப்பட்டு இரகசிய தளத்தில் வைக்கப்பட்டிருக்கும். தேவைப்படும் போது குறிப்பிட்டளவு வெடிமருந்துகள் தலைநகருக்குள் உள்ளவர்களுக்கு அனுப்பப்படும்.

வவுனியா வழியாக லொறிகள் வருவது தடைப்பட்டுள்ளதால் கடல் வழிப்பாதை மூலமாகவே விநியோகம் செய்யும் வாய்ப்பும் அதிகமுள்ளது என்று புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது கைப்பற்றப்பட்டுள்ளவை ஒரு தொகுதி வெடி மருந்துகள் மட்டுமே. இதற்கு முன்னரும் முல்லைத்தீவில் இருந்து வெடிமருந்துகள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

### புலிகளின் திட்டம்

யாழ்ப்பாண வெற்றியை வைத்து எதிர்வரும் தேர்தல்களில் அரசாங்கம் பாரிய வெற்றிகளைப் பெறுவதை புலிகள் தடுக்கவே முற்படுவர் என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

தேர்தல்களில் தொடர் வெற்றிகளைப் பெறுவதுமூலம் அரசாங்கம் தனது அரசியல் செல்வாக்கை உயர்த்திக் கொள்வதை புலிகள் விரும்பமாட்டார்கள். அவ்வாறு ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் யுத்தத்திலும் அரசின் கை மேலோங்கும் என்பதும் புலிகளுக்குள்ள நெருக்கடியாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் காமினி திசநாயக்கா புலிகளால் கொல்லப்பட்டார். அதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அனுதாப வாக்குகள் குவியும்; சந்திரிக்காவுக்கு அசுரப் பெரும்பான்மை கிடைக்காமல் போகலாம்; தெற்கில் ஒரு அரசியல் நெருக்கடி தோன்றும் என்று புலிகள் எதிர்பார்த்தனர், என்பதையும் அந்த விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதனால் தலைநகரில் எதிரணித் தலைவர்களுக்கும் ஆபத்து இருக்கிறது. அவர்களையும் புலிகள் குறிவைக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

---

## பிரபா விஜயம்

இடம்பெயர்ந்து வன்னியில் உள்ள மக்களைச் சந்தித்து குறைகளை கேட்டறிந்தார் பிரபாகரன்

இடம்பெயர்ந்த மக்களுக்குள் அதிருப்திகள் ஏற்பட்டுவருவதையடுத்தே பிரபாகரன் திடீர் விஜயம் செய்து இடம்பெயர்ந்த மக்களை சந்தித்தார்.

பஜுரோக்கள் மற்றும் வேன்கள், டபுள்கப் வாகனங்கள் மத்தியில் பிரபாகரன் வந்திறங்கியபோது பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது. பிரபாகரன் சென்ற பகுதியைச் சுற்றி கரும்புலிகள் பாதுகாப்பு வளையமாக நின்றனர் என்றும் கூறப்படுகிறது.

முன்கூட்டியே நோட்டம் பார்க்கப்பட்டு பாதுகாப்பான பகுதி என்று தெரிவு செய்யப்பட்ட இடங்களுக்கு மட்டுமே பிரபாரன் சென்றிருந்தார்.

## 95ல் புலிகள் தாக்கியவை:

1995 இல் தமது இராணுவ நடவடிக்கையால் முப்படைகளுக்கு ஏற்பட்ட இழப்புக் குறித்து புலிகள் ஒரு பட்டியல் வெளியிட்டுள்ளனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு: அவ்ரோ விமானம்-02, புக்காரா-01, வை 8 ரக விமானம்-01, பெல் ரக ஹெலி-02, யுத்தக் கப்பல்கள்-02, கட்டளைக் கப்பல்-01, டோறா-05, சவட்டன்-01, டாங்கிகள்-08, பவள் கவச வாகனங்கள்-12, ஏனைய இராணுவ வாகனங்கள்-06. இவை யாவும் முற்றாக செயலிழக்கச் செய்யப்பட்டவை என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

---

## ஊர்காவல் படையால் ஊருக்கு நாசம்

(சஞ்ஜீவன்)

திருக்கோணமலை லிங்கநகர் பகுதியில் உள்ள தண்ணீர்க் குழாய்கள் ஊர்காவல் படையினரால் அடித்து நொருக்கப்பட்டன.

திருமலையில் லிங்கநகரில் தமிழ் குடும்பங்கள் மீளக்குடியேறி உள்ளனர். அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்காக ஊர்காவல் படையினர் மிரட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 13.1.96 அன்று ஆயுதம் தாங்கிய ஊர்காவல் படையினர் லிங்கநகருக்குள் புகுந்து, அங்கிருந்த தண்ணீர் குழாய்களை அடித்து நொருக்கினார்கள்.

இது தொடர்பாக லிங்கநகர் பகுதி மக்கள் பொலிசாரிடம் முறைப்பாடு செய்தனர். சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்படுவதாகவும், மேலும் இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்வதாகவும் திருமலை பொலிஸ் அதிகாரி உறுதியளித்துள்ளார்.

லிங்கநகரில் மீளக்குடியேறிய மக்களுக்கான குடிநீர் விநியோகம் ஈ.பி.டி.பி. யினரால் சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. சுமார் 250 தமிழ் குடும்பங்கள் லிங்கநகரில் மீளக்குடியேறியுள்ளனர்.

---

## படைத்தரப்போடு தமிழ் குழுக்கள்

கிழக்கில் மேற்கொள்ளப்படவுள்ள இராணுவ நடவடிக்கைக்கு உதவ ரெலோவும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கமும் முன்வந்துள்ளன.

ரெலோ இயக்கத்தினர் ஏற்கெனவே மட்டக்களப்பில் படையினருடன் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். திருமலையில் வெள்ளைவேன் நடவடிக்கைக்கும் ரெலோ ஒத்துழைத்து வருகிறது.

இதுவரை படைத்தரப்பினரிடம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கம் இணைந்து செயற்படவில்லை. தற்போது கிழக்குமாகாண நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கவும், படையினருடன் தமது உறுப்பினர்களை அனுப்பிவைக்கவும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இசைந்துள்ளது.

படையினருடன் இணைந்து செயற்படும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களுக்கு ஊர்காவல் படையினருக்கு வழங்கப்படும் ஊதியம் வழங்கப்படும் என்று தெரிகிறது.

## ரஜினி ஆதரவுடன் தனித்துப் போட்டி

இந்தியப் பிரதமர் நரசிம்மராவை தமிழக காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான மூப்பனார் கடந்தவாரம் சந்தித்து பேச்சு நடத்தினார்.

தமிழ்நாட்டில் ஜெயலலிதாவுடன் காங்கிரஸ் கூட்டுச்சேரக்கூடாது. ரஜினிகாந்த் ஆதரவுடன் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட வேண்டும். என்று மூப்பனார் வலியுறுத்தி உள்ளார்.

எதிர்வரும் தமிழக சட்டமன்றத் தேர்தல்களில் நான்கு முனைப் போட்டி ஏற்பட உள்ளது.

தி.மு.க. தலைமையில் உள்ள கூட்டணி காங்கிரஸ் கூட்டணி, வாழப்பாடி ராமமூர்த்தி தலைமையிலான கட்சிகளின் கூட்டணி, அ.தி.மு.க. ஆகிய நான்கு அணிகள் மோதலில் குதிக்கும் நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை திருச்சியில் ஜெயலலிதா கட்-அவுட்டுகளுக்கு போட்டியாக ரஜினிகாந்த் கட்-அவுட்டுகள் வைக்கப்பட்டன. அதனால் நகரில் பதட்டம் ஏற்பட்டது.

இறுதியில் பொலிசார் தலையிட்டு ஜெயலலிதா, ரஜினி கட்-அவுட்டுக்களை அகற்றினார்கள்.

---

## இடம்பெயர்வுக்கு புலிகள் கட்டுப்பாடு

### இலவசப் படகுச் சேவையும் இரத்து

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறுமாறு புலிகள் இயக்கத்தினர் முன்பு கோரிக்கை விடுத்திருந்தார்கள்.

தற்போது அந்த முயற்சியை புலிகள் கைவிட்டுள்ளனர்.

தற்போது வன்னியிலும், கிளிநொச்சியிலும் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் பல்வேறு பிரச்சனைகள் தோன்ற ஆரம்பித்துள்ளன.

அகதி முகாம்களிலும் பல்வேறு பிரச்சனைகள் தோன்றிவருகின்றன.

பெரும் தொகையானவர்கள் வவுனியா வருவதற்கு அனுமதி கேட்டு புலிகள் இயக்கத்தின் பாஸ் வழங்கும் அலுவலகங்களுக்கு செல்கின்றனர். பாஸ் வழங்க மறுத்தால் அதிருப்திகள் ஏற்படுகின்றன.

இவ்வாறான நிலையில் மேலும் பெருந்தொகையான மக்கள் வன்னிப்பகுதிக்கு வந்தால் பிரச்சனைகள் பெரிதாகிவிடும். கட்டுப்படுத்துவதும் கஷ்டமாகிவிடும் என்று புலிகள் நினைக்கிறார்கள்.

தென்மராட்சியிலும் வடமராட்சியிலும் இடம் பெயர்ந்தோர் உட்பட கிட்டத்தட்ட நாலரை இலட்சம் மக்கள் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் வன்னிப்பகுதிக்கும், கிளிநொச்சிக்கும் இடம் பெயர்ந்தால் நிலமை மோசமாகிவிடும் என்று கருதப்படுகிறது.

இதனையடுத்து தற்போது தென்மராட்சியிலிருந்து கிளாலியூடாக கிளிநொச்சிக்கு வருவோர் தொகையை புலிகள் இயக்கத்தினரே கட்டுப்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

கிளாலி படகுச் சேவையை இலவசமாக நடத்திவந்த புலிகள் இயக்கத்தினர் தற்போது பணம் வசூலிக்கவும் ஆரம்பித்துள்ளனர்.

## குடியிருப்புக்கள் திறப்பு விழா

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னியிலும், கிளிநொச்சியிலும் தங்கியுள்ள மக்களுக்கான குடியிருப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் இரண்டு குடியிருப்பு திட்டங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன. அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் இம்மாதம் இருபத்தியொன்பதாம் திகதிவரை பதினேழு குடியிருப்புத் திட்டங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இதேவேளையில் யாழ்ப்பாணம் வடமராட்சியில் பருத்தித்துறை கோட்ட ஆசிரியர்கள் என்ற பெயரில் துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. "ஆசிரியர்களும் ஆயுதம் ஏந்துவதற்கு சிறீலங்கா அரசினால் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்" என்று அந்தப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகள் மூடப்படலாம்

வடக்கிலும், கிழக்கிலும் பாரிய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக செய்திகள் கிடைத்துள்ளன.

இராணுவ நடவடிக்கைகளின் விளைவுகளைப் பொறுத்து பாடசாலைகளுக்கு மீண்டும் ஒரு குறுகிய கால விடுமுறை விடப்படலாம் என்று கூறப்படுகிறது.

---

## 14 ஆயிரம் தமிழ் அகதிகள் நிலை என்ன?

யாழ்ப்பாணத்தில் நடந்துவரும் போர் நடவடிக்கை காரணமாக தமிழ்நாட்டில் உள்ள 14 ஆயிரம் இலங்கை தமிழர்களின் நிலை நிச்சயமற்றதாக உள்ளது என தேசிய மனித உரிமை கமிஷன் கூறியுள்ளது.

இதுகுறித்து மேலும் தேசிய மனித உரிமை கமிஷன் கூறியிருப்பதாவது:

இலங்கையில் இருந்து வெளியேறிய தமிழர்கள் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தமிழ்நாட்டில் அகதிகளாக உள்ளனர். அகதிகள் என்ற பெயரில் இவர்கள் பல்வேறு முகாம்களில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்ட முகாம்களில் சிறை வைக்கப்பட்டுள்ள இவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தங்கள் வீடுகளுக்கு செல்ல விரும்புகின்றனர். இலங்கையின் வேறு பகுதிகளுக்கு செல்வதை இவர்கள் விரும்பவில்லை.

உடனே இவர்கள் யாழ்ப்பாணம் செல்ல முடியாத நிலை உள்ளது. காரணம் யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள நிலைமையில் இவர்கள் யாழ்ப்பாணத்திற்கு செல்வதை டில்லியும் விரும்பவில்லை. இலங்கையும் விரும்பவில்லை. இவர்கள் யாழ்ப்பாணம் திரும்புவதற்கு இது சரியான தருணம் இல்லை என இரண்டு நாட்டு அரசுகளும் எண்ணுகின்றன.

மேலும் தமிழ்நாட்டில் பல்வேறு முகாம்களில் தங்கியுள்ள அகதிகளில் புலிகளும் இருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். யாழ்ப்பாணத்துக்கு இவர்களை திருப்பி அனுப்ப இந்தியா விரும்பாததற்கு காரணம் இலங்கை சென்று மீண்டும் இந்தியாவுக்கு வந்து கலவரத்தை உண்டு பண்ணலாம் என இந்தியா நினைக்கிறது.

தமிழ்நாட்டில் மிகவும் பாதுகாக்கப்பட்ட முகாம்களில் 30 ஆயிரம் இலங்கை தமிழ் அகதிகள் இருந்தனர். இவர்களில் 16 ஆயிரம் பேர் கடந்த ஆண்டு கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். எஞ்சியுள்ள 14 ஆயிரம் பேர் யாழ்ப்பாணம் செல்ல விரும்புகின்றனர்.

தமிழ்நாட்டில் இருக்கும் இலங்கை தமிழர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்பும்படி இந்திய அரசை தேசிய மனித உரிமைக்கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. ஆனால் எந்த இடத்துக்கு செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்களோ அந்த இடத்துக்குத்தான் அவர்களை அனுப்பி வைக்க வேண்டும். அவர்கள் விருப்பத்துக்கு மாறான இடத்துக்கு அனுப்பக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த அகதிகள் அனைவரும் யாழ்ப்பாணத்துக்கு மட்டுமே திரும்புவோம் என்று கூறுவதால் இவர்களை திருப்பி அனுப்புவதில் சிரமமும், காலதாமதமும் ஏற்பட்டுள்ளது என்று இந்த அமைப்பின் தலைவர் நீதிபதி மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

நீதிபதி மிஸ்ரா தலைமையிலான தேசிய மனித உரிமைக் குழு உறுப்பினர்கள் இந்த முகாம்களுக்கு சென்று அவர்களிடம் உள்ள குறைகளைக் கேட்டறிந்தனர்.

---

## திறக்கப்பட்ட வீதிகள்

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு நகருக்கு செல்வதற்கு தடை செய்யப்பட்டிருந்த சகல பிரதான வீதிகளும் கடந்த வாரம் முதல் பொதுப் போக்குவரத்திற்காகத் திறந்துவிடப்பட்டுள்ளன. இதே போல் ஏறாவூர் பொலிஸ் நிலையப் பாதுகாப்பை ஒட்டி தடை செய்யப்பட்டிருந்த ஏறாவூர்-கொழும்பு பிரதான வீதியும் கடந்தவாரம் முதல் பொதுப் போக்குவத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வீதி அடிக்கடி மூடப்படுவதும், திறக்கப்படுவதுமாக இருப்பதாலும் வீதி மூடப்படும்போது புதிய வீதியால் செல்லும் அறிவிப்புப் பலகைகள் இல்லாததாலும் பயணிகள் எங்கே செல்வது என்று தெரியாமல் திணறுகிறார்கள்.

மட்டக்களப்பு வீதிப் போக்குவரத்துக்கள் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு அடிக்கடி தடை செய்யப்படுகின்றன. இதனால் பயணிகள் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

## 50 லொறிகளில் உணவுப் பொருட்கள்

### 20ம் திகதி முதல் செல்ல ஏற்பாடு

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைக்கு பின்னர் யாழ் குடாநாட்டில் இருந்து வன்னி, கிளிநொச்சி பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ள மக்களது தொகை 3 இலட்சத்து 38 ஆயிரத்தி 888 பேர். (17.1.96வரை)

கிளிநொச்சியில் தங்கியுள்ளவர்கள், 1 இலட்சத்து 24 ஆயிரத்தி 876 பேர்.

மன்னாரில் தங்கியுள்ளவர்கள்; 21 ஆயிரத்தி 416 பேர்.

முல்லைத்தீவில் 99 ஆயிரத்தி 744 பேர்.

வவுனியாவில் படையினரது கட்டுப்பாட்டு பகுதியில் 3 ஆயிரத்து 678 பேர். புலிகளது கட்டுப்பாட்டு பகுதியில் 29 ஆயிரத்தி 178 பேர்.

அகதி முகாம்களின் எண்ணிக்கை: கிளிநொச்சியில் 64, முல்லைத்தீவில் 35, மன்னாரில் 14, வவுனியாவில் 07.

ஜனவரி முதலாம் திகதி முதல் 14ம் திகதி வரை வவுனியாவில் இருந்து 450 லொறிகளில் உணவுப் பொருட்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. கிளிநொச்சிக்கு 232 லொறிகள், முல்லைத்தீவுக்கு 141 லொறிகள், மன்னாருக்கு 34 லொறிகள், வவுனியாவுக்கு 43 லொறிகள்.

தினமும் 30 முதல் 35 லொறிகள் வட பகுதிக்கு உணவுப் பொருட்களுடன் செல்லுகின்றன. அவற்றின் எண்ணிக்கையை தினம் ஒன்றுக்கு 50 ஆக அதிகரிக்க வேண்டும் என்ற ஈ.பி.டி.பி., புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எதிர்வரும் 20ம் திகதி முதல் தினமும் 50 உணவு லொறிகள் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



படிப்பகம்

# காதோடு காது உதார்ர்ர்


**எம்.எம்.சி. தாக்கப்பட்டார்:** பாரதி கிராமத்தில் வசித்துவரும்- மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் வே.இராசமாணிக்கம் பாது காப்புப்படையினரால் தாக்கப்பட்டார். தான் எம்.எம்.சி. என்று சொன்னதுமே- அடி, உதை அதிகமாக இருந்ததாக, எம்.எம்.சி. அழுது கொண்டு சொன்னார். யாரிடம் போய் முறையிட இந்த அலங்கோலத்தை- என அங்கலாய்ப்பதைவிட வேறு என்ன செய்துவிடமுடியுமென கேட்கின்றனர்- ஊறணிக்கிராம மக்கள்.

**கலாநிதி சந்தானம்:** ஊவா மலையகம் - நமக்களித்த சிறந்த கல்விமான் கலாநிதி எஸ். சந்தானம்- முன்னாள் கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர். புலிகள் இவரை- வந்தாறுமூலை வளாகத்திலிருந்து மதிலுக்கு மேலாக தூக்கி கடத்தியபோது, தவறி ஒரு தடவை விழுந்து விட்டாரம். "விழுந்தால் பரவாயில்லை. 'வாருங்கள் போவோம்" என்று கூறி அழைத்துச் சென்றனராம். எவருக்குமே தெரியக் கூடாது-மூச்... "நாங்கள் சென்று ஒரு மணித்தியாலத்திற்குப் பின்னர்தான் சங்கதி வெளியாக வேண்டும்," என்றும் உத்தரவாம் விடுவிக்கப் போன இரு பெரும் மதகுருமாரும்- மண்முனைக்குப்போய் வெறுங்கையோடு திருப்பினார்கள். பின்னர் என்ன நினைத்தார்களோ விடுவித்து அனுப்பிவிட்டார்கள்.

**செபம் பலிக்குமா?:** வடக்கு கிழக்கு மாகாண சபையில் கல்விக்குப் பெரியவர் ஒருவர் ஓய்வுபெறும் காலம் நெருங்கிவிட்டதாம். ஆதலால் - மாவட்டத்தில் கல்விக்குப் பெரியவர் ஒருவர் இப்பதவியைக் கௌவிக் கொள்ள வேலூர் கொலனிக்குள் வசிக்கும் அமைச்சர் ஒருவர் வெஸ்லியில் படிப்பித்த ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவரிடம் போய் வருகிறாராம். பொறுத்திருந்து பார்ப்போம் - ஓய்வுபெற்ற இரத்தினத்தின் செபம் பலிக்குமா என்று.

**காணிக்குக் கிராக்கி:** யாழ் குடா நாட்டில் இடம் பெயர்ந்த தமிழர்கள், தமிழர் பிரதேசமான மட்டக்களப்புக்கு வராமலில்லை. தப்பித் தடவி வந்தேவிட்டார்கள். அதனால்- காணிகளுக்கும் விலை அதிகரித்துள்ளதாம். "யாழ்ப்பாணத்து மக்கள் காசிக்காரர் அல்லே" என்று மட்டக்களப்பார் முணுமுணுக்கிறார்கள்.

## காட்டூண் மூலை




# பணிப்பெண்களின் பொருட்கள் அபகரிப்பு

மத்திய கிழக்கில் பணி புரிந்து விட்டு நாடுதிரும்பி தமது வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்த ஏறாவூர், காத்தான்குடி, கல்முனை ஆகிய ஊர்களைச் சேர்ந்த மூன்று பணிப் பெண்களினதும் பொருட்கள் மட்டக்களப்பு- சந்திவெளியில் வைத்து ஏறாவூர் நிருபர் 01.01.96 அன்று ஆயுதம் தாங்கிய நபர்களால் அபகரிக் கப்பட்டுள்ளன. புலிகள்தான் தங்கள் பொருட்களை பறித்துச் சென்றார்கள் என்று பொருட்களைப் பறி கொடுத்தவர்கள் கூறுகிறார்கள்.

ரேடியோ, ரேப் ரெக்கோடர், தங்க நகைகள், கடிகாரங்கள், உடுதுணிகள், மற்றும் பல நானாவிதப் பொருட்கள் பறித்துச் செல்லப்பட்டவற்றில் அடங்கியிருந்தன என்று தெரியவருகிறது.

தாங்கள் விமான நிலையத்திலிருந்து வாடகைக்குப்-பெற்ற (4500/-ரூபா) வேன்காரர் ஓட்டமாவடிக்கு அப்பால் செல்ல மறுத்ததால் தாங்கள் ஓட்டமாவடியிலிருந்து மற்றொரு வேனை ரூபா 3750/- க்கு வாடகைக்கு பெற்று வந்து கொண்டிருந்த போதே தமக்கு இக்கதி நேர்ந்ததாகவும் இந்த அப்பாவி ஏழைப்பெண்கள் தமது துர்ப்பாக்கிய நிலையை கண்ணீருடன் கூறினர்.

சந்திவெளியில் வசிக்கும் தமிழ் மக்களும் இச்சம்பவத்தையிட்டு கவலை தெரிவித்தனர். இந்த ஏழைப்பெண்களுக்கு நடந்த சம்பவத்தையும், இன ஐக்கியத்தைச் சீர் குலைக்கும் எந்த நடவடிக்கையையும் ஒற்றுமையை வலியுறுத்தும் தமிழ், முஸ்லிம் மக்கள் வன்மையாகக் கண்டிக்கின்றார்கள்.

ஓட்டமாவடியிலிருந்து போக்குவரத்து பஸ்ஸில் செல்வதாயின் ஏறாவூருக்கு 5.50 சதம், காத்தான்குடிக்கு 9.25 சதம், கல்முனைக்கு 17.50 சதமும் பஸ் கட்டணம் செலவாகும். இந்தச் செலவுக்கே வாடகை வேன்காரர் 3750/- பெற்றிருக்கின்றார்.

# துயரமும் தொல்லையும் - சோதனைச் சாவடிகளில்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு நகருக்குள் பிரவேசிக்கும் பிரதான பாலதில் கடும் சோதனைக்குட்பட்ட பின்னரே நகருக்குள் செல்ல முடியும். எனினும் அச்சாவடிகளைக் கடக்கும் பெண்களை அங்குள்ள பெண் இராணுவ உத்தியோகத்தர்கள் படாத பாடுபடுத்துவதாக சோதனைக்குள்ளாகும் பெண்கள் சலித்துக் கொள்கிறார்கள்.

இளம் பெண்களுக்கு மட்டுமல்லை வயோதிபப் பாட்டிகளுக்குக் கூட கடும் தொல்லை தருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இளம் பெண்களின் உடைகளைக் களையுமாறு கேட்டு பின்னர் கைகளில், கால்க்ளில் தொடைகளில் கிள்ளல் இடம்பெறுவதாகவும் துயரமாக பேசப்படுகிறது. சிலர் அழுது கொண்டு வந்த சந்தர்ப்பமும் உண்டு. ஏச்சுப் பேச்சுக்கள், அதட்டல், முறைத்தல் தேவையற்ற கேள்விகளைக் கேட்டல் என்பனவும் இடம்பெறுவதாக அறிய முடிகிறது. இத்தகைய செயல்களில் பெண் இராணுவ உத்தியோகத்தர்கள் ஈடுபடுவதால் நீண்ட வரிசையில் அதிகளவு நேரம் காத்திருக்க வேண்டியும், அலுவல்களுக்குச் செல்வோர் பிந்திச் செல்ல வேண்டியும் ஏற்படுகிறது. இதுபோன்ற நெருக்கடி நிலையை செங்கலடியை அடுத்துள்ள கொம்மாதுறை இராணுவமுகாமிலும் பெண்களுக்கு ஏற்படுகிறது.

# கொடுப்பனவுகள் ஏன் தாமதம்?

(காரைதீவு நிருபர்)

கல்முனை கல்விமாவட்டத்தில் 219 ஆசிரியர்களுக்கான வெற்றிடம் நிலவுகிறது. கடந்த ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 27 ஆசிரியர்கள் இங்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்று கல்விப்பணிப்பாளர் ஐ.எம்.இஸ்ஸதீன் தெரிவித்தார்.

இதனிடையே வட-கிழக்கில் 44 உதவி வைத்திய அதிகாரிகள் இதேதினத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர். 19 பேர் திருகோணமலையிலும், 18 பேர் அம்பாறையிலும், 4 பேர் மட்டக்களப்பிலும், 3பேர் வவுனியாவிலும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்வி மற்றும் சுகாதார திணைக்களங்களில் பெருந்தொகையானோர் கடமையாற்றுவதனாலோ என்னவோ அரசினால் கூறப்பட்ட ஆபத்துக்கால கொடுப்பனவு வழங்குவதில் பலத்த தாமதம் ஏற்பட்டது. கல்முனைக் கல்விப்பிரிவினர்ஆக நவம்பர் மாதத்திற்கு மட்டும் மேற்படிகொடுப்பனவை வழங்கியுள்ளனர். "எங்கே மிகுதி கொடுப்பனவு?" ஆசிரியர்கள் அங்கலாய்க் கிறார்கள்.

# கட்டாக்காலிகளுக்கு ஜாலி

(அம்பாறை நிருபர்)

சம்மாந்துறைப்பகுதியில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்பட்டுவருகின்றன.

கட்டாக்காலிமாடுகளின் தொல்லையை ஒழிப்பதற்குச் சம்மாந்துறைப் பிரதேச சபை கண்டிப்பான பலநடவடிக்கைகளை மேற்கொண்டும் பயன்கிடைக்கவில்லை.

சம்மாந்துறைப்பிரதேசசபை அலுவலகத்திற்கு அருகில் அமைந்திருக்கும் நெசவுக் கிராம பயிற்சி நிலையத்தைச் சுற்றிவரப் பாதுகாப்பான வேலியோ, சுவரோ இல்லாமையால் மேற்படி பயிற்சி நிலைய வளவு இரவுபகலாகக் கட்டாக்காலி மாடுகளின் உறைவிடமாக மாறியிருக்கின்றது.

# அஞ்சலகத்தில் அதிகாரிகள் பற்றாக்குறை

(திருமலை நிருபர்)

திருகோணமலை மாவட்டத் தபாற் கந்தோர்களில் மீண்டும் அதிகாரிகள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களுக்கு வழங்கவேண்டிய சேவைகளை வழங்குவதில் அஞ்சலக உத்தியோகத்தர்கள் சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள்.

ஜனவரி 1ந் திகதி தொடக்கம் பதின்மூன்று உத்தியோகத்தர்கள் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றதாலேயே உத்தியோகத்தர் பற்றாக் குறை ஏற்பட்டது. இவர்களுக்குப் பதிலாக இடமாற்றங்கள் மூலமோ, புதிய நியமனங்கள் மூலமோ உத்தியோகத்தர்கள் நிரப்பப் படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

மூதூர், கிண்ணியா அஞ்சலகங்களில் தலா ஒவ்வொரு உத்தியோகத்தரே பணியாற்றுகிறார்கள். இவர்களுக்குச் சுகயீனம் ஏற்பட்டால் கந்தோரையே இழுத்து மூடிவிட வேண்டிய அபாய நிலை தோன்றியுள்ளது.

தோப்பூர், நிலாவெளி ஆகிய தபாற் கந்தோர்களுக்கு திருகோணமலைத் தபாற்கந்தோர் அதிகாரிகளே சென்று பணியாற்ற வேண்டியிருக்கிறது. இவ்விடங்களுக்கு நிரந்தரத்தபால் அதிபர்கள் கிடையாது.

"சேவைகளில் குறைவந்தால் விழுந்தடித்துக் கொண்டு விளக்கம் கோரும் அதிகாரிகள் உத்தியோகத்தர் பற்றாக்குறை விடயத்தில் மட்டும் கண்ணை மூடிப் பால் குடிக்க முனைவது ஏன்?" இவ்வாறு முரசு நிருபரிடம் வருத்தத்துடன் தெரிவித்தார் பெயர் சொல்ல விரும்பாத அதிகாரி ஒருவர்.




**கலை அலங்கார வகுப்புக்கள்**

சிகை அலங்காரம்
அழகுக்கலை
மணப்பெண் அலங்காரம்
4 மாத கற்கை நெறி

ஆரம்பம் 01.02.1996

**FASNAZ BEAUTY SALON**
இல.142, டபிளியூ.ஏ. சில்வா மாவத்தை,
கொழும்பு -06. தொலைபேசி: 589457

**உளநல உதவிநிலையம் இடமாற்றம்**

இல. 14, கிறீன் வீதி, மட்டக்களப்பில் இயங்கி வந்த எமது அலுவலகம் 1/1/1996 தொடக்கம் இல. 1A, மேல்மாடி தெரு (UPSTAIR ROAD) மட்டக்களப்பு என்னும் புதியவிலாசத்தில் இயங்குகிறது.

பணிப்பாளர்,
உளநல உதவிநிலையம்,
மட்டக்களப்பு.

தொ.பேசி இல. 065-2842

## BRIGHT ன் தபால் மூலம் கல்விச் சேவைகள்

**வெளிவாரி பட்டப்படிப்பு**
**G.A.Q., B.A. 1st Com., B.Com**

இலங்கை பல்கலைக்கழக பட்டங்களை வீட்டில் இருந்தவாறே தபால்மூலம் கற்றுக்கொள்ளலாம். பயிற்றப்பட்ட ஆசிரியர்களோ அல்லது க.பொ.த (உயர்தர)ப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியும் 180 புள்ளிகள் பெற்றோரும் இக்கல்விநெறியை தொடரலாம்.

வெளிவாரி மாணவராக பதிவு செய்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும். இப்பாடநெறி பற்றிய மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 50/- பெறுமதியான காசுக்கட்டளையை The Director B.B.C. எனும் பெயருக்கு SEA STREET SPO மாற்றக் கூடியதாக அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

**ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான கைநூல் (1995 வெளியீடு) வெளிவந்துவிட்டது**

292 பக்கங்களுடன் 35 மாதிரி வினா விடைகளுடன் வெளிவந்துள்ளது. பொது அறிவு, மொழி அறிவு, நுண்ணறிவு வினாவிடைகளை உள்ளடக்கியது.

விலை 250/- V.P.P. உண்டு

விபரங்களை பெற விரும்பும் மாணவர்கள் விண்ணப்ப படிவத்துடன் தொடர்பு கொள்க

**SPOKEN ENGLISH / SINHALA**

மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத, வாசிக்க தபால்மூலம் கற்றுத்தரப்படும். ஆயிரக்கணக்கான மாணவர்கள் படித்து DIPLOMA சான்றிதழ் பெற்றதோடு சிறந்த கற்கை நெறியென பாராட்டியும் உள்ளனர். மாணவர்களின் விருப்புக்கேற்ற முறையில் நவீன உளவியல் அடிப்படையில் பாடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. மிக சிறந்த கல்வி நெறிக்கான கட்டணம் 350/- மாத்திரமே.

மேலதிக விபரங்கட்கு பாடநெறியை குறிப்பிட்டு தொடர்பு கொள்ளவும். (இப்பாடத்திற்கான ஆங்கில/சிங்கள ஒலிப்பதிவு நாடா CASSETTE உண்டு)

**BUSINESS ENGLISH - வியாபார ஆங்கிலம்**

வியாபார கடிதங்கள் எழுதும்முறை, உத்தியோக விண்ணப்ப படிவங்கள் எழுதும் முறை, கடிதங்களில் பாவிக்கப்படும் சிறந்த வாக்கிய அமைப்பு முறை, ஆங்கில நேரடி உரையாடல், தொலைபேசி உரையாடல் ஆகியவற்றை உட்படுத்திய இரண்டு மாத பாடத்திட்டம். இப்பாடத் திட்டத்திற்கான கட்டணம் 100/- மாத்திரமே.

**EFFECTIVE ENGLISH WITH GRAMMAR**
**செயற்திறனுடைய ஆங்கில இலக்கணம்**

பாடசாலை மாணவர்கட்கு பயன்தரக்கூடிய முறையில் ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரையான மாணவர்கட்கான நூல் மாதாந்தம் வெளிவரவுள்ளது. விலை 50/- தொடர்ந்து பெறுபவர்கட்கு சலுகை கட்டணத்தில் வழங்கப்படும்.

**வெற்றிக்கனி இதழ் 7 முதல் 16 வரை**

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாணவர்கட்கு 1995 புலமைப்பரிசில் வினாப்பத்திர அடிப்படையில் வெளிவரவுள்ளது. 1995 வினாவும் விடையும் வெற்றிக்கனி வழிகாட்டியாக வெளிவந்துள்ளது. விலை 25/-
வெற்றிக்கனி 1 முதல் 6 வரை தொகுப்புநூல் வெற்றிக் கனி களஞ்சியம் 250/- வெற்றிக்கனி இதழ் 7 முதல் 16 வரை தொடர்ந்து பெறவிரும்புவோர் தொடர்பு கொள்க.

**METHOD OF BOOK KEEPING**
**கடைக்கணக்கு எழுதும் முறை**

கடைக்கணக்கு முதல் கம்பனிக் கணக்கு வரை எவ்வாறு பேணப்படும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்திலிருந்து கற்றுத்தரப்படும். இது ஆறுமாத Diploma பயிற்சி நெறியாகும்.

**G.C.E. (O/L) மாணவர்கட்கு கல்வி மஞ்சரி**

1996ல் க.பொ.த. சாதாரணதர பரீட்சை மாணவர்களுக்கு தமிழ்மொழி இலக்கியம், வரலாறும் சமூகக் கல்வியும், கணிதம், விஞ்ஞானம், வர்த்தகமும் கணக்கியலும், ஆங்கிலம் ஆகிய பாடங்களின் பாடப் பொழிப்பு, வினாவிடை நூல் விலை 100/-
தொடர்ச்சியாக மாதாந்தம் பெறும் மாணவர்கட்கு கழிவு உண்டு.

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
**S-27, FIRST FLOOR, P.O.BOX 162 ,**
**COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,**
**COLOMBO - 11. T.P. 434770**

விரும்பும் பாடநெறி :..................
பெயர் :..................
விலாசம் :..................
..................





www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# சாவகச்சேரியில் புலிகளின் விமானம்!

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு நடந்ததாகக் கிடைத்த செய்தியொன்று தலைநகரில் பாதுகாப்பு வட்டாரங்களுக்கும் எட்டியிருக்கிறது.

யாழ் குடாநாட்டில்-சாவகச்சேரிக்கு சமீபமாக புலிகளது மென்ரக கிளைடர் விமானம் வானில் வட்டமிட்டுவிட்டு இறங்கியிருக்கிறது.

நூற்றுக்கணக்கான மக்கள் நேரில் பார்த்திருக்கிறார்கள்.

நேரில் கண்டவர்களில் சிலர் வவுனியா வந்து சொல்ல, அந்தச் செய்தி பாதுகாப்பு வட்டாரங்களின் செவிகளையும் எட்டியிருக்கிறது.

ஏற்கெனவே ஒரு தடவையும் கிளிநொச்சிப் பகுதியில் புலிகளது குட்டி விமானம் வெள்ளோட்டம் விட்டுப் பார்க்கப்பட்டது.

மக்கள் பார்க்கக் கூடியதாக தமது விமானத்தை புலிகள் பறக்க விட்டுக் காட்டியதற்கும் காரணம் இல்லாமல் இல்லை.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பின்னடைவால் ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனங்களை களைவதற்கான ஒரு முயற்சியாகவும் அது இருக்கலாம்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நம்பிக்கையூட்டும் அவசியம் புலிகளுக்கு இருக்கிறது.

விமானப் பறப்புச் செய்தி, புலிகள் ஏதோ செய்யப்போகிறார்கள் என்ற நினைப்பை ஏற்படுத்தியுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

அதேசமயம் தலைநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் வானை நோக்கியும் செய்யப்பட்டுள்ளன.

விமானம் மூலமாக தாக்குதல் நடத்துவதானால் முக்கியமான இலக்கொன்றைத்தான் புலிகள் தெரிவு செய்வார்கள்.

தாக்கிவிட்டு விமானம் திரும்பிச் செல்லமுடியும் என்ற உத்தரவாதம் இருக்காது.

தலைநகரில் பல நிலைகளில் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

ஒன்றில் இருந்து தப்பித்தால் இன்னொன்றில் மாட்டிக்கொள்ள வேண்டியே ஏற்படும்.

புலிகளிடம் இருப்பதோ ஒன்று அல்லது இரண்டு கிளைடர் விமானங்கள்தான் என்று வைத்துக்கொண்டால், அவற்றை முக்கியத்துவமற்ற தாக்குதலில் இழக்க விரும்பமாட்டார்கள்.

அதனால் பிரதான இலக்கு ஒன்றுதான் தேர்வு செய்யப்படும். விமானத்தில் இருந்து பாரசூட் மூலமோ, அல்லது விமானத்தோடோ தற்கொலைத் தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் திட்டமிடக்கூடும்.

அநேகமாக தலைநகரில்தான் அப்படியான ஒரு தாக்குதல் நடத்தப்படலாம் என்று நம்பப்படுகிறது.

வடக்கில் இராணுவ முகாம்கள்மீது தாக்குதல் நடத்த விமானத்தை பயன்படுத்தமாட்டார்கள். ஏனெனில் அதனால் தமது தாக்குதலை இராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததாக மாற்றமுடியாது என்று புலிகள் நினைக்கக் கூடும்.

தலைநகரில் தாக்கினால்தான் அரசுக்கும் நெருக்கடியை ஏற்படுத்தலாம். பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக அதிக படையினரை ஈடுபடுத்தும் தேவையையும் தோற்றுவிக்கலாம். வெளியுலகின் முன்பாகவும் உடனடியாகத் தெரியக்கூடிய தாக்குதலாகவும் அது இருக்கும் என்று புலிகள் கணக்குப் போடலாம்.

ஆகவே, புலிகளது விமானப் பறப்புச் செய்தி தலைநகரப் பாதுகாப்புக்குத்தான் அச்சுறுத்தல்.

புலிகளது குறியில், பட்டியலில் முதலாமிடத்தில் இருப்பவர்கள் இருவர். ஒருவர் ஜனாதிபதி சந்திரிக்கா, இன்னொருவர் அனுருத்த ரத்வத்த.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைதான் இன்றைய ஹுரோ. ஜனாதிபதி சந்திரிக்கா வெளியுலக ஆதரவைத் திரட்டிக் கொடுக்க, அனுருத்த ரத்வத்த வடக்கில் படை நடவடிக்கைகளுக்கு உற்சாகம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

ஜனாதிபதியைவிட ரத்வத்தை மீதுதான் புலிகளுக்கு கோபம் அதிகம். ஆனால் ரத்வத்த பாதுகாப்பு விடயத்தில் கெட்டிக்காரராக இருக்கிறார். அவரது நடமாட்டங்கள் இரகசியமானவை.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின போல ரத்வத்தை அலட்சியமாக நடமாடுவதில்லை. தனது எதிரி யார் என்றும், எப்படிப்பட்டவர்கள் என்றும் ரத்வத்தைக்குத் தெரியும். அதனால் எந்நேரமும் விழிப்பாக இருக்கிறார். எங்கே இருக்கிறார் என்பதே கண்டுபிடிக்க முடியாத விஷயமாக இருக்கிறது.

எனவே, ஜனாதிபதி சந்திரிக்காவின் நடமாட்டங்களையே புலிகள் கூடுதலாக கவனிக்கக் கூடும். அவ்வாறு கவனித்த சிலரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதிமீது புலிகள் தாக்குதல் நடத்துவதானால் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு செய்தது போன்ற பாணியில் மேற்கொள்ள முடியாது.

அதுதவிர, ஜனாதிபதி கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்கூட கடைசிநேரம் வரை இரகசியமாகவே வைக்கப்படுகின்றன.

அதனால் வேறு விதமான தாக்குதல் உத்தியைப் புலிகள் பிரயோகிக்க முற்படலாம் என்று பாதுகாப்புத் தரப்பு உஷாராக இருக்கிறது.

வேறுவிதமான தாக்குதல் உத்திகள் எவையாக இருக்கலாம் என்று பட்டியலிட்டால், அதில் விமானத் தாக்குதல் உத்திக்கும் இடம் உண்டு.

அதனால் ஜனாதிபதி உட்பட முக்கியமானவர்கள் தங்கும் இடங்களை சுற்றிப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதைவிட, முக்கியமானவர்கள் தங்கும் இடங்களைப் பற்றிய இரகசியங்களை பாதுகாப்பதே புத்திசாலித்தனம் என்ற கருத்தும் இருக்கிறது. படை உயரதிகாரி ஒருவர் அப்படித்தான் அபிப்பிராயம் சொல்கிறார்.

லிபிய ஜனாதிபதி கேணல் கடாபி போன்றவர்கள் விமானத்தாக்குதல் அபாயங்களுக்கு பலமுறை உள்ளானவர்கள்.

விமான எதிர்ப்பு ஆயுதங்களைவிட, அடிக்கடி. தங்குமிடங்களை மாற்றிக் கொள்ளும் இரகசிய ஏற்பாடுகள் மூலமே அவர்கள் தப்பிக் கொள்ள முடிந்தது.

புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனும் அப்படித்தான். அவர் எங்கே இருக்கிறார் என்று தெரிந்தால் இலங்கை விமானப்படையின் சகல விமானங்களும் அங்கு போய் குண்டுமழை பொழியத் தயாராக உள்ளன.

அடிக்கடி. தனது தங்குமிடங்களை மாற்றிக்கொள்ளும் தந்திரம்தான் பிரபாகரனையும் பாதுகாப்பாக வைத்திருக்கிறது.

தற்போதைய நிலையில் சர்வதேச அளவில் உயிரபாயத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ள தலைவர்களது பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர் ஜனாதிபதி சந்திரிக்காதான்.

புலிகளது விமானப் பறப்புச் செய்தி அவரது முதலாமிடத்தை மேலும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தைப் பிடித்து வைத்துக் கொண்டு நாடு அமைதியாக இருக்க முடியாது என்பதைத் தெரிவிக்க புலிகள் பல வழிகளில் முயல்வார்கள் என்பது இரகசியமல்ல.

யுத்தம் மக்களை மட்டுமல்ல தலைவர்களையும் நிம்மதி இழக்கச் செய்துள்ளது. தலைநகரையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.





# சந்திரசேகரனின் கணக்கு

நாரதர்

அப்படி என்னதான் ஏனைய தமிழ் கட்சிகள் சொல்லிவிட்டன! கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் ஏன் வருத்தப்படுகிறார்?

"அடைந்தால் தமிழ்நாடு அல்லது சுடுகாடு," "ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆளநினைப்பதில் என்ன குறை?" என்றெல்லாம் பேசி 1977இல் மகத்தான வெற்றியீட்டியவர் சிவசிதம்பரம்.

சமீபத்தில் கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி கொடுத்திருக்கிறார் சிவா. "அரசின் தீர்வு முயற்சிகளை தமிழ் கட்சிகள் குழப்பக் கூடாது" என்று சொல்லியிருக்கிறார்.

ஜனாதிபதிகூட தமிழ் கட்சிகளைப் பார்த்து சொல்லாத ஒரு விடயத்தை சிவா சொல்லியிருக்கிறார்.

வடக்கு-கிழக்கு பிரிக்கப்படக் கூடாது. அதிகாரங்கள் போதாது என்றுதான் தமிழ் கட்சிகள் சொல்லியிருக்கின்றன. தீர்வு வேண்டாம், நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று அவை சொல்லவில்லை.

இன்னமும் சொல்லப் போனால், தமிழ் கட்சிகள் தமது நிலைப்பாடுகளை வலியுறுத்தும் வேகம் போதவில்லை; அறிக்கைகள் விடுவதோடு காரியம் முடிந்து விட்டதாக நினைத்துக் கொள்கின்றன.

மூத்த தலைவர் என்ற வகையில் ஏனைய தமிழ் கட்சிகளையும் அரசியல் தீர்வு விடயத்தில் பொது நிலைப்பாட்டுக்கு கொண்டுவர வேண்டியவர் சிவசிதம்பரம்.

ஆனால் அவரோ "கிடைப்பதை பெற்றுக் கொள்ளுங்கள். வேறு எதுவும் கேட்டு தொல்லை கொடுக்காதீர்கள்" என்று புத்தி சொல்லப் புறப்பட்டிருக்கிறார்.

எல்லைகள் மாற்றப்படும் என்று சொல்கிறார் ஒரு அமைச்சர். ஜனாதிபதி நினைத்தால் பிராந்திய சபைகளைக் கலைக்கலாம் என்று சொல்கிறார் இன்னொரு அமைச்சர்.

தீர்வு யோசனைகளை சட்டரீதியாக அரசாங்கம் வெளியிட்டுள்ளது. அடுத்து பாராளுமன்ற தெரிவுக்குழு பரிசீலிக்கப்போகிறது.

அரசின் தீர்வு யோசனையின் சட்டபூர்வ வடிவம் கூட திருப்திதராத நிலையில், பாராளுமன்ற தெரிவுக்குழுவும் தனது பங்குக்கு என்ன செய்து முடிக்கப் போகிறதோ தெரியவில்லை.

தீர்வு யோசனை சட்டத்தியாக முன்வைக்கப்பட்டுவிட்டதாக அரசு சொல்லிக் கொண்டிருக்க, இனவாதிகள் புதிய வாதங்களைத் தொடுக்கப் போகிறார்கள்.

தமிழ் கட்சிகளும் மௌனமாக இருந்தால் என்னாகும்?

என்னவேண்டுமானாலும் ஆகட்டும், தமிழ் கட்சிகள் பார்த்துக்கொண்டிருந்தால் போதும் என்று சொல்கிறார் சிவா.

இதைச் சொல்வதற்கு சிவா தேவையில்லை. தினேஷ் குணவர்த்தனா போதும்.

போராட வேண்டிய நேரங்களில் விட்டுக் கொடுப்பது, வாதாட வேண்டிய தருணங்களில் வாயை சாத்திக்கொள்வது போன்ற அணுகுமுறைகள்தான் ஆபத்தானவை.

சிவாவுக்கு என்ன நடந்துவிட்டது? சிங்கத்துக்கு வயதானாலும் சீற்றம் குறைவதுண்டோ? ஆம் என்று பதில் சொல்ல வைத்துவிட்டாரே!

⁂ ⁂ ⁂

யாழ்ப்பாணத்தில் படையினரின் நடவடிக்கைகளில் தமிழ் கட்சிகளின் உறுப்பினர்களும் இணைந்திருக்கலாம் என்ற சந்தேகம் புலிகளுக்கு இருக்கிறது.

ஆனால், இன்றுவரை எந்தவொரு தமிழ் கட்சியும் யாழ்ப்பாண இராணுவ நடவடிக்கையில் பங்கு கொள்ளவில்லை.

படையினர் கைப்பற்றியுள்ள பகுதிகளுக்கு செல்வதில் தமிழ் கட்சிகள் ஆர்வம் காட்டுவது மட்டுமே உண்மை.

அதற்கு ஒரு எச்சரிக்கை செய்வதைப் போலத்தான் கடந்தவாரம் நெடுந்தீவில் புலிகள் ஒரு தாக்குதல் நடத்தினார்கள்.

நான்குபுறமும் கடலால் சூழப்பட்ட நெடுந்தீவு-ஈ.பி.டி.பி. இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

ஐந்து அல்லது ஆறு பிளாஸ்டிக் படகுகளில் நூறு பேர் வரையான புலிகள் சென்று தாக்குதல் நடத்தினார்கள். ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் திருப்பித் தாக்கினார்கள். சுமார் 5 மணிநேரம் மோதல் இடம்பெற்றது.

ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் நின்றால் கடல் மூலமாக சுற்றிவளைக்கப்படலாம் என்பதால் புலிகள் திரும்பிச் சென்றுவிட்டார்கள்.

ஈ.பி.டி.பி தரப்பில் இருவர் பலியானார்கள். புலிகள் தரப்பில் மூவர் காயமடைந்தனர்.

ஏனைய தமிழ் கட்சிகளும், ஈ.பி.டி.பியும் யாழ்ப்பாணத்திற்கு செல்வதை அச்சுறுத்துவதுதான் புலிகளது நோக்கம்.

இதேவேளை கிழக்கில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் உதவிசெய்ய ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கம் முன்வந்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தல் பிரசாரத்தில் படைத்தரப்போடு இணைந்து செயற்படுவதாக ஏனைய தமிழ் அமைப்புக்கள் மீது குற்றம்சாட்டியது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

அப்போதிருந்த ஐ.தே.க. அரசாங்கம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தை ஒதுக்கி வைத்திருந்தது. அதனால் 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' என்ற ரீதியில் ஏனைய தமிழ் கட்சிகளை சாடியது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

தற்போது வாய்ப்புக் கிடைத்துள்ளதால் கிழக்கில் புலிகளை ஒரு வழி பண்ண உதவி செய்யப் புறப்பட்டிருக்கிறது.

கிழக்கில் காடுகள் பற்றிய விபரமறிந்த சில உறுப்பினர்களை முதல்கட்டமாக படையினருடன் கலந்து இறக்கிவிட சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே ஈ.பி.ஆர்.எல்.எஃப். தான் கடந்த சிலவாரங்களுக்கு முன்பாக போர் நிறுத்தம் கேட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்க விஷயம். இப்போது போருக்கு ஆள் விநியோகம் செய்யப் புறப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ் கட்சிகளின் விமர்சனங்கள் எல்லாம் 'எனக்கும் கிடைத்தால் சரிதான், இல்லாவிட்டால்தான் விமர்சனம்' என்ற பாணியில்தான் இருக்கின்றன.

⁂ ⁂ ⁂

மலையகத்தில் பொதுவான சுயேச்சைக் குழுவை நிறுத்திப் போட்டியிட சந்திரசேகரன் தயாராக இருக்கிறார்.

இ.தொ.காவுக்கு அதிக இட ஒதுக்கீடு செய்து ஆசனங்களைப் பகிரவும் தயார் என்று தனக்கு நெருக்கமான வட்டாரங்களில் சொல்லியிருக்கிறார்.

மலையக மக்கள் முன்னணிக்கு அதனால் என்ன லாபம்? மலையக மக்கள் முன்னணியை கவனத்தில் எடுக்கவே தேவையில்லை என்று சொல்லிக் கொண்டிருந்த இ.தொ.கா. இப்போது கூட்டுக்கு வரத்தயாராக இருப்பதே பெரிய வெற்றிதான் என்று கணக்குப் போடுகிறது மலையக மக்கள் முன்னணி.

இ.தொ.காவுக்குள் மலையக மக்கள் முன்னணியும் சந்திரசேகரனும் பரம விரோதிகள் என்று இனிச் சொல்ல முடியாமல் போகும்.

இ.தொ.கா உறுப்பினர்களோடு சந்திரசேகரன் ஆட்கள் நெருக்கமாகவும் ஒரு வாய்ப்பிருக்கும்.

அந்த உறவு மலர்ந்து கனிந்து நல்ல நிலையில் இருந்தால் தொண்டாவின் பின்னர் இ.தொ.காவில் கணிசமான பகுதி சந்திரசேகரனை நோக்கி வரலாம் என்று புத்திச்சாலித்தனமான கணக்குப் போடப்படுகிறது.

ஒன்று கலப்பது என்பது தற்போதைக்கு நடக்கமுடியாத விஷயம்.

தேர்தலில் கூட்டு சாத்தியமாகலாம். சாத்தியமாகாவிட்டாலும் கூட கூட்டுக்காக செய்யப்பட்ட முயற்சிகள் தமக்கு சாதகமாக அமையும் என்பது மலையக மக்கள் முன்னணியின் எதிர்பார்ப்பு.

இந்த இரு தரப்புக்கும் அப்பால் மலையக தமிழ் மக்களது நலன்கள் குறித்து அக்கறையுடையவர்கள், இ.தொ.காவும், மலையக மக்கள் முன்னணியும் ஒன்று கலக்காவிட்டாலும் பொது விடயங்களில் இணைந்து செயற்பட்டாலே போதும். பல காரியங்களை சாதிக்கலாம். இல்லாவிட்டால் மலையக மக்களது எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் என்கிறார்கள். அதுதான் உண்மையும்கூட.

# அதிரடி அய்யாத்துரை



யாழ்ப்பாணம் போகவேண்டும் எண்டு மேலிடத்தைகேட்டு ஒரே நச்சரிப்பாம். அப்படியானால் முதலில் கிழக்கில் ஒரு கை தாருங்கோ; திறமையைப் பார்த்து யாழில் சான்ஸ் தருவோம் எண்டு கூறப்பட்டதாம். ஓ.கே. சொல்லிப்போட்டார்களாம். யார் எண்டு தெரியுமோ? வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முன்னாள் அதிகாரக் கட்சியினர்தான்.

மலைப்பகுதி தனித்துவமானவர் அதிகாரமுள்ள 'சக்தி'யோடு நடத்திய பேச்சு திருப்தியாய் முடியேல்லையாம். தனித்துவக் கட்சி உரிய முறையில் நடக்கவில்லை 'சக்தி' போட்டியிட்ட தேர்தலிலும் முழு ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை எண்டு பழைய கதைகளை 'சக்தி' சுட்டிக்காட்ட தனித்துவ தலைவர் முகம் கறுத்துப்போனாராம். பழைய பிரச்சனை ஆய்விலையே நேரம் போய்விட்டதால் புதிய பிரச்சனை பேச வேறு ஒருநாள் குறிக்கப்பட்டதாம்.

அதிகார மட்டக் கூட்டங்களின் உள்விஷயங்கள் பத்திரிகைகளுக்கு கசியும் விடயத்தால் 'சக்தி'யானவர் கசப்படைந்துள்ளாராம். அதிகாரமுள்ள ஒருவருக்கு 'டோஸ்' விழுந்ததாம். அப்படி டோஸ் விழுந்த சங்கதியும் மறுநாள் ஆங்கிலப்பத்திரிகையில் வந்ததுதான் நெத்தியடி.

வவுனியாவுக்கு போய் மக்களைச் சந்தித்தாராம் கூட்டாளி கட்சியின் நிலத்தார். பெரிய பொட்டு வைத்த ஒருத்தரை நிலத்தார் கூட்டிக்கொண்டு போனவராம். 'ஐயா வாறார். ஐயா வாறார்' எண்டு சொல்லிக் கொண்டு முன்னாலை போவதுதான் அவருக்கு இடப்பட்ட பணியாம். இட்ட பணியை கச்சிதமாய் அவர் செய்து முடித்தாலும், ஐயாவைச் சனம் கேள்வி கேட்டு துளைச்சுப் போட்டுதுகளாம். போனவேகத்திலை திரும்பிவந்து போட்டார்.

வவுனியாவிலை ஒரு கடும் நோயுள்ள சிறுவனுக்கு கொழும்பு வர அனுமதி கொடுப்பதில் தாமதம் செய்யப்பட்டது. பின்னர் பலர் எடுத்துச் சொல்ல அதிகாரிகள் மனம் இரங்கி அனுமதி கொடுத்திருந்தவையாம். முகாமுக்கு போன நிலமானவருக்கு யாரோ அதனைச் சொல்லிப் போட்டினம். அதிகாரிகளைக் கூப்பிட்டு ஒரு துள்ளுத் துள்ளிப்போட்டு வந்திட்டார். நிலமானவர் போனகையோடை சிறுவனைக் கூப்பிட்ட அதிகாரிகள் என்ன செய்தவை தெரியுமோ? சிறுவனுக்கு கொழும்பு செல்ல கொடுத்திருந்த அனுமதியை வாங்கிக் கிழிச்சுப் போட்டினமாம். உள்ளதையும் கெடுத்த கதை.

புதுவருசம் பிறந்தபிறகு தடை அரண்களில் நின்றவர்கள் வாகனங்களை மறிச்சுக் கொண்டிருந்தவை. 'பத்திரிகை' எண்ட பெயர் பலகையோடு செல்லும் வாகனங்களும் மறிக்கப்பட்டன. வாகனத்தில் இருந்தவை அடையாள அட்டை காட்ட முற்பட, "உது வேண்டாம் கலண்டர், டயறி ஏதாவது இருக்குதோ?" எண்டு கேட்கப்பட்டதாம். சகல சென்றிகளிலும் கேட்கப்பட்ட பொதுக் கேள்வி அது. புதுவருசத்தில் அடையாள அட்டையைவிட அழகான கலண்டர் உதவும்!

வன்னியிலை குறைந்த விலைக்கு காணிகளை வளைச்சுப்போடும் விஷயத்திலை பலசையுள்ள பலர் கடும் முயற்சியில் இறங்கியிருக்கினமாம். யாழ்ப்பாணத்திற்கு திரும்பிச் செல்ல காலம் எடுக்கும். அந்த நேரத்திலை நல்ல லாபம் வைத்து விற்றுப் போட்டுப் போகலாம் எண்டு நினைக்கினமாம்.

வானொலியிலை புதிய அலைவரிசை வந்திருக்கல்லோ. அறிவிப்பாளர்கள் விடயத்திலும் அவதானமாக இருக்கிறது நல்லது. அல்லது அலைவரிசைகள் அறுவரிசைகளாக மாறிப்போடும். செய்தி வாசிப்புக்களும் வரவர திணறல் வாசிப்பாக மாறிவருகிறது. தவறுக்கு வருந்துவதும் கிடையாது.

தொலைக்காட்சி நாடகம் ஒன்றில் இன ஒற்றுமையை வளர்க்க தமிழும் சிங்களமும் கலந்து காட்சிகள் போடப்படுகிறது. பிராங் புஸ்பநாயகம் மட்டும் தமிழில் இயல்பாக நடிக்கிறார். ஏனையோர் தமிழை டமிளாகப் பேசி சீரியஸான வசனங்களிலும் சிரிப்பு வரச் செய்கிறார்கள். நடிகர்களுக்கும் பஞ்சமோ? நல்ல நாடகமும் நடிகர்களால் கெடும் என்பதற்கு உதாரணம்.

பதவி ஆசையின் ஆரம்பம் எங்கே இருக்கிறது? இவர் சொல்வது சரியா பாருங்கள்:

**ஆசை**

பேருந்துகளில்
இடம்பிடிக்க
மக்கள்
போட்டி போடுவதிலிருந்தே
ஆரம்பமாவதுதான்
பதவி ஆசை.

(கே. செல்வகுமார்)



படிப்பகம்

www.padippakam.com

# 62

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# கொள்ளைகளும்— மாட்டிவிடும் தந்திரங்களும்

**அரசியல் தொடர்** **அற்புதன்— எழுதுவது**

### கண்டனம்

சகல இயக்கங்களும் கொள்ளை நடவடிக்கைகளை கண்டித்தன. கொள்ளைகள் தொடர்ந்து கொண்டே இருந்தன.

கொள்ளை நடவடிக்கைகளை கண்டித்து தமிழீழ இராணுவம் (TEA) ஒரு காரசாரமான துண்டுப்பிரசுரம் வெளியிட்டிருந்தது.

அந்தப் பிரசுரத்தில் தெரிவிக்கப் பட்டிருந்தது இதுதான்:

"வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதை போல தமிழ் மக்களால் போற்றிப் பாதுகாத்து பேணி வளர்க்கப்பட்ட இயக்கங்கள் இன்று தமிழ் மக்கள் மீதே பாய்ந்துவிட்டன. எமது போராட்டத்தின் மூலவேரையும் ஆட்டம் காணச் செய்து விட்டன.

மக்களே எமது பலம், மக்களே எமது மூச்சு, மக்கள் விடுதலையே எமது இலட்சியம், மக்களே கிளர்ந்தெழுங்கள் என்றெல்லாம் வார்த்தைக்கு வார்த்தை மக்கள், மக்கள் என்று கோஷமிட்டவர்கள் இன்று தம் மக்களையே மேயத் தலைப் பட்டுவிட்டனர்.

புத்தூர் கொலை, கொள்ளைகளில் சி.ஐ.ஏயின் கைவண்ணம் தெரியுதென்பர்.

காரைநகர் வேலை மொசாட்தான் என்பர். இந்த சி.ஐ.ஏ பூச்சாண்டி எத்தனை நாள்தான் வேலை செய்யும்.

மக்களே! விடுதலைப் போராட்டத்தை சிதறடிக்கும் எத்தர்களை இனம்கண்டு நிராகரியுங்கள்."

அதுதான் தமிழீழ இராணுவத்தினர் வெளியிட்ட துண்டுப் பிரசுரம்.

அவர்கள் மறைமுகமாகத் தாக்கியது ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தை.

இப்பிரசுரம் வெளியான சில நாட்களின் பின்னர் நடைபெற்ற ஒரு சம்பவத்தை சொல்கிறேன்.

### மின்கம்பப்பூசை

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவரை இரு இளைஞர்கள் வழி மறித்தனர்.

மோட்டார் சைக்கிளை தம்மிடம் தந்து விடுமாறும், பின்னர் திருப்பி தருகிறோம் என்றும் சொன்னார்கள்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர் புத்திசாலி. அவர் மறுக்கவில்லை. வாருங்கள் தம்பி, வீட்டில் வைத்து தருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

வீட்டுக்குப் போனார்கள் இளைஞர்கள். அயலவர்களை திரட்டிவைத்திருந்த மடக்கிப்பிடித்தார் இளைஞர்களை. கடும் பூசைக்குப் பின்னர் அந்த இளைஞர்கள் தமது இயக்கப் பெயரை சொன்னார்கள்.

"நாங்கள் 'தமிழீழ இராணுவம்'." ஒரு மின்கம்பத்தில் அந்த இளைஞர்களை கட்டிவைத்தனர் ஊர்மக்கள்.

சம்பவத்தைக் கேள்விப்பட்டு ஒரு வேனில் வந்தனர் தமிழீழ இராணுவத்தினர். மக்கள் பார்க்கக்கூடியதாக அந்த இளைஞர்களுக்கு நாலு சாத்துச் சாத்தி விட்டு தமது வேனில் ஏற்றிச் சென்றுவிட்டனர்.

### தனியாரிடம் கொள்ளை

புத்தூரில் நடைபெற்ற கொள்ளை தொடர்பாக தமிழீழ இராணுவம் கண்டித்திருந்தது அல்லவா.

அக்கொள்ளை நடவடிக்கை ஈ.பி.ஆர். எல்.எஃப். இயக்கத்தால் மேற்கொள்ளப் பட்டது.

தனியார் வீடொன்றில் நடைபெற்ற அக்கொள்ளை நடவடிக்கையில் அந்த வீட்டு உரிமையாளரான இராசதுரை ஸ்ரீ இராமச்சந்திரன் என்பவர் கொல்லப் பட்டார்.

தனிப்பட்ட கொள்ளையர்கள்தான் வீட்டுக்குள் வருகிறார்கள் என்று நினைத்து விட்டார் இராமச்சந்திரன். அதனால்தான் எதிர்ப்புக்காட்டினார்.

அதனால் இராமச்சந்திரன் கொல்லப் பட்டார். அதன்பின்னர் காரைநகரில் உள்ள ஒரு வீட்டிலும் கொள்ளையிடப் பட்டது. அதுவும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தால்தான் மேற்கொள்ளப்பட்டது.

அரியாலையில் உள்ள பிரபல வர்த்தகர் வீடொன்றும் கொள்ளையிடப் பட்டது. பல லட்சம் ரூபாய்கள் பெறுமதியான நகைகளோடு ஆயுதம் தாங்கியவர்கள் பறந்துவிட்டார்கள். அரியாலை கொள்ளை நடவடிக்கை புலிகள் இயக்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டது.

புலிகள் இயக்கத்திலும், ஈ.பி.ஆர். எல்.எஃப். இயக்கத்திலும் தனியார் கொள்ளைகளில் ஈடுபடுவதற்காக இரகசியமான அணிகள் இருந்தன.

அந்த இயக்கங்களில் இருந்த ஏனையோருக்கு தமது இயக்கத்தினர்தான் கொள்ளைகளில் சம்பந்தப்படுகிறார்கள் என்பது தெரிந்திருக்கவில்லை.

### கசசேரிக் கொள்ளை

யாழ்ப்பாணம் கச்சேரிப் பகுதியில் ரெலோவின் முகாமுக்கு அருகில் இருந்த இரண்டு வீடுகளில் ஒரே இரவில் கொள்ளையிடப்பட்டது.

கொள்ளையை நடத்தியவர்கள் புலிகள். கொள்ளை நடிவடிக்கைக்கான குழுவை அனுப்பிவைக்கும் போது கிட்டு சொன்னது இது:

"சில நேரங்களில் மொட்டையன் வருவான். சுட்டுப் போடவேண்டாம். துப்பாக்கியைக் காட்டி குப்புறப் படுக்க வையுங்கள்".

கிட்டு மொட்டையன் என்று குறிப்பிட்டது, புலிகள் இயக்க அரியாலைப் பொறுப்பாளராக இருந்த பிரேமை. மொட்டைப்பிரேம் என்று அவர் அழைக்கப் படுவது வழக்கம்.

கொள்ளையை நடத்துவது தமது ஆட்கள் என்று தெரியாமல் பிரேம் தலையிட்டாலும் என்றுதான் அந்த முன்னெச்சரிக்கை.

ரெலோ முகாமுக்கு அருகில் கொள்ளைகள் நடந்தமையால், ரெலோதான் கொள்ளை அடித்திருக்கலாம். அவர்களது சென்றி இருக்கக் கூடியதாக வேறு யாரும் செய்திருக்க முடியாது என்று மக்கள் நினைத்துக் கொண்டனர்.

அப்படி நினைக்கட்டும் என்றுதான் ரெலோ முகாமுக்கு அருகில் உள்ள வீடுகள் புலிகளால் தெரிவு செய்யப்பட்டன.

அரியாலைப் பொறுப்பாளராக அப்போதிருந்த 'மொட்டைப் பிரேம்' தற்போது கனடாவில் இருக்கிறார். தற்போது அவர் ஒரு கனடா பிரஜை.

### சிறுப்பிட்டிக் கொள்ளை

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறுப்பிட்டி பகுதியிலும் ஒரு கொள்ளை நடைபெற்றது.

சிறுப்பிட்டி ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் கோட்டையாக இருந்தது.

சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக ஈ.பி.ஆர். எல்.எஃப். பல போராட்டங்களை நடத்தியது.

சிறுப்பிட்டியிலும் அவ்வாறான போராட்டங்கள் நடத்தப்பட்டன. அதனால் சிறுப்பிட்டியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பலமாக இருந்தது.

சிறுப்பிட்டியில் உள்ள வீடொன்றில் கொள்ளையடிக்க திட்டமிட்டார்கள் புலிகள்.

ஆறு பேர் கொண்ட குழுவொன்று அதற்காக தயாராக்கப்பட்டது. ஆறு பேரும் புலிகளது உளவுப்பிரிவைச் சேர்ந்தவர்கள். அப்போது உளவுப்பிரிவுக்கு பொறுப்பாக இருந்தவர் வாசு.

ஆறு பேரிடமும் இருந்த சயனைட் குப்பிகளை வாங்கிக் கொண்டார் வாசு. "கொள்ளையடிக்கும் போது ஒருவரோடு ஒருவர் பேசும்போது 'தோழர்' என்று அழைத்துக் கொள்ளுங்கள். மறக்க வேண்டாம்" என்று சொல்லியனுப்பினார் வாசு.

'தோழர்' என்ற பதம் பாவிக்கப்பட்டால் அது ஈ.பி.ஆர்.எல்.எஃப். மீது சந்தேகம் வரச்செய்யும் என்று வாசு நினைத்தார்.

கொள்ளைக்கு சென்று கொண்டிருந்த போது, சிறுப்பிட்டியில் சென்றிக்கு நின்ற புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் வாகனத்தை மறித்திருக்கிறார்.

வாகனத்தில் இருந்து இறங்கியவர்கள் அவரை மடக்கி நல்ல சாத்துப்படி கொடுத்து விட்டு சென்றுவிட்டார்கள்.

தன்னைத் தாக்கியவர்கள் தனது இயக்க உளவுப்பிரிவினர் என்பது அடிபட்டவருக்கு தெரியவே தெரியாது.

### தோழர்கள்

ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்தினர் நடத்திய தனியார் கொள்ளைகளில் பங்குபற்றும் குழுவினருக்கு ஒரு கண்டிப்பான உத்தரவு வழங்கப்படுவது வழக்கம்.

"எக்கட்டத்திலும் மறந்தும் கூட தோழர் என்ற வார்த்தையை உச்சரிக்க வேண்டாம்." என்றுதான் அந்த உத்தரவு.

அப்படியிருந்தும் கூட அவசரத்திலும், பதட்டத்திலும் பழக்கதோஷம் காரணமாக 'தோழர்' என்று அழைத்துத் தொலைத்த சம்பவங்களும் உண்டு.

அதுவும் ஒருவகையில் நல்லதாகப் போனது. எப்படி என்கிறீர்களா?

ஈ.பி.ஆர்.எல்.எஃப் முகாமுக்கு ஓடி வந்து முறையீடு செய்யப்படும்.

"கொள்ளையிட்டவர்களில் ஒருவர் இன்னொருவரை 'தோழர்' என்று அழைத்தார்." என்று சொல்வார்கள் முறையீட்டாளர்கள்.

அதைக்கேட்டுவிட்டு ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பாக பதில் கூறுகிறவர் சொல்வார்; "பார்த்தீர்களா,பார்த்தீர்களா எங்கள் ஆட்கள் என்றால் 'தோழர்' என்ற வார்த்தையை இப்படிப்பட்ட நேரத்தில் பயன்படுத்தி இருக்க மாட்டார்கள் அல்லவா? எம்மை மாட்டிவிட நினைக்கும் ஏதோ ஒரு இயக்கம் தான் செய்திருக்க வேண்டும்."

மக்களுக்குள் பெரிய குழப்பம். சகல இயக்கங்களும் தனியார் வீடுகளில் நடக்கும் கொள்ளைகளைக் கண்டிக்கின்றன.

அப்படியானால் யார்தான் காரணம்? ஏதோ ஒரு இயக்கம்தான் செய்கிறது என்பது மட்டும் மக்களுக்கு புரிந்தது.

ஆனால் ஒன்று. யாழ்ப்பாணத்தில் பெரும் பணக்காரர்களாக இருந்தவர்களது வீடுகளில்தான் கொள்ளைகள் நடத்தப் பட்டன.

வடக்கு-கிழக்கில் வங்கிகள் மூடப்பட்டு இருந்தன. இருந்த சில வங்கிகளும் பலத்த பாதுகாப்புடன் இருந்தன.

இயக்கங்களுக்கு தமது உறுப்பினர்களை பராமரிக்கவும், ஏனைய தேவைகளுக்கும் பெருமளவு நிதி தேவைப்பட்டது.

நிதித் தேவையை நிறைவு செய்ய பெரும் பணக்காரர்கள் குறிவைக்கப்பட்டனர்.

தவறாகப்பட்டாலும் சில நடவடிக்கைகள் தவிர்க்க முடியாதவையாக இருந்தன. என்பதை மறுப்பதற்கில்லை.

### கலைஞர் முழக்கம்

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழ் நாட்டில் ஒரு பேரணி நடைபெற்றது.

பேரணியில் ஒரு சித்திரம் காணப் பட்டது. ராஜீவ் காந்தியும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் கட்டித் தழுவிக் கொண்டிருக்க எம்.ஜி.ஆர். அதனை மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருப்பதுபோல அந்தச் சித்திரம் வரையப்பட்டிருந்தது.

பேரணியில் வானைமுட்ட எழுந்த கோஷம் இது: "காப்போம், காப்போம். ஈழத் தமிழர்களைக் காப்போம். மலரட்டும், மலரட்டும், தமிழீழம் மலரட்டும்."

பேரணியின் முடிவில் கலைஞர் கருணாநிதி உரையாற்றினார்.

"தமிழீழம் என்ற தனிநாடு அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் ஏற்கவில்லை என்று ராஜீவ் காந்தி கூறியிருக்கிறார். ஜெயவர்த்தனாவின் வாயிலிருந்து வரவேண்டியது, அவருக்குச் சிரமம் இல்லாமல் ராஜீவ் காந்தியின் வாயிலிருந்து வந்திருக்கிறது." என்று கூறிய கருணாநிதி, ஒரு கட்டத்தில் உணர்ச்சி வசப்பட்டு, "இலங்கைத் தமிழர்களுக்காக ஆயுதம் ஏந்தவும் தயார்" என்று கூறியபோது மைதானம் அதிர கரகோசம் எழுந்தது.

### ஈரோசின் அறிக்கை

ஈரோஸ் இயக்கத்தின் தலைவர் என்று வே.பாலகுமாரின் பெயரையே பத்திரிகைகள் வெளியிட்டுவந்தன.

ஈரோஸ் சார்பாக பாலகுமார் அடிக்கடி கருத்துக்கள் சொல்லிக் கொண்டிருந்தார். அதனால் அவர்தான் தலைவர் என்று கருதப்பட்டார்.

அதனால் ஈரோஸ் இயக்கத்திற்குள் சில புகைச்சல் ஏற்பட்டுவிட்டது.

விளைவு, ஒரு அறிக்கை வெளியிடப் பட்டது.

"ஈரோஸ் தனிமனித தலைமைத்துவத்தை எற்றுக்கொள்ளும் அமைப்பல்ல. ஜனநாயக அடிப்படையில் கூட்டுத் தலைமைத்துவத்தையே நாம் கொண்டிருக்கிறோம். திரு.பாலகுமார் ஈரோசின் அதி உயர் தலைமைப் பீடமான புரட்சிகர நிறைவேற்றுக் குழுவில் இருக்கிறார். அமைப்பின் நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருக்கிறார்.

ஆனால் சில பத்திரிகைகள் அவரை வெறுமனே பேச்சாளராகவும், வேறு சில பத்திரிகைகள் அவரது தனித்தலைமைதான் ஈரோசை வழி நடத்துவதாகவும் கூறிவருகின்றன. இவை தவறான கருத்துக்களாகும்."என்றது அறிக்கை.

### நடைபவனி

1985 இன் பிற்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் நடைபவனி ரோந்துக்களை மேற்கொண்டு வந்தனர்.

கண்ணிவெடித் தாக்குதல்களில் இயக்கங்கள் கூடுதலான தேர்ச்சி பெற்று வந்தமையால், வாகனங்களை தவிர்த்து விட்டு நடை பவனியை ஆரம்பித்தது இராணுவம்.

எனினும், நடைபவனி ரோந்தும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில்தான் நடைபெற்றது.

இயக்கங்களின் கைகள்தான் யாழ்ப்பாணத்தில் ஓங்கத் தொடங்கியிருந்தன.

யாழ்ப்பாணக்குடாநாடு மெல்ல, மெல்ல படையினரின் கட்டுப்பாட்டை விட்டு விலகியது.

அக்கட்டத்திலும் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா சொன்னது இது:

"இன்னும் ஒரு வருட காலத்திற்குள் பயங்கரவாதிகளை முறியடித்து விடுவோம்."

ஜே.ஆர்.சொல்லி வாய்மூடுவதற்கு இடையில் மட்டக்களப்பில் கண்ணி வெடிகள் வெடித்தன.

(தொடர்ந்து வரும்)



## வை. 8 மீது 'ஒலிகன்' தாக்குதல்

18.11.95 அன்று காலை 7.40 மணியளவில் பலாலி படைத்தளத்திற்கு சமீபமாகவைத்து வை.8.ரக விமானம் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

பலாலி படைத்தளத்தில் இறங்குவதற்காக கடற்பரப்பின் மேலாக தாழப் பறந்தபோதே வை. 8 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

ஒலிகன் ரக சிறு பீரங்கிகளால் கடலில் படகில் இருந்து புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

முல்லைத்தீவுக் கடலில் ஜரிஸ்மோனா கப்பலை பணயமாக வைத்து இரண்டு டோறாப் படகுகளை புலிகள் தாக்கினார்கள் அல்லவா. அவற்றில் இருந்து நான்கு ஒலிகன் பீரங்கிகளை புலிகள் கைப்பற்றியிருந்தார்கள். அவற்றின் மூலமே வை.8 சுட்டு வீழ்த்தப்பட்டது.



டோறாப் படகில் கைப்பற்றப்பட்ட ஒலிகன் ரக பீரங்கிகளை புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகன் பார்வையிடும் காட்சி தான் படத்தில் உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

### அலசுவது – இராஜதந்திரி

# சூரிய நமஸ்காரத்துக்கு ஆப்பு வைத்த ஒப்பரேஷன் சூரியக்கதிர்

வருடந்தோறும் தமது வீட்டு முற்றங்களில் கோலமிட்டுப் பொங்கும் வடபகுதித் தமிழர்களில் எத்தனைபேர் இத்தடவை பொங்கல் பெரு நாளைக் கொண்டாடினார்கள் என்பதே கேள்வி.



லட்சக்கணக்கான தமிழ் மக்கள் தமது வீடு வாசல்களைவிட்டு வெளியேறி அகதிகளாக உள்ளனர். இந்நிலையில் தமது வாழ்வில் ஒரு புதிய ஆரம்பத்தைக்குறிக்கும் தைப்பொங்கல் திருநாளை மனதாரக் கொண்டாடும் நிலையிலோ அல்லது அப்பண்டிகையைப் பற்றி நினைக்கும் நிலையிலோ வடக்கு-கிழக்கின் மக்கள், குறிப்பாக வடபகுதி மக்கள் இன்றில்லை என்பது மட்டும் தெளிவு.

சூரியனுக்குப் பொங்கலிட்டு வணங்குவதே தைப்பொங்கல்.

ஆனால் 'சூரியக்கதிர்' என்ற பெயரில் ஆயுதப் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை, இந்த ஆண்டு தமிழர்களையும், அவர்களது சூரியநமஸ்காரத்தையும் பாழாக்கிவிட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தமது அரசாங்கத்தின் அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைக்கப்போவதாகச் சொல்லியிருந்தார். அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தை மாதமே தமிழர்களுக்குரிய முதன்மையான மாதம். எனவே அம்மாதத்தில் அரசியல் தீர்வு யோசனைகளை முன்வையுங்கள் என்று ஜனாதிபதியிடம் கேட்டிருந்தனர்.

இது தவிர கடந்தவாரம் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் விடுத்திருந்த வேண்டுகோளொன்றில், அரசாங்கத்தின் அரசியல் தீர்வு யோசனைகளைக் குழப்ப வேண்டாம் என்று ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளிடம் கேட்டிருந்தனர்.

ஆனால் இந்த வேண்டுகோள் விடுக்கப்படவேண்டியவர்கள் தமிழ் அரசியலாளர்களல்லர். தென்னிலங்கையின் பேரினவாதக் கும்பல்களை நோக்கியே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இந்த வேண்டுதலை விடுத்திருக்க வேண்டும்.

கடந்த காலங்களில் அரசியல் தீர்வுத் திட்டங்கள் எவ்வாறு தட்டிக்கழிக்கப்பட்டுவந்தன, தமிழ் மக்கள் எவ்வாறு ஏமாற்றப்பட்டார்கள்-வஞ்சிக்கப்பட்டார்கள் என்பதனை தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்குச் சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

பண்டா-செல்வா ஒப்பந்தம் நிறைவேறியிருந்தால் இன்று இந்த நாட்டில் இரத்தக்களரிக்கு இடமிருந்திராது என்று கூறும் ஒரு சாராரும் இருக்கின்றனர்.

ஆனால் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை முன்வைக்கத் தயாராக இருந்த சந்திரிகாவின் தந்தையார் பண்டாரநாயக்கா தமது கையாலேயே அதனை தமது வீட்டு வாசலில் வைத்துக் கிழித்தெறிந்தார்.

இதன் பின்னர் ஏற்பட்ட தீர்வு ஒப்பந்தங்களுக்கும் இதே கதியே ஏற்பட்டன. இந்நிலையில் தமிழர்களுடைய உரிமைகளை ஆட்சியாளர்கள் வழங்க முன்வந்தாலும் பேரினவாதிகள் அதனைக் குழப்பும் வகையில் தம்மைக்கூர்மையாக வைத்துள்ளார்கள் என்பதே கடந்தகாலங்களில் நிதர்ஷனமாகியுள்ளது.

1977ம் ஆண்டு பொதுத்தேர்தல் பிரசாரத்தின்போது தனிநாடு, தமிழீழம் என்ற கோரிக்கைகளுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியே உரமூட்டியிருந்தது. இதன் அடிப்படையிலேயே அன்று கூட்டணி பெருவெற்றியையும் பெற்றிருந்ததுடன் நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாகவும் இடம் பிடித்தது.

ஆனால் காலப்போக்கில் ஜே.ஆர்.அரசாங்கம் கொண்டுவந்த மாவட்ட அபிவிருத்தி சபைகளை ஏற்கவும் கூட்டணியினர் முன்வந்திருந்தனர்.

தமிழீழம், தனிநாடு, சமஷ்டி என்றெல்லாம் முழங்கியவர்கள் மாவட்ட அபிவிருத்திசபை என்ற குறைந்தளவிலான ஒரு தீர்வுத்திட்டத்தை ஏற்க முன்வந்திருந்தனர்.

இருந்தபோதிலும் அவர்கள் தமிழீழம், தனிநாடு என்று மூட்டி விட்ட தீ, யாழ்ப்பாணத்தில் நன்கு உள்ளார்ந்தமாக எரியவே ஆரம்பித்திருந்தது.

இன்று சுமார் இரு தசாப்தங்களுக்குப் பின்னர் அரசியல் வானில் ஒலிக்கும் கூட்டணியினரின் குரல்கள், தமிழீழம், தனிநாடு என்பவைபற்றி எதனையும் குறிப்பிடாததாக இருக்கின்றது.

எனவே ஆட்சியாளர்களே தமது தீர்வுத் திட்டம் குறித்து சரியான மதிப்பீடுகளைக் கொண்டிருக்காத இத்தருணத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளை நோக்கி அத்தீர்வுத்திட்டத்தைக் குழப்ப வேண்டாம் எனத் தெரிவித்திருப்பது வேடிக்கையானதாகவே இருக்கின்றது.

அரைகுறையான முறையில் மாவட்ட அபிவிருத்திசபை, பின்னர் மாகாண சபை என்றெல்லாம் கடந்த காலங்களில் தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டபோது அவற்றை ஏற்பதற்கும் கூட்டணியினர் தயாராகவே இருந்தனர்.

ஆனால் மேற்படி தீர்வுத் திட்டங்கள் தோல்விகண்டு அத்தீர்வுத்திட்டங்களுக்கு மேலானவகையில் புதிய தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும் என்ற அபிப்பிராயங்கள் வெளிவந்தபோது, அந்த அபிப்பிராயங்களுக்கும் கூட்டணியினர் 'சலாம்' போடவே செய்தனர்.

இந்நிலையில் ஏனைய தமிழ் கட்சிகளிடம் விரிவான முறையில் அரசியல் புத்திஜீவிகள் மட்டத்தில் தயாரிக்கப்பட்ட பல தீர்வுத்திட்டங்கள் கடந்த காலங்களில் எவ்வாறு கிழித்தெறியப்பட்டன என்பதையும் கூட்டணியினர் நன்கு அறிந்திருக்கவேண்டும்.

அத்துடன் மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவதாகவும் இருக்கின்றது.

அரசியல் தீர்வு யோசனைகளை ஆட்சியாளர்கள் கொண்டிருக்கலாம்; அத்தீர்வுயோசனைகள் கடந்த கால தீர்வுகளை விட மேம்பட்டத்தாகவும் இருக்கலாம். ஆனால் அத்தீர்வுயோசனை எவ்வளவு தூரம் நாட்டுமக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும்? அத்தீர்வுயோசனைகளில் உள்ள அம்சங்கள் எவ்வளவு தூரம் வடக்கு-கிழக்குத் தமிழர்களுக்கு ஏற்புடையவையாக இருக்கும்? என்பவையே பிரதானகேள்விகளாக உள்ளன.

அரசாங்கம் தீர்வுயோசனைகளில் பலவற்றைத் தெரிவித்துள்ளது.

ஆனால் அந்த யோசனைகளில் அரசியல் தீர்வின் அடிப்படை அம்சமான வடக்கு-கிழக்கு இணைப்புக்குறித்து எதுவும் உறுதியாக இல்லை.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பே தீர்வுத்திட்டத்தின் மூலாதாரமாக இருக்கவேண்டியதாகின்றது.

அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும், இந்த வடக்கு-கிழக்கு இணைப்பையே வலியுறுத்தி நிற்கின்றன.

ஆனால் சந்திரிகா அரசாங்கம் இத்தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து அது பற்றி ஆரம்பத்தில் பிரஸ்தாபித்தபோது, வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிராக தென்னிலங்கையில் பல குரல்கள் எழுந்தன.

தென்னிலங்கையின் புத்திஜீவிகள், கல்விமான்கள், உயர்பதவிக்காரர்கள் ஆகியோரை உள்ளடக்கிய குழுவொன்று கையெழுத்து வேட்டையை நடத்தி வடக்கு-கிழக்கு இணைப்புக்கு தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது.

அரசியல் தீர்வு யோசனைகள் தோல்விகண்டு விடலாம் என்ற அச்சம் ஆட்சியாளர்களிடமும் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே தென்னிலங்-கையில் கிராம, நகர மட்டங்களில் தீர்வு யோசனைகள் குறித்து கருத்தரங்குகள், கூட்டங்களை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் நடத்தி வருவதையும் காணமுடிகின்றது.

அரசியல் தீர்வு யோசனைகளைக் குழப்ப வேண்டாம் என்று கூறியுள்ள கூட்டணியினர் தமது திட்ட வட்டமான அரசியல் தீர்வுத் திட்டம் குறித்துத் தெளிவுபடுத்த வேண்டியவர்களாகின்றனர்.

அரசாங்கம் அரசியல் தீர்வு யோசனைகளைத் தயாரித்து வைத்துள்து. ஆனால் இத்தீர்வு யோசனைகள் எவ்வகையிலும் இறுதியும், முடிவுமானவையல்ல.

இத்தீர்வுயோசனைகள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவினாலும், பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு மூலமாகவும் மட்டுமல்ல; எல்.ரி.ரி.ஈ.யினரால் கூட ஏற்கப்படவேண்டியதாக இருக்கின்றது.

எனவே தீர்வுத்திட்டத்தை முன்வைக்கும் அதேவேளை அது குறித்து பரந்துபட்ட பேச்சுக்களையும் ஆரம்பிக்கவேண்டியது இன்றியமையாததாகின்றது.

அரசியல் தீர்வு யோசனைகளை முன்னெடுப்பதில் வெளிநாட்டு மத்தியஸ்த்தம் பற்றி பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

எல்.ரி.ரி.ஈ.யினர் கூட ஒரு மூன்றாவது சக்தியின் மத்தியஸ்த்தத்துடன் பேச்சுக்களுக்கு வரத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூட முன்பு தமது கருத்துக்களை வெளியிட்டபோது, தமது அரசாங்கத்தினால் முடியாவிட்டால் வெளிச்சக்தியொன்றின் உதவியுடனாவது சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இன்றைய காலகட்டத்தில் அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகளை ஒரு நடுநிலையான மத்தியஸ்த்தத்துடன் ஆரம்பிக்கவேண்டியதே அவசியமானதாகின்றது.,

ஏனெனில் எங்கே, எங்கிருந்து

மக்களின் பரிதாப நிலைகுறித்தே சிந்திக்கவேண்டியதாகின்றது.

வடக்கே தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறியுள்ள மக்கள் அகதிகளாகவும், அநாதரவாகவும் அபலைகளாகவும் மாறியுள்ளனர்.

குடிபெயர்ந்துள்ள மக்கள் பெரும் பாதிப்புக்களை அடைந்து வருவதாக வடக்கே இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அத்தகைய தகவல்கள் தவறானவை, மக்களுக்கு போதியளவில் வேண்டியவை கிடைக்கின்றன என்று மறுபுறத்தே இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்த மக்களின் சௌகரியங்கள், அசௌகரியங்களைவிட அவர்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டிய பணியே விரைவுபடுத்தப்பட வேண்டியதாக இருக்கின்றது.

பாதுகாப்பு அமைச்சர் கேர்னல் அனுருத்தரத்வத்தை எதிர்வரும் சித்திரைப் புதுவருடக் கொண்டாட்டங்களுக்கு முன்பதாக வடக்கே, அங்கிருந்தும் குடிபெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவார்கள் என்று கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கை அரசியல் சார்ந்ததாகவா? அல்லது இராணுவ அணுகுமுறைகள் சார்ந்ததாகவா? இருக்குமென்பதே இடம் பெயர்ந்த மக்களின் மனதில் எழும் கேள்வியாக இருக்கின்றது.

வடக்கே இராணுவம் பெரும் பலத்துடன் யாழ்ப்பாணம் நோக்கி நகர ஆரம்பித்ததாலேயே அங்கிருந்தும் அப்பாவி மக்கள் அகன்றுள்ளார்கள்.

இதன்மூலம் எந்தவொரு இராணுவ அழுத்தங்களையும் ஏற்பதற்குத்தாம் தயாராக இல்லை என்பதனையே அவர்கள் நிரூபித்துள்ளனர்.

## வட பகுதி மக்களின் மன வைராக்கியத்துக்கு சவால் விடும் இன்றைய சூழ்நிலைகள்



சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது என்பதும், எத்தகைய சூழ்நிலையில் அப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டுமென்பதுமே பிரதான கேள்வியாக உள்ளன.

சர்வதேசரீதியாக இலங்கையின் பிரச்னையை ஒத்த பிரச்னைகளுக்கு மூன்றாவது சக்தியின் மத்தியஸ்த்தம் பெரிதும் துணைபுரிந்திருக்கவே காணப்படுகின்றது.

இந்நிலையில் ஒரு நேர்த்தியான தீர்வுக்கு வெளிநாட்டு மத்தியஸ்த்தம் ஒன்றைக் கொண்டுவருவதில் எவ்வித குறைபாடும் இருக்கமுடியாது.

ஆனால் அந்த மூன்றாவது சக்தியின் மத்தியஸ்த்தம் என்பது மிகவும் நடுநிலையானதாகவும் இருதரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதாகவும் இருக்கவேண்டியதாகின்றது.

அரசியல் தீர்வு யோசனைகள், மற்றும் அரசியல் தீர்வுமுயற்சிகள் ப்பற்றிப் பிரஸ்தாபிக்குமுன்னர் வடக்கே இருந்து இடம்பெயர்ந்துள்ள லட்சக்கணக்கான

வடக்கே மீண்டுமொரு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் என்ற செய்திகளும் வலுவடைந்து வரக் காணப்படுகின்றன.

எனவே தொடர்ந்து 'மரண அவஸ்த்தை'களுக்குள் வாழும் ஒரு சூழ்நிலையையே வடக்கு-கிழக்கு மக்கள் எதிர்கொள்ளவேண்டிய நிலை காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் எத்தகைய கஷ்ட-நஷ்டங்களுக்கு மத்தியிலும் வடபகுதி மக்கள் மனந்தளராது வாழ்ந்து வந்தனர்.

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகளில் யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களின் பெறுபேறுகள் அகில இலங்கை ரீதியாக இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளமை, யாழ்ப்பாண மக்களின் மன வைராக்கியத்துக்கு சான்றாக இருக்கின்றது.

ஆனால் தற்போது தோன்றியுள்ள நிலை இந்த வைராக்கியத்துக்குக்கூட சவால் விடுவதாகவே இருக்கின்றது.



படிப்பகம்

# 18

எழுதுவது ரசிகன்

மனிதவெடிகுண்டு

## சென்றவாரம்

சவுதி அரேபியா – மற்றும் ஈரான் எண்ணெய் வள அமைச்சர்களை தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டினார் ஈராக் உப அதிபர் சதாம் ஹுசைன் (இன்றைய அதிபர்). அதற்காக கார்லோஸ் தலைமையில் அனுப்பப்பட்ட அதிரடிக் குழுவினர் எண்ணெய் வள அமைச்சர்களது கூட்டம் நடைபெறும் கட்டிடத்துக்குள் தந்திரமாக புகுந்து கொள்கின்றனர்.

இனி.....

லிப்ட் கதவு விரிந்தது. கார்லோஸ் முதலில் வெளியே பாய, அவனைத் தொடர்ந்து இயந்திரத் துப்பாக்கிகளோடு அதிரடிக் குழுவினர்.

# இன்னும் எம்மை என்ன செய்யப் போகிறான்

மாநாட்டு மண்டபத்துக்குள் காவலிருந்த பொலிசார் முதலில் திகைத்து, மறு நொடியே உஷாராகி, "யாரும் அசையக் கூடாது" என்ற கார்லோசின் கட்டளைக்கு பணிந்துநிற்க,

அன்ரன் ரிச்லர் என்ற பொலிஸ்காரன் கார்லோஸ் கவனம் வேறுபுறம் திரும்பிய ஒரு நொடியை மிக துல்லியமாகக் கணக்கிட்டு,

கார்லோஸ் மீது பாய்ந்து, இயந்திரத் துப்பாக்கியை பற்றிக்கொள்ள,

கார்லோஸின் இடதுபுறத்தில் நின்ற குரோச்சியா தனது பிஸ்ரலை உயர்த்தி, விசையைத் தட்டினாள்,

பிஸ்ரல் ஏமாற்றவில்லை, பொலிஸ்காரனின் கழுத்தில் குண்டு பாய்ந்தது.

அவன் தரையில் சரிந்தான். தரையில் சரிந்தவனின் சட்டைக் கொலரில் பிடித்து இழுத்துவந்த குரோச்சியா,

திறந்திருந்த லிப்ட்டுக்குள் அவனை காலால் உதைத்து தள்ளி, பட்டனை அமுக்க, லிப்ட் மூடிக்கொண்டு, தரையை நோக்கி நழுவியது.

அந்த பரபரப்புக்கிடையிலும் கார்லோஸ் குரோச்சியாவை வியப்போடு நோக்கினான்.

இதுவரை தான் சந்தித்த பெண்களுக்குள் குரோச்சியா தனித்துவமானவள் என்று தனது மனதில் குறித்துக் கொண்டான்.

சுடுவார்கள். எதற்கும் துணிந்தவர்கள் என்று தெரிந்ததும் ஏனைய பொலிசார் ஒருங்கி வழிவிட,

கார்லோஸும் குழுவினரும் மாநாட்டு மண்டபத்துக்குள் நுழைந்தபோது,

பயந்ததுபோல நடித்து முதல் ஆளாக தனது இரு கைகளையும் தலைக்கு மேலே உயர்த்திக் கொண்டவர் ஈராக் பிரதிநிதிகளின் பாதுகாவலர் அல் - கஃபாலி.

மாநாட்டு மண்டப உள் அமைப்புப் பற்றி கார்லோஸுக்கு தகவல் கொடுத்ததே அவர்தான்.

கார்லோஸும் அல்-கஃபாலியும் கண்களால் பேசிக் கொண்டதை யாரும் கவனிக்கவில்லை.

அப்போதுதான் அல் கஃபாலி ஒரு தவறு செய்தார்.

அந்த மண்டபத்தைவிட்டு மெல்ல நழுவி ஓட முற்பட்டார்.

அதுவும் ஒரு நாடகம் என்று அறியாத குரோச்சியா அவரை நோக்கி ஓடினாள்.

கார்லோஸ் தவிர அந்தக் குழுவில் உள்ள எவருக்கும் தமது நடவடிக்கைக்கும் ஈராக்குக்கும் உள்ள தொடர்பு தெரியாது.

அல் கஃபாலி தகவல் கொடுத்ததும் தெரியாது.

அதனால்தான் கஃபாலி நழுவ முற்பட்டதை தடுக்க தனது பிஸ்ரலுடன் ஓடினாள் குரோச்சியா.

கார்லோஸால் தடுக்க முடியவில்லை. எப்படி விளக்குவது? இரகசியம் பரகசியமாகி விடுமே.

குரோச்சியாவின் பிஸ்ரல் கஃபாலியின் முதுகில் பதித்தது.

"நில். மீறினால் பிணமாவாய்" என்ற குரோச்சியாவை பயிற்சிபெற்ற பாதுகாவலரான கஃபாலி சட்டென்று திரும்பி மடக்கி இடையில் கைகொடுத்து இழுத்தபடி மண்டபக் கதவுக்கு வெளியே செல்ல,

கார்லோஸ் குழுவில் இருந்தவர்கள் கார்லோஸ் எந்த உத்தரவும் போடாமையால் அசைவற்று நின்று கொண்டிருக்க,

டுமீல்!

வெடிச்சத்தம் கதவுக்கு வெளியே கேட்டது. கார்லோஸ் கலின் மீது பார்வையைச் செலுத்த, அவன் துப்பாக்கியை முன்னே நீட்டியபடி ஓடி வெளியே கண்ட காட்சி:

குரோச்சியா.. அழகான குரோச்சியா, துணிச்சலான குரோச்சியா.

அவள்.. அவள்..

செத்துப்போகவில்லை. கஃபாலியை செத்துப்போகச் செய்திருந்தாள்.

இரத்தம் நெஞ்சில் இருந்து கொட்டக் கொட்ட,

நிச்சயமாய் செத்துப் போயிருந்தார் அல் கஃபாலி.

அவரது உடலை சோதனையிட்ட குரோச்சியாவின் கையில் தட்டுப்பட்டது, கஃபாலி தனது சட்டையின் மார்புப் பகுதியில் மறைத்துவைத்திருந்த பிஸ்ரல்.

கஃபாலி நினைத்திருந்தால் அதனை உருவி குரோச்சியாவை சுட்டிருக்க முடியும். அவர் நடத்தியது நாடகம் என்பதால் அப்படி செய்ய நினைக்கவேயில்லை.

"பிஸ்ரல் இருந்தும் பாவிக்கவில்லை, முட்டாள்" என்று முணு முணுத்தாள் குரோச்சியா.

குரோச்சியா உள்ளே வந்தபோது அவள் இரு கரத்திலும் இரண்டு பிஸ்ரல்கள் இருந்ததை வைத்து, நடந்தது என்னவென்று கார்லோஸுக்குப் புரிந்து விட்டது.

குரோச்சியாவைப் பாராட்டுவதா? கஃபாலிக்காக வருந்துவதா? சதாம் ஹுசைன் என்ன நினைப்பாரோ? கார்லோஸ் குழம்பிப் போனதில் சூழலைக் கவனிக்கத் தவறினான்.

எந்தவொரு சூழலிலும் தலைவன் குழம்பக்கூடாது. குழம்பினால் அணி மொத்தமும் குழம்பிவிடும்.

லிபியாவின் பிரதிநிதிகளில் ஒருவரான யூசெஃப் இஸ்மிர்லி. கட்டுமஸ்தான உடம்பு. ஆயுதப் பயிற்சியிலும் தேர்ச்சி உண்டு. எதிரியை ஒரு நொடியில் மதிப்பிடும் புத்திசாலித்தனமும் உண்டு.

கார்லோஸ் குழம்பியதை புரிந்துகொண்டு அவன் கரத்தில் இருந்த இயந்திரத் துப்பாக்கியை குறிவைத்து பாய்ந்து, கார்லோஸின் மணிக்கட்டில் தனது வலது கரத்தை கத்தியாகப் பாவித்து ஒரு வெட்டு வெட்ட, இயந்திரத் துப்பாக்கி இப்போது யூசெஃப் இஸ்மிர்லியின் கைக்குப் போனது.

திகைத்துப்போன கார்லோஸ், யூசெஃப் தன்னை நோக்கி சுடப் போவதை ஊகித்து சட்டென்று தரையில் விழுந்து படுத்துக் கொள்ள, குண்டு கதவில் பாய்ந்தது.

தரையில் படுத்த கார்லோஸ் தனது இடுப்பில் இருந்த பிஸ்ரலை கண்ணிமைக்கும் நேரத்தில் உருவி, யூசெஃப் இஸ்மிர்லிமீது சுட்டான்,

சரியான குறி.

நெஞ்சில் குண்டுபாய மல்லாந்து சரிந்தார் யூஃசெஃப் இஸ்மிர்லி.

எழுந்த கார்லோஸ் பிஸ்ரலை இடுப்பில் செருகிக்கொண்டு, யூசெஃப்பிடம் இருந்த தனது துப்பாக்கியை எடுத்துக்கொண்டு,

மூச்சுவருகிறதா என்று அவரது மூக்கருகே கைவைத்து பார்த்த போது,

யூசெஃப் செத்துப் போயிருந்தார்.

குழு முழுவதும் தமது தலைவன் கார்லோஸை வியப்போடு நோக்கிற்று.

"குயிக் மூவ்" என்றான் கார்லோஸ்.

மற்றொரு கதவு திறந்து துப்பாக்கிகளோடு உள்ளே பாய,

வெளியே நடப்பது எதுவும் ஏ.சி. செய்யப்பட்ட உள் மண்டபத்துக்குள் கேட்காதிருக்க,

தீவிர விவாதத்தில் இருந்த எண்ணெய் வள அமைச்சர்கள் உச்சபட்ச அதிர்ச்சியில் திணற. இதயம் பலவீனமான சிலர் தமது நெஞ்சை பிடித்துக் கொள்ள,

கார்லோஸின் குரல் உயர்ந்தது: "எல்லோரும் தரையில் படுத்துக் கொள்ளுங்கள். ஒரு தலை உயர்ந்தாலும் உடனே குண்டு பாயும்."

அதேநேரம் கலினும், குரோச்சியாவும் உள் மண்டப மின்சார பல்புக்களை நோக்கி குறிதவறாது சுட்டுத்தள்ள,

உள்மண்டபத்தை இருள் விழுங்கி ஏப்பமிட்டது.

அமைச்சர்களும், பிரதிநிதிகளும் தரையில் விழுந்து படுத்துக் கொள்ள, இருளுக்கு தன் கண்களை பழக்கப் படுத்திக் கொண்டு விட்டு, கார்லோஸின் குரல் கம்பீரமாக ஒலித்தது.

"என் பெயர்தான் கார்லோஸ். அறிந்திருப்பீர்கள். இரக்கம் என்பது என் அகராதியில் கிடையாது. குரோச்சியா! தரையில் கிடக்கும் எண்ணெய்க் குதங்களை எண்ணிப்பார்?"

குரோசியா தன் ஜீன்ஸ் பொக்கற்றில் இருந்து பென்டோர்ச் எடுத்து, சின்ன வெளிச்சத்தில் தரையில் கிடந்த அமைச்சர்களின் தலைகளை எண்ணிவிட்டு,

"பதினொரு பேர்" என்றாள்.

"பெறுமதியான தலைகள் உலகிலேயே அதிக பெறுமதியான தலைகள். ஆனால் என்ன ஒரு பிரச்சனை என்றால் எங்கள் துப்பாக்கிகளுக்கு உங்கள் பெறுமதி தெரியாது. உங்கள் ஒவ்வொரு தலையும் எத்தனையோ ஆயிரம் கோடி பெறும். அந்தக் கோடிகள் எல்லாம் ஒரு துப்பாக்கிக் குண்டின் முன் தூசு பெறும்."

சொல்லிவிட்டு கார்லோஸ் சிரித்தான். தரையில் கிடந்தவர்கள் தங்களை கார்லோஸ் என்ன செய்யப் போகிறான் என்று தெரியாமல் தவிக்க,

"எண்ணெய் விலை எவ்வளவு என்று நீங்கள் தீர்மானிக்க முடியும். உங்கள் உயிரின் விலை என்னவென்று நான்தான் தீர்மானிக்க வேண்டும்"

என்றான் கார்லோஸ்.

கார்லோஸ் குழுவினரின் கண்களில் படாமல் ஒரு உருவம் மெல்ல மெல்ல நகர்ந்து ஒரு அறைக்குள் புகுந்து கொண்டது.

அந்த அறைக்குள் இருந்த தொலைபேசியில் பொலிசாருக்கு தகவல் சொன்னது.

அப்போது நேரம் பகல் 11.45.

(தொடர்ந்து வரும்)



**இதுவரை உலகில் நடைபெற்றபணயக் கடத்தலில் மிகப் பாரியது 1975 டிசம்பரில் கார்லோஸ் குழுவினரால் செய்யப் பட்டதுதான். உலகில் மிகப் பெரிய பணக்கார நாடுகளின் அமைச்சர்கள் கார்லோஸின் காலடியில் உயிர்பிச்சை கேட்டுக் கிடந்தனர்.**



யமானி
சவூதி அரேபிய
எண்ணை வள அமைச்சர்



ஜம்ஷிட்
ஈரான்
எண்ணை வள அமைச்சர்




---

அமெரிக்க சஞ்சிகைகளில் வெளியான படம் ஒன்று பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தி விட்டது.

அமெரிக்க ஜனாதிபதி பில்கிளிண்டன் தனது அருமைத் துணைவியாரின் கழுத்தை நெரிக்க, பாவம் கிளாரி என்ன பாடு படுகிறார் பாருங்கள்.

# 'ஐயோ பாவம் கிளாரி'



கிளிண்டனின் அரசியல் எதிரிகளுக்கு மகாசந்தோசம். இந்தப் படம் ஒன்றே போதும். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாய்க்குலங்களின் அமோக எதிர்ப்பை வைத்து கிளிண்டனை 'கிலீன் போல்ட்' ஆக்கிவிடலாம் என்று நினைத்துவிட்டனர்.

அந்த நினைப்போடு செய்தியைப் படித்தபோது ஏமாற்றம் காத்திருந்தது.

படத்தில் இருப்பது கிளிண்டனும் அல்ல, கிளாரியும் அல்ல. அவர்களை உரித்து வைத்தது போல உள்ள வேறு இருவர்.

கிளிண்டன் போலவும், கிளாரி மாதிரியும் இருந்த இரண்டு பேரைத் தேடிப்பிடித்து அமெரிக்காவையே கலக்கி விட்டார்கள் பத்திரிகைக்காரர்கள்.

போலிகள் ஜாக்கிரதை.

---

## புற்றுநோய் நிபுணர் டாக்டர் திருமதி வாணி உ.பிள்ளை அவர்களை இந்தவாரம் சந்திக்கிறோம்.

# ஹலோ டாக்டர்

"வணக்கம் டாக்டர். உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. புற்றுநோய் விடயத்தில் நீங்கள் ஒரு நிபுணர். அதனால் என்னிடம் உள்ள கேள்விகளுக்கு திருப்தியான விடைகிடைக்கும் என்பதால் இரட்டிப்பு மகிழ்ச்சி."

"நன்றி. கேளுங்கள்!"

**"எனது தம்பிக்கு 6 வயது. மூளைப் புற்றுநோய் ஏற்பட்டு சத்திர சிகிச்சையின் பின் கதிர் சிகிச்சை செய்கிறார்கள். இவருடைய புற்று நோய் மாறக்கூடியதா டாக்டர்?"**

"அதிகமாக இந்த வயதுச் சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய கட்டிப்புற்றுநோயில் 40% மூளைப்புற்று நோயாகலாம். இவற்றில் பலவகையுண்டு. சத்திரசிகிச்சையின்போது புற்றுநோய்க் கலங்கள் முற்றாக அகற்றப் பட்டிருப்பின், நுண் காட்டியால் பார்க்கக் கூடிய அளவு கலங்கள் மட்டுமே இருப்பின் கதிர்ச்சிகிச்சை மூலம் தொலைத்துவிடலாம். மூளையில் இந்தநோய்க்கலங்கள் ஊடுருவி பரவக்கூடிய சாத்தியமுள்ள இடங்களனைத்தும் கதிர்ச்சிகிச்சைக்கு உட்படுத்தப் படும். இந்தப் புற்றுநோய்வகை தகுந்த வைத்திய சிகிச்சை மேற்கொள்ளப்பட்டால் 45-55% சிறார் 5 வருடத்துக்கும் அதற்கு மேலும் வாழக்கூடியதாக இருக்கும். இதை 5 Year Survival என்பார்கள்."

**"கர்ப்பப்பை வாசல் புற்றுநோய் உள்ளவர்கள் கதிர்ச்சிகிச்சை செய்து கொள்வது நல்லதா? சத்திர சிகிச்சை செய்து கொள்வது நல்லதா?"**

"கர்ப்பப்பை வாசல் புற்றுநோய் பல கட்டங்களில் அமைந்தது. ஆரம்பக் கட்ட நோய்க்கு சத்திரசிகிச்சை, கதிர்ச்சிகிச்சை இரண்டுமே பயன் கொடுக்கும். இருந்தாலும் புற்றுநோய்க் கலங்கள் அயலிலுள்ள வேறு இழையங்களுக்கோ நெறிகளுக்கோ பரவியிருந்தால் சத்திரசிகிச்சையை விட கதிர்ச் சிகிச்சையே சிறந்தது. இதனால் பல பின் விளைவுகளைத் தவிர்க்கக் கூடியதாயிருக்கும்."

**"எனது பெரிய தந்தையார் உணவு உண்ணுவதற்கு மிகவும் சிரமப்படுகிறார். சோறு கறி சாப்பிட முடியாது. கடந்த 4 மாதமாகச் சிரமப்பட்ட இவர் இப்போது தண்ணீரும் குடிக்க கஷ்டப்படுகிறார். சில சமயம் வாந்தி ஏற்படுகிறது. அயலிலுள்ள வைத்தியர் இது புற்றுநோயாக இருக்கலாம் என்று சந்தேகித்து-சில எக்ஸ்ரே படங்களை எடுத்து யாரேனும் விசேஷ வைத்தியரிடம் காட்டச் சொல்கிறார். இது புற்றுநோயாக இருக்குமா?"**

"அதிகமாக 45 வயதுக்கு மேற்பட்டோருக்கு நாளுக்கு நாள் ஏற்படும் விழுங்குவதற்கு கஷ்டமான நிலை புற்றுநோயாக இருக்கும் என்னும் சந்தேகத்தை எழுப்பலாம். உங்கள் வைத்தியர் சொன்னதுபோல் Barium Swallow என்னும் எக்ஸ்ரே படங்களும் Oesophagoscopy எனும் களப்பரிசோதனையிலும் இந்நோயைக் கண்டறியலாம். இதனால் தகுந்த வைத்தியரை நாடச்சொல்லுங்கள்."

**"2 வயதுச் சிறுவனான என்தோழியின் மகனுக்கு வயிற்றில் கட்டியொன்றுள்ளது. என்றும் அது வலது சிறுநீரகத்தில் உள்ளது என்றும் கூறுகிறார்கள்- வைத்தியர்கள். மறுவாரம் இவருக்கு சத்திரசிகிச்சை. இவர் நிலையை சிறிது எடுத்துக் கூறுங்கள் டாக்டர்."**

"இச்சிறுவனுக்கு Wilms Tumour என்னும் புற்றுநோயாக இருக்கலாம். இது அதிகமாக இவ்வயதுச் சிறுவர்களுக்கு ஏற்படவாய்ப்புண்டு. ஆரம்பகட்டமாக இருந்தால் சத்திரசிகிச்சையும் பின் மருந்துகள் ஏற்றுவதனாலும் இந்நோய் மாற்றக்கூடியதாகவோ-கட்டுப்படுத்தக் கூடியதாகவோ அமையும். சிறுவயதில் ஏற்படின் இருக்கும் குணங்கள் வயது ஏறியபின் 5-6 வயதில் வரும்போது தன்மை மாறும். உங்கள் தோழியின் மகனுடைய நோய் அதிகம் பாதிப்புள்ளவர்க்கமா இல்லையா என்பது சத்திர சிகிச்சையின் பின் Pathology பரிசோதனையின் பின்பே தெரியவரும்."



**"எனது தந்தையின் சகோதரிக்கு வயது 20. அவருக்கு முரசுவீங்கி முரசால் இரத்தம் வருகின்றது. சிலர் இது இரத்தப் புற்றுநோய்க்கு அறிகுறி என்கின்றனர். அப்படியும் இருக்குமா?."**

"முரசு வீங்கி இரத்தம் வருவதும் இரத்தப்புற்று நோய்க்கு ஓர் காரணமாயினும்- இதற்கு மேலும் பல காரணங்கள் இருக்கலாம். வாய்ச் சுகாதாரம் சீர்கெட்டு இருப்பது முரசு வீக்கத்துக்கு காரணமாகலாம். எதற்கும் தகுந்த பரிசோதனைகள் வேண்டும்."

**"எனது பெரிய பாட்டாவின் வயது 60. இவருக்கு வாயில் ஒரு மாதமாக ஓர் புண் ஏற்பட்டு இருக்கிறது. இது வாய்ப்புற்று நோயின் அடையாளமாக இருக்குமா டாக்டர்?"**

"வயது வந்தோர்க்கு இவ்விதப் புண்கள் ஏற்படுவது நல்லதல்ல. இதனைத் தகுந்த வைத்தியரிடம் காட்டி பரிசோதனை செய்வது நல்லது. உடல்நிலை நன்றாக இருந்தால்- புற்றுநோயாக இருந்தாலும் கதிர்ச்சிகிச்சை மூலம் குணம் பெறலாம்."

"நன்றி டாக்டர்."

www.padippakam.com

# எப்படி.. எப்படி.. அது எப்படி?

என்னமோ நடக்குது. எப்படியோ இருக்குது. நம்பமுடியாத நடப்பெல்லாம் நடக்குது. அப்படித்தான் நினைக்க வேண்டியிருக்கிறது. செய்தியைக் கேளுங்கள். தமிழ்நாட்டில் ஈரோடு பகுதியின் அருகே கொங்கனாம்பள்ளி என்றொரு கிராமம் இருக்கிறது. அங்கு ஒரு நாய் குட்டி போட்டது. மூன்று குட்டிகள். அதிலென்ன ஆச்சரியம் என்பீர்கள்? மூன்றுமே பூனைக் குட்டிகள் போல இருக்கின்றன. இந்த தகவலை படத்துடன் வெளியிட்டுள்ளது தமிழகத்தின் பிரபல தினசரியான 'தினத்தந்தி'.



# மொத்தம் 37

அவுஸ்த்ரேலியாவில் மெல்போர்ன் நகரில் திரு -திருமதி எம்.பி.ஃபோர்ட் தம்பதிகள் பன்றி வளர்த்தார்கள். 1993 செப்டம்பர் 21ம் திகதி அவர்கள் வளர்த்த பன்றி 37 குட்டிகள் போட்டது. உடனே உலக சாதனைப் புத்தக நிறுவனத்திற்கு தகவல் போனது. சாதனை படைத்த பன்றியும், குட்டிகளும் மட்டுமல்ல திரு ஃபோர்ட்டும் கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துவிட்டார். அந்தப் பன்றிக்கு நன்றி சொல்லியிருப்பார் ஃபோர்ட்.



தகவல் பெட்டி

# தலையானது தரையின் மேலே

இந்தியாவின் யோகாசனப் பயிற்சி நிலையத்தில் கிளிக்கான படம் இது.

ஆயிரக்கணக்கானோர் ஒரே நேரத்தில் தலைகீழாக சிரசாசனம் செய்யும் காட்சி.

சிரசாசனம் செய்வதால் உடலுக்கு எண்ணற்ற ஆதாயங்கள் கிடைக்கின்றன. உடல் எடை குறைவதும், இரத்த ஓட்டம் சீராவதும் முக்கியமான பலன்கள். உடலுக்கு ஆரோக்கியமான சிரசாசனம் புகைப்படத்திற்கும் அழகாகியிருப்பது விழிகளுக்கு வியப்பூட்டுகிறது அல்லவா. மீண்டும் ஒரு முறை படத்தை பார்த்துக் கொள்ளுங்கள்.



# கவனிக்க யாரும் இல்லை

என்ன இதெல்லாம்? கூர்ந்து பாருங்கள். எல்லாமே கார்கள்தான்! இதென்ன கார் பார்க்கிங்கா? இல்லை, இல்லவேயில்லை. விலை போகாத கார்களை இப்படி அடுக்கி வைத்திருக்கிறார்கள். கார் உற்பத்தியில் பலத்த போட்டி. விதம் விதமான கார்கள் சந்தைக்கு வருகின்றன. அதனால் பழைய ரக கார்களை வாங்க ஆள் இல்லை. படத்தில் இருப்பது இங்கிலாந்தின் 'போட்' நிறுவனம் தாயரித்த கார்கள். ஜப்பான் கார்கள் புதிய தொழில் நுட்பத்துடன் சந்தைக்கு வந்துவிட்டதால் இவற்றை யாரும் திரும்பியே பார்க்கவில்லையாம். நம் நாட்டில் என்றால் தவித்த முயல் அடிக்க ஒரு கியூவே நிற்கும். அங்கு அப்படியில்லை.



# கல்யாணமாம் கல்யாணம்



ஆயிரம் பேருக்கு திருமணம், ஐயாயிரம் பேருக்கு ஒரே மேடையில் திருமணம் என்றெல்லாம் தமிழ்நாட்டில் ஜெயலலிதா கலக்குவதெல்லாம் சர்வசாதாரணம். படத்தில் பாருங்கள், எல்லோருமே கல்யாண ஜோடிகள். உலகில் நடை பெற்ற மாபெரும் கல்யாண விழா இதுதான். மொத்தம் 35 ஆயிரம் ஜோடிகளுக்கு கல கலப்பாக கல்யாணம் நடத்திவைக்கப்பட்டது. 35 ஆயிரம் ஜோடிகளும் ஒன்றாகக் குழும ஒரு இடம் வேண்டுமல்லவா. 1988இல் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற சியோல் மைதானத்தில் ஜோடிகளை நிறுத்தி மோதிரம் மாற்ற வைத்தார்கள். தென்கொரிய ஜனாதிபதி தலைமையில் இந்தக் கலாட்டா கல்யாணம் நடைபெற்றது. கிறிஸ்தவ நிறுவனம் ஒன்றுதான் இந்த திருமணங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. உலக சாதனைத் திருமணம். ஜெயலலிதா அறிந்தால் பொறாமைப் படப்போகிறார்.

# கால்கள் ஐந்து

தமிழ் நாட்டில் நாய் அதிசயங்கள் அதிகமாகிவருகின்றன. தமிழ்நாட்டில் விழுப்புரம் பகுதியில் நாய் ஒன்று குட்டிகளைப் போட்டது. அதில் ஒரே ஒரு குட்டி மட்டும் ஐந்து கால்களோடு அதிசயக் குட்டியாக இருக்கிறது. வாலுக்கு பக்கத்தில் இருக்கும் அந்த ஐந்தாவது கால் படுகுள்ளம். அதனால் நடக்க முடியாது. இருப்பது ஐந்துகால். நடப்பது நாலுகாலில்தான்.





படிப்பகம்

www.padippakam.com

# கசட் விற்பனையில் சாதனை ஹம்மா, ஹம்மா 45 இலட்சம்

ஏ.ஆர். ரகுமானை சென்ற ஆண்டின் சிறந்த கலைஞராக சிறப்பித்துள்ளது குமுதம் சஞ்சிகை. அதற்குப் பொருத்தமானவர்தான் ரகுமான்.

நம் நாட்டு வானொலிகளிலும் ஏ.ஆர். ரகுமான் பாடல்கள்தான் வழிந்து கொண்டிருக்கின்றன. தொலைக் காட்சிகளிலும் அதே. அதே.

சென்ற ஆண்டு இந்தியாவில் மட்டும் பம்பாய் பட பாடல்கள் இந்தியில் தூள் கிளப்பிவிட்டன. இந்தியில் கசட் உரிமைபெற்ற பாலிகிராம் நிறுவனம் படு திருப்தியில் இருக்கிறது. 45 இலட்சம் கசட்டுக்கள் விற்றுத்தீர்ந்துவிட்டன என்றால் சும்மாவா.

பம்பாய் பாடல் கசட்டுக்கள் விற்பனையில் சாதனைபடைத்துவிட்டதால் ரகுமானின் பாடல் கச்ட்டுக்களுக்கு விற்பனை உரிமை பெற பலத்த போட்டி நிலவுகிறது.

அகில இந்திய அளவில் ஏ.ஆர். ரகுமானின் இசை பிரபலம் பெற்றுவிட்டது. பிரபல இந்தி இசை அமைப்பாளர்கள் பலர் கூட ரகுமான் இசையைக் கொப்பியடிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

"மிகக் குறுகிய காலத்தில் மிகச் சில பாடல்கள் மூலம் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியவர் ஏ.ஆர். ரகுமான்" என்று குமுதம் சொல்லியிருப்பது மெத்தச்சரி.

# சினி விசிட்



'தொட்டு தொட்டு பேசும் சுல்தானா, தொட்டவுடன் நெஞ்சில் தில்லானா' என்று தொடங்கும் பாடலுக்கு 50 நடனக் கலைஞர்களுடன் துள்ளியாடினார் ரம்பா. பாடல் இடம் பெறும் ப... போலியன் இருவரும் இணைந்து நடித்துவரும் படம். ஆ... நடிக்கிறார் நெப்போலியன்.

சங்கீதா மன்சூர் அலிகான், கவுண்டமணி, செந்தில், ம... ராதிகா, யுவஸ்ரீ, ராஜ் சுந்தரம், (பிரபுதேவாவின் அண்ணர்) ஆகியோர் நடிக்கின்றனர். பாடல் காட்சியில் ரம்பாவோடு ஆடுகிறார் ராஜ் சுந்தரம்.

## தொட்...

## இயக்கம் தீவிரவாதி

எப்போதுமே சர்ச்சைகளை கிளப்பும் நடிகர்கள் பட்டியலில் உள்ளவர் மன்சூரலிகான். அவர் புதிதாக தயாரிக்கப் போகும் படத்திற்கு வைத்துள்ள பெயர் 'போராளி'. அதுமட்டுமல்ல படத்தை இயக்கப் போவது ஒரு புதியவராம். அவரது பெயர்தான் வயிற்றை கலக்கப் போகிறது. இயக்குநர் பெயர், தீவிரவாதி. மன்சூரலிகான் தானோ?

## பட்... சிகரெட்... பட்

பம்பாய் நடிகைகளுக்கு தமிழ் படங்களில் நடிக்க சென்னைக்கு வந்தால் சில பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

பம்பாயில் என்றால் பகிரங்கமாகவே சிகரெட் பிடிக்கலாம். மது குடிக்கலாம். ஆண் நண்பர்களோடு அரட்டை அடிக்கலாம்

சென்னையில் என்ன நினைப்பார்களோ என்று தயக்கம். அதனால் அடக்கியே வாசிக்கிறார்கள்.

'கல்லூரி வாசல்' படத்தில் நடிக்கும் பூஜாபட் சற்றுத் துணிச்சலாக பகிரங்கமாகவே புகைபிடிக்கிறார். ஊதி ஊதித் தள்ளுகிறார். அவரோடு நெருங்கி நடிக்கும் பிரசாந்த்துக்கு சிகரெட் வாசனை பிடிக்குமா என்று தெரியவில்லை.

## ரம்யாவின் திருமணம்?

'கில்லாடி ராஜா' படத்தில் நாகார்ஜுனுடன் பிசின் போல ஒட்டிக் கொண்டு நடித்திருக்கிறார் ரம்யா கிருஷ்ணன். நாகார்ஜுனின் காதலிகள் பட்டியலில் ரம்யா கிருஷ்ணனும், மனிஷா கொய்ராலாவும் இருக்கிறார்கள். அவர்களின் பிடியில் நாகார்ஜுன் சிக்கிவிடாமல் போராடிக் கொண்டிருக்கிறார் அமலா.

இதற்கிடையே தனது திருமணம் தற்போதைக்கு இல்லை என்று பேட்டி கொடுத்திருக்கிறார் ரம்யா கிருஷ்ணன்.

தனது திருமணம் பற்றி ரம்யா கிருஷ்ணன் சொல்வதைக் கேளுங்கள்: "திருமணம் செய்தால் காதல் திருமணம்தான் செய்து கொள்வேன். என் சகோதரி அனுமதித்தால்தான் திருமணம் நடக்கும். திருமணத்திற்கு பின்னர் நடிக்கக் கூடாது என கணவர் தடை செய்ய முடியாது. அது என் விருப்பம்."

## ஸ்ரீதேவிக்கு பிடித்த நடிகர்

ஸ்ரீதேவி ஷாருக்கானுடன் ஒரு புதிய படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். படப்பிடிப்புக்கு இடையே இருவரும் அடிக்கடி பேசிக் கொள்கிறார்கள். ஷாருக்கானை மிகவும் மரியாதையாக ஷாருக்ஜி என்று அழைக்கிறாராம் ஸ்ரீதேவி. ஜி போட்டு அழைக்காதீர்கள். அப்படி அழைத்தால் நானும் ஜி. ஸ்ரீஜி என்று கூப்பிடுவேன் என்றாராம் ஷாருக்கான்.

ஷாருக்கான் எந்த நடிகையுடன் நடித்தாலும் சேர்ந்து நின்று தனிப்பட்ட புகைப்படம் எடுக்க போஸ் கொடுப்பதில்லை. ஆனால் ஸ்ரீதேவியை அணைத்துக் கொண்டு நின்று போஸ் கொடுக்கிறார்.

இந்த விஷயம் ஷாருக்கானின் மனைவி கௌரிக்கு தெரிந்தால் வீட்டில் ரகளை ஏற்படலாம் என்று பேசப்படுகிறது.

## அருமையான யோசனை

அன்றுதான் முதலிரவு. ஆசையோடு நெருங்கவரும் கணவரை அண்டவிடாமல் துரத்துகிறார் மனைவி. வெறுத்துப் போன கணவர் சித்த வைத்தியர் ஒருவரை அணுகி ஆலோசனை கேட்கிறார். அவர் ஒரு பொடி கொடுக்கிறார். அந்தப் பொடியைப் பாலில் கலந்து சாப்பிட்டுவிட்டு பாடுகிறார் கணவர். பயந்து நடுங்கிப் போனார் மனைவி. அப்படியொரு குரல். பிறகென்ன காரியம் நல்லபடியாய் முடிந்தது. இந்த அருமையான ஐடியா இடம்பெறும் படம் 'காலம் மாறிப் போச்சு'. துரத்தும் மனைவி கோவை சரளா. பாடி மிரட்டியவர் வடிவேலு.

## நகைச்சுவை சாமி


மம்முட்டியும், அரவிந்தசாமியும் இணைந்து நடிக்கும் 'புதையல்' படம் முடியும் தறுவாயில் இருக்கிறது. மம்முட்டி இராணுவ அதிகாரியாக நடிக்கிறார். அடிதடிகளும் உண்டு. அரவிந்தசாமி நகைச்சுவை கலந்த கதாநாயகனாக வருகிறார். ஆம்னியும், பம்பாய் அழகி ஷாக்ஷியும் கதாநாயகிகளாக நடிக்கிறார்கள்.

பல இலட்சங்களை தண்ணிராய்க் கொட்டி இராணுவம் சம்பந்தப்பட்ட காட்சிகளை படமாக்கியிருக்கிறார்கள். திரைக்கு வர தயாராகிறது.

## முகப்பில்

பிரபு | ஊர்வசி

படம்:- அருவாவேலு



சரத்குமார்-நக்மா
படம்: ரகசியபொலிஸ்

## புலி பொறந்த மண்ணு

ராஜ்கிரண் வெளியார் படங்களில் நடிக்க ஒப்புக் கொண்ட பின்னர் பல படங்கள் அவர் கைவசம் வந்து விட்டன. ராஜ்கிரண் புதிதாக நடிக்கும் படம் 'புலி பொறந்த மண்ணு'. (நிச்சயமாக நம்நாட்டில் திரையிடப்பட மாட்டாது)

வெள்ளைக்காரர்களை எதிர்த்து படை திரட்டிப் போராடிய ஒரு தமிழ் இளைஞனின் கதை. ராஜ்கிரணின் ஜோடியாக நடிப்பவர் சுவுந்தர்யா.

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் ராஜ்... இவர் முன்னர் ... படத்தை இயக்கியவர்.

பிரபு-ரோஜா
படம் பரம்பரை

## ஜெயராமுக்கு 31

நடிகர் ஜெயராம் தனது 31 வது பிறந்தநாளை சமீபத்தில் கொண்டாடினார். பிறந்தநாள் விழாவுக்கு குஷ்புவுக்கு அழைப்பும் விடமறந்து போனார். (திட்டமிட்ட மறதி)

ஜெயராமுக்கு தமிழ் பட வுலகம் நன்றாக பிடித்து விட்டது. அதைவிட நன்றாக ஒத்துழைக்கும் நடிகைகளையும் ரொம்பப் பிடித்துவிட்டது.

## பிஸியான சுகன்யா

ஞானப்பழம், மகாபிரபு போன்ற படங்களில் நடித்து முடித்துவிட்டு, இந்தியன், பரிவட்டம், சேனாதிபதி போன்ற படங்களில் பிஸியாக நடித்துக் கொண்டிருக்கிறார் சுகன்யா. 96ம் ஆண்டு அவருக்கு ராசியான ஆண்டாக மாறினால் ஆச்சரியமில்லை.

## ரகசிய பொலீஸ்

கடந்த ஆண்டு வெளிவந்த ரகசியப் பொலீஸ் படம் முதலில் டல்லடிக்க ஆரம்பித்து பின்னர் திடீரென்று வேகம் பிடித்தது. நக்மா-சரத் நடித்த காதல் காட்சிகளும் (ரொம்ப சூடு) பிரமாண்டமும்தான் படத்தின் வெற்றிக்கு காரணம் என்று கூறப்பட்டது. அதல்ல காரணம், ஜெயலலிதாவை எதிர்த்து சரத்குமார் போர்க்கொடி உயர்த்தியதுதான் ரகசியப் பொலீஸ் படமும் சூடு பிடித்தது என்று பரவலான பேச்சு. ஜெயலலிதாவை எதிர்த்தால் படம் ஓடும் என்றால், பல நடிகர்கள் களத்தில் குதிக்கப்போகிறார்கள்.



## கௌரவ சுஹாசினி

'இந்திரா' படத்தை தமிழில் இயக்கி, 'பிரியங்கா' என்ற பெயரில் அதனை இந்தியிலும் தயாரித்து வெளியிட்டுவிட்டார் சுஹாசினி.

இனிமேல் சுஹாசினி நடிக்க மாட்டார் என்றுதான் நம்பப்பட்டது. அதனைப் பொய்யாக்கிவிட்டு 'இரட்டை ரோஜா' படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்கிறார் சுஹாசினி.

கணவனை பணத்துக்காக விற்பனை செய்துவிட்ட ஊர்வசியை திருத்தும் பாத்திரமாம் சுஹாசினிக்கு. கதை பிடித்ததால் ஈடுபாட்டோடு நடிக்கிறார்.

## மாறியது கொள்கை

ஒரே நேரத்தில் ஒரு படம்தான் நடிப்பது என்ற கொள்கையை மாற்றிக் கொண்டுள்ளார் சத்யராஜ். சேனாதி, சிவசக்தி ஆகிய இரு படங்களிலும் ஒரே நேரத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். 'சேனாதிபதி' கிராமத்து காதல், மோதல் நிறைந்த படம்.

'சிவசக்தி'யில் கள்ளக் கடத்தல் செய்பவராக நடிக்கிறார் சத்யராஜ். முன்பு 'மக்கள் என் பக்கம்' படத்திலும் கள்ளக் கடத்தல்காரனாக நடித்திருந்தார்.

'அடிமை' படம் பாதியில் கைவிடப்பட்டுவிட்டது. இயக்குநர் செல்வமணிக்கும், தயாரிப்பாளருக்கும் இடையே ஏற்பட்ட பிணக்குத்தான் முறிவுக்கு காரணம்.

## விலைக்கு வாங்கிய கணவன்

'இரட்டை ரோஜா' படத்தில் ராம்கிக்கு இரண்டு ஜோடிகள். ஒருவர் குஷ்பு. இன்னொருவர் ஊர்வசி. ராம்கியை காதலிக்கிறார் குஷ்பு. அதற்கு குறுக்கே நிற்கிறார் ராம்கியின் மனைவி ஊர்வசி. அவருக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்து ராம்கியை கணவனாக்கிக் கொள்கிறாராம் குஷ்பு.

## யாரை நினைத்து வைத்தது?

தமிழக முதல்வர் ஜெயலலிதாவை மனதில் வைத்துக் கொண்டு பெயர் வைத்திருப்பார்கள் போல இருக்கிறது. புதிய படமொன்றின் பெயர் தான் அப்படி நினைக்க வைக்கிறது. "ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே" அதுதான் படத்தின் பெயர். இயக்குவது செந்தில் நாதன். அருண்பாண்டியனும், மன்சூரலிகானும் கதாநாயகர்கள். ராஜஸ்ரீ தான் கதாநாயகி.



ராம்கி-முரளி
படம் இரு வல்லவர்...



படிப்பகம்

www.padippakam.com

## ...ல் தில்லானா

...'மாஸ்டர்.' மம்முட்டி, நெப் ...ம் ஏந்தும் தீவிரவாதியாக ...

...ண்ணன், சரண்ராஜ்.



நாகார்ஜுனா-ரம்யா படம் தில்லாடி ராஜா

## ரஜினிக்கு ஆதரவா?

தற்போது அரசியலுக்கு வரும் உத்தேசம் இல்லையென்று சொல்லிவிட்டார் ரஜினிகாந்த். ஆனாலும் அவர் வருவார் வரத்தான் போகிறார் என்ற பேச்சுக்கள் குறையவில்லை.

ரஜினி அரசியலுக்கு வந்தால் ஆதரவளிப்பீர்களா? என்று குஷ்புவிடம் கேட்டபோது, அவர் சொன்ன பதில்; "அரசியல் எனக்குப் பிடிக்காது. அப்படி இருக்கும்போது நான் எப்படி இன்னொருவருக்கு ஆதரவு தரமுடியும். சினிமா ரீதியில் ரஜினிக்கு ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் அவருக்கு முழு ஆதரவு தர நான் தயார். ரஜினி அரசியலுக்கு வராததும் வருவதும் அவர் விருப்பம். இது பற்றி நான் என்ன கருத்துச் சொல்ல முடியும்." என்று சொல்லிவிட்டார் குஷ்பு.

## சுஷ்மிதாவின் புகை வளையம்

'ரட்சகன்' படத்தில் நாகார்ஜுனுடன் சுஷ்மிதா சென் ஜோடி சேர்கிறார் என்பது தெரிந்த சங்கதி.

சுஷ்மிதாசென் சென்னை வந்து படப்பூஜையில் கலந்து கொண்டார். எல்லோருடனும் அரட்டை அடித்தார். நிருபர்களை வாய்பிளக்கவும் வைத்தார். அதாகப்பட்டது, சுஷ்மிதா சென் அரட்டைக்கு நடுவே புகைத்துத் தள்ளிய சிகரெட்டுக்களை விட, வளையம், வளையமாக அவர் புகை விட்ட ஸ்டைல்தான் நிருபர்களை வாய்பிளக்கச் செய்து விட்டதாம். சுஷ்மிதா வந்தல்லோ, புகையை விட்டல்லோ.

## மினி சினி

* பிரபு தற்போது நடித்து வரும் படங்களில் இதுவரை தன்னுடன் இணைந்து நடிக்காத நாயகிகளுடன் நடித்து வருகிறார். ரோஜா படம் 'பரம்பரை', நக்மா படம் 'பெரியதம்பி', திவ்யாதத் படம் 'அமைதிப்பூங்கா', மதுபாலா, மகேஸ்வரி படம் 'பாஞ்சாலங்குறிச்சி'.
* 'சிவப்பு நிலா' படத்தில் வினிதா இரண்டு வேடங்களில் நடித்து வருகிறார். அவற்றில் ஒன்றில் விஜயசாந்தி போல் ஆக்ஷன் வேடத்தில் நடிக்கிறார்.
* பிரசாந்த் முதன் முதலாக தெலுங்கில் நடித்த 'லாட்டி' என்ற படம் தமிழில் 'தாவூத் இப்ராஹிம்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.
* கே.டி. குஞ்சுமோன் தயாரிக்கும் இரண்டு படங்களில் இசை அமைக்கும் ஏ.பி.ஆனந்த், இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமானிடம் உதவியாளராக இருந்தவர்.
* மணிரத்னம் இயக்கத்தில் மோகன்லாலுக்கு ஜோடியாக தமிழில் நடித்து வரும் முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யாராய், இந்தியில் 'சாம்பியன்' என்ற படத்தில் நடிக்கவுள்ளார். இதில் ஐஸ்வர்யாராயிற்கு ஜோடியாக பாபி தியோல் நடிக்கவுள்ளார்.
* விஜயகாந்தின் நண்பரான இப்ராஹிம் ராவுத்தர் விஜயகாந்தின் 125 வது படமான 'உளவுத்துறை'யை அடுத்து, அருண்பாண்டியன் - மன்சூர் அலிகான் நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.
* இலங்கை - இந்திய - உஸ்பெக்கிஸ்தான் கூட்டுத்தயாரிப்பான 'இசைப்பயணம்' படத்தில் முக்கிய வேடத்தில் விஜயசாந்தி நடிக்கவுள்ளார்.
* மூன்று முறை தேசிய விருது பெற்ற நடிகை சாரதா, சில மலையாளப் படங்களைத் தயாரித்துள்ளார். இவர் விரைவில் படமொன்றை இயக்கவுள்ளார்.
* 'இந்தியன்' படத்தில் வயதான வேடத்தில் கமலுக்கு ஜோடியாக நடித்துவரும் சுகன்யா, சத்யராஜ் இரட்டை வேடத்தில் நடிக்கும் 'சேனாதிபதி' படத்திலும் வயதான சத்யராஜிற்கு ஜோடியாக நடிக்கிறார்.

## காதோடு சொல்லுகிறோம்

'வி'யில் ஆரம்பிக்கும் மூன்றெழுத்து நடிகையும், மலையாள 'ஜெ' நடிகரும் வெளிப்புற படப்பிடிப்பு ஒன்றில் அருகருகே உள்ள அறைகளில் தங்கியிருந்தார்களாம். நடிகைக்கு பொழுது போகவில்லை. அதனால் 'ஜெ' நடிகரின் அறையில் போய் தங்கிவிட்டார். காலையில் நடிகையை அறையில் காணாமல் படப்பிடிப்புக்குழுவினர் பயந்து போனார்கள். 'ஜெ' நடிகரின் அறையில் இருந்து அசட்டுச் சிரிப்போடு வெளிப்பட்டாராம் நடிகை. அந்த நடிகை பற்றி மற்றொரு தகவல், அவர் பெற்றோல் உற்பத்தி செய்யும் நாடொன்றில் இருந்து வந்தவர்.

'பம்பாய்' நாயகியான மனி நடிகைக்கும் இந்தியில் விருதுபெற்ற நடிகர் 'நானா'வுக்கும் திருமணம் நடந்துவிட்டதாக தகவல் பரவியுள்ளது. இருவருமே மறுக்கிறார்கள். அடிக்கடி சந்திப்பதைமட்டும் ஆமோதிக்கிறார்கள்.

இளைய திலகத்துடன் திருமணம் நடந்தது பற்றி இப்போது விலாவாரியாகப் பேசுகிறார் பூ நடிகை. அதனால் இளைய திலகத்தின் குடும்பத்தினர் சங்கடத்தால் நெளிகிறார்களாம். சிம்மம் பார்க்கும் பார்வையை தாங்க முடியாமல் தவிக்கிறாராம் இளைய திலகம்.

## யார் நாயகி?

ரஜினிகாந்த் அடுத்து நடிக்கப் போகும் படத்தில் யார் கதாநாயகி? அதுதான் கேள்வி. விடையாக மூன்று பெயர்கள் அடிபடுகின்றன. மனிஷா கொய்ராலா, ஐஸ்வர்யாராய், சுஷ்மிதா சென். மூவரிடமும் பேச்சு நடப்பதாகத் தகவல். அந்த மூவரில் ஒருவர் கதாநாயகியாக நடித்தாலும், தமிழ் படவுலக நடிகை ஒருவருக்கும் சான்ஸ் கொடுக்கப்படுமாம்.

## மூவருக்கும் கவலை

ரம்பாவிடம் இளமை இருக்கிறது. அதனை வெளிப்படுத்தும் துணிச்சலும் இருக்கிறது. அதனால் நிறையப் பட வாய்ப்புக்கள் அவர் கையில் இருக்கிறது. 'செங்கோட்டை' 'உள்ளத்தை அள்ளித்தா' ஆகிய தமிழ் படங்களில் ரம்பா நடித்துக் கொண்டிருக்க, அவர் தெலுங்கில் நடித்த படங்களை அவசர அவசரமாக தமிழில் மொழி மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

'போக்கிரிக்காதலன்' என்றொரு படத்தில் தாராளமாக கவர்ச்சி காட்டி இருக்கிறார் ரம்பா. தெலுங்கிலிருந்து தமிழுக்கு வருகிறது.

ரம்பா வருகையால் நக்மா, ரோஜா, மீனா மூவரும் கவலையோடு இருக்கிறார்கள்.

## ஹிட்டான படம்

'தொட்டாச் சிணுங்கி' படம் ஹிட்டாகிவிட்டது. அதனை இந்தியில் தயாரிக்கப் போகிறார்கள். ரகுவரன் நடித்துள்ள பாத்திரத்தில் நானா படேகர் நடிக்கப் போகிறார். கார்த்திக் நடித்த கௌரவ பாத்திரம் இந்தியிலும் அவருக்கு கொடுபடலாம் என்று தகவல். கதாநாயகன் நாகேந்திர பிரசாத் படு குஷியில் இருக்கிறார். கதாநாயகனாக நடித்த முதல் படமே ஹிட்டானால் சந்தோசம் வரத்தானே செய்யும்.

படத்தின் வெற்றிக்கு ரஜினி புகழ் பாடியதும் ஒரு காரணம் என்று நம்பப்படுமானால், மேலும் பல படங்களில் ரஜினியின் புகழ் பாடப்படலாம். ரஜினியை வைத்து படம் எடுக்க முடியாதவர்கள் அவரது 'கட் அவுட்'டுக்களை வைத்து படம் எடுக்கப் போகிறார்கள்.

## பூங்காவில் ஹீரா

பிரபு-திவ்யாதத் நடிக்கும் அமைதிப் பூங்கா படத்தில் ஹீராவும் நடிக்கப் போகிறார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு தமிழில் ஹீரா நடிக்கும் படம் இதுதான். படத்தில் சுரேஸ்கோபியின் ஜோடியாக கௌதமியோடு ஹீராவும் நடிக்கிறார்.

கவுதமியும், ஹீராவும் போட்டி போட்டு ரசிகர்களை ஒரு வழி பண்ணப் போகிறார்கள். நல்ல காலம் பிரபு தப்பித்தார். அவரை திவ்யாதத் கவனித்துக் கொள்வார்.

## இந்த வருடம் இரண்டு

இனிமேல் நடிக்கப்போகும் படங்கள் அரசியல் விழிப்புணர்ச்சி உள்ள படங்களாகவே இருக்கும் என்று கூறியிருக்கிறார் ரஜினிகாந்த்.

இந்த வருடத்தில் ரஜினி நடிக்கப்போகும் இரண்டு படங்களுக்கு 'வள்ளல்' 'கர்மவீரன்' என்று பெயர்கள் சூட்டப்பட உள்ளதாக தெரிகிறது.

வள்ளல் படம் நாகிரெட்டியார் தயாரிப்பில் உருவாகப்போகிறது. 'கர்மவீரன்' யார் தயாரிப்பு என்பது இன்னமும் முடிவாகவில்லை.



## ஷில்பா தேடும் நாயகன்

'மிஸ்டர் ரோமியோ' படத்தில் நடித்துவரும் ஷில்பா ஷெட்டிக்கு பிரபுதேவாவைப் பிடித்து விட்டதாம். அவரது நடனத்திறமை தன்னை மிகவும் கவர்ந்து விட்டது என்று கூறுகிறார் ஷில்பா.

ஷில்பா எப்படிப்பட்ட வாழ்க் கைத் துணையைத் தேடுகிறார் என்று பிரபுதேவா கேட்ட போது மிகவும் உயரமான, கறுப்பான, ஆனால் அழகான ஆண் மகனைத் தேடுவதாகச் சொன்னாராம் ஷில்பா. அதுமட்டுமல்ல, தாடி இருந்தால் நல்லது என்றும் ஷில்பா சொன்னபோது அந்த அடையாளங்கள் எல்லாம் தன்னோடு ஒத்துப் போவதைக் கண்டு சடடென்று சிரித்தாராம் பிரபுதேவா. ஷில்பா சொன்னது ஜோக் என்று நம்புவோமாக.

## கனவுக்கு 99 இலட்சம்

ஏ.வி.எம். பட நிறுவனம் தயாரிக்கும் மின்சாரக்கனவு படத்தில் இசைக்குத்தான் பிரதான பாத்திரம். பிரபு தேவா, அரவிந்தசாமி, கஜோல் மூவரையும் இசைதான் ஆட்டுவிக்கப் போகிறது.

அதனால் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமானுக்கு எவ்வளவு சம்பளம் தெரியுமா? 99 இலட்சம். நம்பத்தான் முடியாது, ஆனால் நடக்கிறதே. ரகுமானின் இசையென்றால் சும்மாவா?!



பிரசாந்த்-பூஜாபட் படம் கல்லூரி வாசல்



படிப்பகம்

ஸ்பெஷல்

# இல்லறத்தை இனிய ரதமாக்குவது எப்படி?

## திருமதிகள் மத்தியில் விவாதம்

திருமதிகள் சியாமளா அசோக் (மருத்துவ ஆலோசகர்), உஷா சுப்பிரமணியம் (எழுத்தாளர்), மாலினி நாராயணன் (வங்கி ஊழியர்), வெண்ணிற ஆடை நிர்மலா (நடிகை) ஆகியோர் கணவன்-மனைவி உறவுகள் தொடர்பாக தம் கருத்துக்களை பரிமாறிக் கொள்கிறார்கள்.

மாலினி: நம்ம நாட்டுப் பெண்களுக்கு 'செக்ஸ்' அறிவு அறவே போதாது. அவர்களைப் பொறுத்தவரை செக்ஸ் என்றால் என்ன அர்த்தம் தெரியுமா? கணவன் கூப்பிடும்போது போகணும். அது போதும்.

சியாமளா: இதுக்குக் காரணம் என்ன தெரியுமா? செக்ஸ் என்றால் வெறும் உடலுறவு அதாவது உடல் சம்பந்தப்பட்டது மட்டும்தான் என்று நினைப்பவர்கள்தான் நிறைய. அது அடிப்படையிலேயே மனசு சம்பந்தப்பட்டது. மனோதர்மப்படி உணர்வு பூர்வமான தேவை அது. உடல் தேவை கடைசி அம்சம். அல்லது அங்கம்.

உஷா: கரெக்ட். பெண்ணைப் பொறுத்தவரை-செக்ஸ் மனசும் உடம்பும் கலந்த ஒரு விஷயம். மனசைத் தாண்டி உடம்புக்குப் போய்ச் சேரும் விஷயம். அதாவது ஒருத்தர் மீது அன்பு ஏற்படறபோது தானாக வெளிப்படும் உணர்ச்சி. மனசுல தேவை ஏற்பட்ட பிற்பாடு உடம்புக்கு தானாக அது மாறும். அதுவும் படிப்படியாகத்தான் மாறும்.

நிர்மலா: ஆக, அது ஒரு உணர்ச்சி. அழுகை, ஆத்திரம், கோபம், புன்னகை. மகிழ்ச்சி, சிரிப்பு மாதிரி மனசுல ஏற்படற உணர்ச்சி.

மாலினி: நம்ம சமூகத்தில் செக்ஸ் பற்றி என்ன நினைக்கிறாங்க. ஆணோட




தேவைகளை பூர்த்தி செய்யிற பெண்ணுக்கு? அவளுக்கென்று தனிப்பட்ட மனப்பூர்வமான தேவைகள் இருக்கக்கூடும் என்று நினைக்கிறதே இல்லை.

இந்தச் சமூகம் பெண்களை மட்டும் இப்படி மூளைச் சலவை பண்ணி வைத்திருக்கவில்லை. ஆண்களையும் இப்படி இருந்தால்தான் உண்மையான ஆண் என்று ஒரு வரையறை, இலக்கணமெல்லாம் வகுத்து வைத்திருக்கிறது. அதனால் ஆணும் இந்த விஷயத்திலை சுயமாக சிந்திக்க முடிவதில்லை.

மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ, தன்னைப்பற்றி மட்டமா நினைப்பார்களோ, உசத்தியா நினைப்பார்களோ, தனக்கு ஆண்மை இல்லையென்று நிரூபிக்கிறமாதிரி ஆயிடுமோ என்ற பயத்தோடுதான் ஆண்களும் மனைவியோடு உறவு வைத்துக் கொள்கிறார்கள்.

நிர்மலா: சின்ன வயதில் இருந்தே பெண்ணை வளர்க்கும்போது இப்படி இருந்தால்தான் கல்யாணமாகும். கல்யாணத்தின்பின்னர் இப்படித்தான் இருக்கணும் என்று உபதேசம் பண்ணி வளர்க்கிறாங்க. மனைவி என்பவள் தன்னுடைய தேவைக்குரிய ஒரு பொருள்தான் என்று இந்தச் சமூகம் ஆணுக்குச் சொல்லித் தருகிறது.

மாலினி: பெண்ணுடைய சொந்த வாழ்க்கையை சமூகம் நிர்ணயம் செய்யிறதுதான் அவங்களோட கொடுமையான தலைவிதி.

உஷா: நம்ம குடும்ப அமைப்பில் ஒரு வயதை அடையும்போதுதான் ஒரு பெண் செக்ஸ் பற்றி பரிபூரணமாகப் புரிந்துகொள்ள முடிகிறது.




பகல் நேரத்திலை எல்லாருக்கும் அட்ஜஸ்ட் பண்ணிண்டு ஓரளவு அடிமை மாதிரி இருக்கணும். ராத்திரியானா புருஷனுக்கு-ராஜாவுக்கு ஏத்த ராணியாக இருக்கணும். எத்தனை முரண்பாடு? இரு வேறு நிலைகளில் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு அட்ஜஸ்ட் பண்ண கத்துக்கறதிலயே பாதி வாழ்க்கை போயிடும்.

நடுத்தரவயதாகும் போதுதான் தன்னைப் பத்தி யோசிக்கவே அவகாசம் கிடைக்கிறது.

அந்த நேரத்திலை ஆணுக்குப் பணம் தேடும் தேவைகள், தொழில் பிரச்சனைகள், அத்தோடு ஆசை அறுபதுநாள், மோகம் முப்பது நாள் பழமொழி.

சியாமளா: நான் அந்தப் பழமொழியை ஏத்துக்க மாட்டேன். கணவன், மனைவிக்குள் புரிஞ்சுக்கற தன்மை இருந்தால் எத்தனை வருஷமானாலும் ஆசை குறையாது. அப்படிப் புரிஞ்சுக்கறதுக்கு ரொம்ப பொறுமை தேவை. கணவன் மனைவி இருவரும் மனம்விட்டுப் பேசவேண்டும். செக்ஸ் பற்றிப் பேசறதே தப்புங்கற மனோபாவம் மாறணும்.

அடிக்கடி தங்களுடைய மனத் தேவைகள், உடல் தேவைகள் பற்றி தெளிவாய் பேசணும்.

படுக்கைக்கு வரும்போது மத்தபிரச்சனைகளை மனசில் இருந்து ஒதுக்கி வைக்கவேண்டும். அதற்கு ஒரு திட்டமிடல் அவசியம். சமையல் வேலைக்கு திட்டமிடுற தில்லையா? அலுவலக வேலைக்கு திட்டமிடுற தில்லையா? அந்த மாதிரி இதையும் ஒரு விஷயமா எடுத்து திட்டமிடணும். வாழ்க்கையை இனிமையாக அமைத்துக்கொள்ள வேண்டுமானால் மனச் சுமைகளை இறக்கி வைக்க கற்றுக்கொள்ளவேண்டும்.

-சந்திப்பு-அர்ச்சனா.

# இல்லத்துக்கு இனிய யோசனைகள்



★விருந்தினருக்கு தேனீரோ, சிற்றுண்டியோ கொடுத்த பின், அவர்கள் அதைச் சாப்பிட்டு முடித்த உடனே தட்டு, டம்ளர்களை உடனே எடுத்துச் சென்று விடுங்கள். அவர்கள் எதிரிலேயே இப்பாத்திரங்களை வைத்துக் கொண்டு பேசுவது நன்றாய் இருக்காது.

★ பிறர் வீட்டிலிருந்து அவர்கள் பாத்திரத்தில் அவர்கள் ஏதாவது கொடுத்தனுப்பினால், திருப்பிக் கொடுக்கும் பொழுது பாத்திரத்தைச் சுத்தமாகத் தேய்த்துக் கொடுங்கள். வெறும் பாத்திரமாகத் திருப்பிக் கொடுக்காமல் முடிந்தால் ஏதாவது உணவுப் பொருட்களை அதில் வைத்துத் திருப்பிக் கொடுங்கள்.

★ சோறு சமைக்கும் போது கல் இருந்தால் போக வேண்டும் என்பதற்காக அரிசியைக் களைந்து விட்டுப் பானையில் போடுகிறார்கள். ஆனால் வடிக்கும் போது கல் கண்ணில் தென்பட்டால் ஐந்தாறு தடவை பானையைக் குலுக்கி விட்டு வடியுங்கள். கற்கள் கீழே போய்விடும்.

★ அடுத்த வீட்டில் இருந்து இரவல் வாங்கிப் படிக்கும் புத்தகங்கள் கிழிந்திருந்தால் திருப்பிக் கொடுக்கும் போது அவற்றை ஒட்டிக் கொடுங்கள்.

★ பச்சை மிளகாய் அடிக்கடி வாடிவிடும். இவ்வாறு வாடிவிடாமல் இருக்க வேண்டுமானால் காம்புகளைக் கிள்ளி எடுத்து விடவும். பிறகு அவை வாடாமல் இருக்கும்.

★ முதல் நாள் செய்த பண்டத்தை அடுத்த நாள் சாப்பிட்டால் உடம்பிற்கு ஒத்துக் கொள்வதில்லை. ஆகவே முடிந்த வரை சிக்கனமாகச் சமையுங்கள்.

★ கத்திகளைக் கூர்மையாக்க உப்புத் தூளைப் போட்டுக் கவனமாக நுனியைத் தேயுங்கள்.

★ காய் கறிகள் வெட்டிய கத்தி, தேங்காய்த் துருவி முதலியவற்றை வேலை முடிந்த பின் உடனே அலம்பி விடுங்கள். கத்தரிக்காய், வாழைக்காய் அரிந்த கத்தியினால் வேறொன்றை அரிந்தால் அது கறுப்பாகி விடும். வெங்காயம் அரிந்த கத்தியினால் அப்படியே வேறொன்றை அரிந்தால் அதில் வெங்காய மணம் வந்து விடும். எனவே வேலை முடிந்ததும் கழுவி விடுங்கள்.

குங்குமம் இட்டுக் கொள்ளும் பெண்கள், நல்ல குங்குமமாகப் பார்த்து வாங்க வேண்டும். கண்ட கண்ட குங்குமம் இட்டால் அந்த இடம் புண்ணாகி விடும். நெற்றியில் ஒன்றும் இட்டுக்கொள்ளாமல் இருக்காதீர்கள்.

தலையில் ஏற்படும் நரையை மறைக்க இதற்காக விற்கப்படும் தலை முடி 'டை'களை (HAIRDYE) உபயோகப்படுத்தாதீர்கள். அவை தலை மயிருக்கு மேலும் கெடுதியை ஏற்படுத்தலாம். தலை நரையைப் போக்க எவற்றினாலும் முடியாது. ஆகவே தலை நரையை முழுவதுமாகப் போக்க கண்ட தைலங்களை வாங்கித் தடவாமல் இருப்பது நல்லது. தலை நரைக்காமல் இருக்க மனதில் அதிக கவலைகள் கொள்ளாமல் இருக்க வேண்டும். சத்துக்கள் நிறைந்த உணவை உட்கொள்ளலாம்.

தேங்காய் எண்ணெயில் மஞ்சள் தூளைப் போட்டுக் குழைத்து உடம்பிற்குத் தடவி பயற்றமாவு தேய்த்துக் குளித்து வந்தால் தோல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.

# பருமனாக உள்ளவர்கள் அணிய வேண்டிய ஆடை



பருமனாக உள்ள பெண்கள் குறுக்குக் கோடுகள் போட்ட உடைகளையோ பெரிய டிசைன்கள் உள்ள உடைகளையோ அல்லது பெரிய போர்டர் போட்ட உடைகளையோ தவிர்ப்பது நலம். அதுபோல் உயரமாகவும், ஒல்லியாகவும் உள்ள பெண்கள் சிறிய டிசைன்கள் உள்ள உடைகளையும், நெருக்கிக் கோடுகள் போட்ட உடைகளையும் தவிர்ப்பது நலம்.

மிகவும் உயரமான பெண்கள் மிகவும் உயரமான கொண்டை போட்டுக் கொள்ளக் கூடாது. சிறிது குள்ளமான பெண்கள் கொண்டையைச் சிறிது கூர்மையாகவும், உயரமாகவும் போட்டுக்கொள்வது நலம். மிகவும் வட்டமான முகம் உள்ளவர்களும், சிறிது உயரமான கொண்டை போட்டுக் கொள்ளலாம்.

மிகவும் கவர்ச்சியான புடவை அணியும் போது, மிகவும் படாடோபமான நகைகளை அணிவதைத் தவிர்ப்பது நல்லது. ஏனெனில் பளபளப்பான நகைகளுக்கு முன்பு, புடவையின் கவர்ச்சி குறைந்து விடும். அதே போல் பளபளப்பான நகைகள் அணியும் போது புடவை எளிமையாக இருக்க வேண்டும். இந்த விஷயங்களை வீட்டு அலங்காரங்களிலும் கவனிக்க வேண்டும். மிகவும் அலங்காரமான ஒரு பொருளை வரவேற்பு அறையில் வெளிர் நிறமான பின்னணியின் முன் வைப்பதால் அந்தப் பொருள் நன்கு எடுபடும்.

# கண்ணீராக வந்தவள்

## அப்துல் ரகுமான்

காதலி பிரிந்திருக்கும் இரவு விசித்திரமானது.

அவள் இல்லை என்றும் சொல்ல முடியாது.
இருக்கிறாள் என்றும் சொல்ல முடியாது.

காதலி வரவில்லை. ஆனால் அவள் நினைவு வருகிறது.

அவள் நினைவாக வருகிறாள். அதனால்
அவள் இல்லாத போதும்
இருந்து கொண்டிருக்கிறாள்.

பிரிவின் துயரத்தால் கண்ணீர் ததும்புகிறது.
அது கண்ணீர் அல்ல. அவள் தான்!

அவள்தான் கண்ணீராகத் ததும்புகிறாள்.
கண்ணீர் மனிதனின் சாரம்.
பெண் ஆணின் சாரம்.

மகத்தான உணர்ச்சிகள் தோன்றும் போது
அந்தரங்கத்தில் ஒளிந்திருக்கும் கண்ணீர்
என்ற மர்ம நீர் வெளிப்படுகிறது.

காதல் தோன்றும் போது ஆணின்
அந்தரங்கத்தில் ஒளிந்திருக்கும் பெண்
என்ற மர்ம தேவதை வெளிப்படுகிறாள்.

கண்ணீரைப் போலவே அவளும்
உன்னதமானவள்.

காதலி கண்ணீராக வருகை தரும்போது
அந்த வருகை அவளுடைய நிஜ வருகையை
விட மகத்தானதாகி விடுகிறது!

காதலியே காதலனின் மூச்சாகவும்
இருக்கிறாள். அவளால் தான் அவன்
உயிர் வாழ்கிறான்.

மூச்சு என்றால் வருவது மட்டும்
அல்லவே, போவதும் தானே?

எனவே அவளும் வருவதும்
போவதுமாக இருந்தாள்.

கவிஞர் ம:தூம் கூறுகிறார்:

இரவு முழுவதும் நீ
ஈர விழிகளில்
ததும்பிக் கொண்டிருந்தாய்
சுவாசத்தைப் போல
வந்து கொண்டிருந்தாய்
போய்க் கொண்டிருந்தாய்!



# கிரிக்கெட் சாதனைகள்

ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் 1971ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. கடந்த 25 ஆண்டுகளாக நடைபெற்று வரும் இப்போட்டிகளில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் இதோ:

## இணைப் பாட்ட சாதனை

முதலாவது விக்கட்டுக்கு 212 ஜெவ் மார்ஷ் (104), டேவிட் பூண் (111) அவுஸ். எதிர் இந்தியா

இரண்டாவது விக்கட்டுக்கு 263 அமீர் சொகைல் (134), இன்சமாம் உல் ஹக் (137*) பாகி. எதிர் நியூசிலாந்து

மூன்றாவது விக்கட்டுக்கு 224* டீன் ஜோன்ஸ் (99*), அலன் போர்டர் (118*) அவுஸ். எதிர் இலங்கை

நான்காவது விக்கட்டுக்கு 173 டீன் ஜோன்ஸ் (121), ஸ்டீவ் வோவ் (82) அவுஸ். எதிர் பாகிஸ்தான்

ஐந்தாவது விக்கட்டுக்கு 152 விவியன் றிச்சட்ஸ் (98), கிளைவ் லோயிட் (89*) மே.இ.தீ. எதிர் இலங்கை

இன்சமாம் உல் ஹக் (116*), இஜாஸ் அகமட் (54) பாகி. எதிர் சிம்பாப்வே

ஆறாவது விக்கட்டுக்கு 154 றிச்சி றிச்சட்சன் (122), ஜெவ் டுஜோன் (53) மே.இ.தீ. எதிர் பாகிஸ்தான்

ஏழாவது விக்கட்டுக்கு 115 ஜெவ் டுஜோன் (57*) மல்கம் மார்ஷல் (66) மே.இ.தீ. எதிர் பாகிஸ்தான்

எட்டாவது விக்கட்டுக்கு 119 றீபில் (58), ஷேன் வோன் (55) அவுஸ். எதிர் தென் ஆபிரிக்கா

ஒன்பதாவது விக்கட்டுக்கு 126* கபில்தேவ் (175*), சியட் கிர்மானி (24*) இந்தியா எதிர் சிம்பாப்வே

பத்தாவது விக்கட்டுக்கு 106* விவியன் றிச்சட்ஸ் (189*), மைக்கல் ஹோல்டிங் (12*) மே.இ.தீ. எதிர் இங்கிலாந்து

## விக்கட் கீப்பர்களின் சாதனை

204 அவுட் (183 கட்ச், 21 ஸ்டம்ப்) 169 போட்டிகளில் ஜெப் டுஜோன்-மேற்கிந்தியத் தீவுகள்.

181 அவுட் (154 கட்ச், 27 ஸ்டம்ப்) 129 போட்டிகளில் இயன் ஹீலி-அவுஸ்திரேலியா

124 அவுட் (120 கட்ச், 4 ஸ்டம்ப்) 92 போட்டிகளில் ரொட்னி மார்ஷ்-அவுஸ்திரேலியா

104 அவுட் (92 கட்ச், 12 ஸ்டம்ப்) 71 போட்களில் டேவ் றிச்சட்சன்-தென்ஆபிரிக்கா

103 அவுட் (81 கட்ச், 22 ஸ்டம்ப்) 86 போட்டிகளில் சலிம் யூசுப்-பாகிஸ்தான்.



## பந்து வீச்சு சாதனை

வாசிம் அக்ரம்- பாகிஸ்தான் 189 போட்களில் 273 விக்கெட்டுகள்

கபில் தேவ்- இந்தியா 224 போட்களில் 253 விக்கெட்டுகள்

மக்டர்மட்-அவுஸ்திரேலியா 129 போட்களில் 190 விக்கெட்டுகள்

இம்ரான் கான்-பாகிஸ்தான் 175 போட்களில் 182 விக்கெட்டுகள்

வக்கார் யூனுஸ்-பாகிஸ்தான் 108 போட்களில் 178 விக்கெட்டுகள்

ஸ்டீவ் வோவ்- அவுஸ்திரேலியா 185 போட்களில் 162 விக்கெட்டுகள்

றிச்சட் ஹாட்லி-நியூசிலாந்து 115 போட்களில் 158 விக்கெட்டுகள்

கொட்னி வோல்ஷ்-மேற்கிந்தியத் தீவுகள் 142 போட்களில் 157 விக்கெட்டுகள்

மல்கம் மார்ஷல்-மேற்கிந்தியத்தீவுகள் 136 போட்களில் 157 விக்கெட்டுகள்

கேட்லி அம்புறோஸ்-மேற்கிந்தியத்தீவுகள் 114 போட்களில் 154 விக்கெட்டுகள்

மனோஜ் பிரபாகர்-இந்தியா 125 போட்களில் 154 விக்கெட்டுகள்

(இந்தப் புள்ளி விபரங்கள் யாவும் 29-11-95 வரை கணிக்கப்பட்டதாகும்.)


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கபடுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை R

பெயர்:.............................

முகவரி:.............................

.............................

கையொப்பம்:.............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 27-01-1996

தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 22

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும்

தங்கமாலை

பரிசுப் போட்டி

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.

www.padippakam.com

## அவஸ்தையான ராவுகளில்...!

ஆவிகள் மட்டும்
அலைந்து திரியும்-
அந்த நள்ளிரவில்
என்னோடு சேர்ந்து
சில நுளம்புகளும்-
விழித்திருக்கும்...!

'சில்லூரின்' ராகத்தில்
காதுக்குள் புல்லரிக்கும்....!
பழைய-
நினைவுகளின் சோகத்தில்-
மனசெல்லாம் எரிக்கும்...!



பதிந்து போன-
உன் ஞாபகங்களை
மனம்-
மீட்டி மீட்டிப் படிக்கும்!
பதித்துப் போன-
உன் முத்தங்களை
உயிர்-
மீண்டும் மீண்டும் நினைக்கும்!

இதயத்தின் அவஸ்தைகள்-
புகைத்தலால் கழியவே...
இரவின் நிமிடங்கள்-
கண்ணீரோடு கரையும்...!



தூக்கம் கலைந்த கோழிகள்-
தூரத்தே கூவும்...!
உன்னை இழந்த-
என் உயிர் அணுக்கள்
சொட்டுச் சொட்டாய் சாகும்!

இரவின் முடிவினிலே-
அப்பப்போ தூக்கம் வரும்...!
தூங்கும் பொழுதினிலும்-
கண் நிறையக்கனவு வரும்..!

கனவினிலும் கை நிறைய-
பூக்களோடு
நீ வருவாய்...!
இதழ்களால் இன்பத்தை-
இதழ்களோடு பரிமாறுவாய்..!
உயிரெல்லாம் வலிக்கவே-
உயிரோடு நீ அணைப்பாய்...!
என்று-
கண் நிறைய-
எனக்கு
கனவுகளே தொடர்ந்து வரும்...!

அப்போ....
பக்கத்தில்-
துப்பாக்கி
வெடியோசை கேட்கும்...!
அதில்-
நித்திரையும் கனவுகளும்
நம் காதல் போல-
கலைந்து போகும்....!

அட்டாளைச்சேனை, யூயெல் மப்றூக்.

பிஞ்சு வயது முதல்
கண்ணீரூற்றி
நான் வளர்த்த
ஒற்றை ரோஜா
எவளோ ஒருத்தியின்
கூந்தலில்
ஏறிக் கொண்டது!
-0-
பறப்பதற்குத்
தங்கச் சிறகுகளைத்
தருவதாகக் கூறிய காதல்
முளைத்திருந்த
சிறகுகளைக் கூட
முறித்து முடமாக்கியது!
-0-
ஓயாத கண்ணீர் மழையால்
உள்ளம்
விறைத்துப் போய்
நடுநடுங்குகிறது!
தாகமே இல்லாதவள் நான்;
உனைப்போல,
கானல் நீரைக் கண்டா
ஓடப் போகிறேன்...?
-0-
காகிதங்களால்-நான்
வாழ வடிவமைத்திருந்த
செல்வ மாளிகையை
செல்லரித்து விட்டது!
-0-

## செல்லரித்த காகித மாளிகை

செல்வம் வழிந்தோடிய
என் வாழ்க்கை இன்று
வெடிப்புகள் சமந்து
வரண்டு கிடக்கிறது!
-0-
உன் நினைவுகள்
நெருப்பு நகங்களால்
எனது நெஞ்சத்தை
நெருடுகின்றன!
-0-
உனக்காக நான்
உருகியழுத
உதிரக் கண்ணீர்
கடல் நீரைவிடவும்
கனமானது;
நெருப்புக் கீறல்களாகி
நெஞ்சைச் சுடுவது!
-0-





இப்போதெல்லாம்
சூரியன் விழ
சந்திரன் எழும்
சந்தியாப் பொழுதுகளில்-நான்
தியானத்தில் மூழ்குவேன்;
துறவு பூண்ட வாழ்க்கையுடன்!

செல்வி-பஹீமா ஜஹான்,
மெல்சிரிபுர

## தேன் கிண்ணம்

## நீ



என்
மௌனங்களை
அடிக்கடி
புக்கார விமான
குண்டுகளாய்
தாக்குகிறாய்...!
••
உனது
விழிகளுக்கு
விளக்கம் தேடி
போய்
உன்
மௌன தீயில்
எனது
மனது எரிகின்றது!
••
சந்தோஷமாய்த்தான்
இருந்தேன்...!
நீ
எனது விழிகளில்
தடுக்கி விழுந்தபோதுதான்
என்
சந்தோஷம்
சமாதியானது...!
••
புத்தகங்களை எல்லாம்
வாசிக்கத் தெரிந்த
உனக்கு-எனது
காதலின் சித்தாந்தங்களை
மட்டும்
ஏன்
வாசிக்க தெரியவில்லை...?
••
நம்மூர்
சமாதான பேச்சு வார்த்தைகளை
போல்
இத்தனை இடைவெளிகள்
நமது
பேச்சுவார்த்தைகளிலும்....!
••
உன்னைப்
புரிந்துகொள்ளவே
முடியவில்லை...!
சமாதானம்
பேசுகிறாயா?
யுத்தப் பிரகடனம்
செய்கிறாயா...?
••
முட்களை
பிடுங்கி
அன்பளித்துவிட்டு
ரோஜாவை
கொடுத்ததாக
ஏன்
சொல்லித் திரிகிறாய்...?
••
நேசத்தையா உன்னிடம்
கேட்டேன்?
நேசத்தைத்தானே
கேட்டேன்!
இதுக்காகவா
இவ்வளவு
இரத்தம்...?
••
அப்போது போல்
இப்போது- என்
இருதயத்தில்
இரத்தம் வடிந்துகொண்டுதான்
இருக்கின்றது...!
••
துடைத்துவிடத்தான்
பக்கத்தில்- நீ
இல்லை...
கண்ணே!
கனவிலாவது
உனது
கைக்குட்டையை
அனுப்புவாயா?

போகவந்தலாவ-மாரி மஹேந்திரா.

## மௌனம்

நீ
பல மணிநேரம்
பேசினாய்....!
சில நிமிடங்கள்
விழிகளை
பேசவிட்டாய்....!
'மௌனம்!'
என் வாழ்வில்
கடைசியில் மிஞ்சியது,
"சில நிமிடங்கள்!!"

எம். சுரேஷ்.

## தபால்காரனுக்கு ஒரு கடிதம்

அன்பே..!
இந்தத் தெருவே
நீ
கொண்டு வரும்
கடிதங்களுக்காக
காத்திருக்கிறது!

எனக்கோ
நீதான் கடிதமாகிறாய்.

எனக்கு நீ
எதுவும் எழுத வேண்டாம்...
தினம் தினம்
வீடுகளுக்குக் கடிதங்களை
விநியோகிக்க வருவதை
மாத்திரம்
விட்டு விடாதே!

ஏனெனில்
உன்னை வாசிக்கவே
என்னிதயம்
காத்திருக்கிறது!

இசார்தீன், மக்கா.

## காத்திருப்பு

உன் மௌனம்தான்
எனக்கு விளங்கிய
முதல் கவிதை!
★ ★
என் கனவுகளுக்கு
நீதான் போதிமரம்!
★ ★
உன்னை சுவாசித்த
ஹிருதயம்-
எவ்வாறு காற்றை,
சுவாசிக்கும்?
★ ★
இல்லாத ஒருகாதலை-
நினைத்து
என் ஆத்மா
ஆனந்த மடைகிறது.
★ ★
இதனால்
ரம்யமான நாட்களெல்லாம்
ரணமாகிப் போயின!
★ ★

ஆயுளில்-
உன் பதிலுக்காக
காத்திருக்கும் என்னை
வாழ்க்கையோ-
மரணமோ ஜெயிக்கும்!

யெம்யே-தஸ்ரிப்,
அக்கரைப்பற்று.

## நிஜம்

செத்தவர்கள்போல்
நடித்தோம்!
பொய்த்துப்பாக்கிகள்
வைத்து
விளையாடியபோது!

நிஜத்துப்பாக்கிகள்
வைத்து
விளையாடி....
இப்போது.
நிஜமாகவே
செத்துமடிகிறோம்.

கவியூரன், அக்கரைப்பற்று.



## வரதட்சனை

கல்யாணச்சந்தையிலே
பரிமாறப்படும்
கொடுக்கல் வாங்கல்.

## கவிதைகள்

எண்ணங்களில்
பிறந்திடும்
சிந்தனா
குழந்தைகள்.

## விசுவாசம்

எழுத்துக்கள்
ஏதுமில்லா - ஓர்
உத்தரவாத பத்திரம்.

நிட்டம்புவ -கலாயுவன்.

## காதலில் தோற்றுப் பார்!

ஆகாயத்தில்
மிதந்து கொண்டிருந்த நீ
இப்போதுதான்
தரை இறங்குவாய்!
★
உலகம் சுற்றுவதே
உன்னால் தான்
என்றிருந்த நீ
உண்மை
உணர்வாய்..!
★
உன் கண்ணால்
பார்க்க முடிந்தும்
குருடாவாய்!
காதால்
கேட்க முடிந்தும்
செவிடாவாய்!
பேசமுடிந்தும்
ஊமையாவாய்!
★
இயத்தில் பாதி
வெட்டிப் பிரிக்கப்பட்டதாய்
வலிக்கும்!
அதுபலமடங்கு
கனக்கும்!
★



பழுத்த இலைபோல
மகிழ்ச்சி, புன்னகை, உன்லெட்சியம்
எல்லாமே
உதிர்ந்து போகும்!
★
பனிபட்டு
உடல் வேர்க்கும்!
நிலவு சுடும்!
பூச்செடி பழிக்கும்!
தபால் காரனைக் கண்டால்
தலை வலிக்கும்!
★
ஒப்பனைக்கான
நேரமும்,
சவரச் செலவும்
மீதமாகும்..!
★
சோகப்பாடல்கள்
சுவாசமாகும்!
கவிதைகள்
உணவாகும்!
கஷ்டங்களே
வாழ்க்கையாகும்!
★



காதல் தோல்வியை
அனுபவித்த எவருக்கும்
நரகமொரு
வேதனையாகத் தோன்றாது!
ஆதலால்
காதலில்
தோற்றுப்பார்...!

மீராவோடை -எஸ். நளீம்

## ஆம்-இல்லை

நீதிமன்றம் ஒன்றில் வழக்கு நடந்து கொண்டிருந்தது.

சட்டத்தரணி குற்றம் சாட்டப் பட்டவரைப் பார்த்து கூறினார் இப்படி; "முதலில் பதில் சொல்லக் கற்றுக் கொள்ளுங்கள். வளவளவென்று பேசாமல் கேட்ட கேள்விக்கு 'ஆம், இல்லை' என்று மட்டும் பதில் கூறுங்கள். போதும்."

அவன் அதற்கு பதில் சொல்லாமல் நீதிபதியைப் பார்த்தான்.

"என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?" என்றார் நீதிபதி.

"இந்த சட்டத்தரணி கூறியபடி இந்த வழக்கில் பதில் சொல்ல முடியாது."

"ஏன் என்று விளக்குங்கள் பார்ப் போம்?"



அவன் நீதிபதியைப் பார்த்து கேட்டான், "உங்கள் மனைவியை நேற்றும் அடித்து உதைத் தீர்களா? இதற்கு பதில் சொல்லுங்கள் பார்க் கலாம்?"

ஆம் என்றால் அடித்து உதைப்பது உண்மை யாகிவிடும். இல்லை என்றால் நேற்று மட்டும் அடித்து உதைக்கவில்லை என்று ஆகிவிடும். நீதிபதியால் பதில் சொல்லமுடியவில்லை.

"உமது இஷ்டப்படியே பதில் சொல்லும்" என்றார் நீதிபதி.

**அவர்:** உன் மகனிடம் 'என்னை மாதிரியே நடித்துக் காட்டாதே என்று கண்டித்தாயா?

**நண்பர்:** ஓ.. ஒரு முட்டாள் மாதிரி நடந்து கொள்ளாதே என்று கண்டித்திருக்கிறேன்.

❑ ❑

**ஜோ:** நேற்று தியேட்டரில் பால்கனியிலிருந்து ஒரு மனிதன் விழுந்து விட்டான். என்னைத் தவிர அத்தனை பேரும் விழுந்து, விழுந்து சிரித்தனர்.

**ஜான்:** நீ ஏன் சிரிக்கவில்லை?

**ஜோ:** விழுந்த மனிதன் நான்தான்.

## இந்த வாரம் உங்கள் பலன்

( 21.01.96 முதல் 27.01.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மகரம் | -சூரியன், செவ்வாய். |
| கும்பம் | -சனி, வெள்ளி. |
| மீனம் | -கேது. |
| கன்னி | -இராகு. |
| தனு | -புதன், வியாழன். |

★ சந்திரன்-மகரம், கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு-தொழில் மந்தம், பணவரவு தடை. | காலை 6 மணி |
| திங்கள்- பொருள் வரவு, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், தொழில் சிறப்பு. | காலை 6 மணி |
| புதன்- அந்நியர் உதவி, மனக் கலக்கம். | பகல் 2 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| வெள்ளி -தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| சனி- இனசன நன்மை, கௌரவம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | காலை 6 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, செய்தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| வியாழன்-வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| வெள்ளி- வீண் குறை கேட்டல், மனக்கவலை. | பி.ப. 2 மணி |
| சனி- இனசன நன்மை, கௌரவக் குறைவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| சனி- பொருள் வரவு, காரியானுகூலம். | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பொருள்வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பண லாபம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| வியாழன்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பண வரவு. | மு.ப. 9 மணி |
| சனி- செய்தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, கௌரவம். | காலை 7 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| புதன்- வீண்துயர், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| வியாழன்-இனசன நன்மை, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| சனி- அந்நியர் சகவாசம், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-1

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, இனசன நன்மை. | காலை 6 மணி |
| புதன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- வீண் குறை கேட்டல், இனசன நன்மை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 6 மணி |
| சனி- தொழில் மந்தம், பண இழப்பு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பணவரவு. | மு.ப. 9 மணி |
| புதன் - அந்நியர் உதவி, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, அந்நியர் பகை. | காலை 6 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| சனி- கௌரவம், செல்வாக்கு மேன்மை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, கௌரவக் கேடு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, மனக் கஷ்டம். | பகல் 12 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பொருள் வரவு. | மு.ப. 9 மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், தொழில் விருத்தி. | காலை 5 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| செவ்வாய்- மனக்கலக்கம், வெளியிட வாழ்க்கை. | பகல் 12 மணி |
| புதன்- துயர் நீங்கும், முயற்சி வெற்றி. | காலை 7 மணி |
| வியாழன்-வெளியிட வாழ்க்கை, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| திங்கள்- உயர்ந்த நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| புதன்- இனசன நன்மை, பணவிரயம். | காலை 7 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, வீண் குறை கேட்டல். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- இன்பநிலை, புதிய முயற்சி. | காலை 7 மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், உறவினர் பகை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| செவ்வாய்- செய்தொழில் நன்மை, காரியானுகூலம். | காலை 7 மணி |
| புதன்- உறவினர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| வியாழன்- காரிய சித்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- பெரியோர் நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- வீண் அலைச்சல், பொருள் விரயம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள் புதன், அதிஷ்ட இலக்கம்-8

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் நட்டம், முயற்சி தடை. | காலை 7 மணி |
| திங்கள்- உறவினர் பகை, மனக் கசப்பு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | காலை 6 மணி |
| புதன்- துயர் நீங்கும், பிரயாண மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| வெள்ளி- தூரஇடப் பயணம், கௌரவம் | பி.ப. 2 மணி |
| சனி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

www.padippakam.com





## அழகைப் பார்

வானில் பஞ்சாய் மேகங்கள்
வளைந்து நெளிந்து போகுது பார்!
கானில் உலவும் குயில் கூட
கனிவாய்க் கூவி செல்லுது பார்!

காவில் மலரும் மலர்களெல்லாம்
சுகந்தம் வீசி திகழுது பார்!
ஆவின் கன்று குதித் தோடி
அங்கும் இங்கும் வருகுது பார்!

தரையில் நிமிர்ந்த குன்றுகளில்
அருவிகள் நெளிந்து பாயுது பார்!
நிரையாய் வளர்ந்த தேயிலைகள்
சம்பளத் தோற்றம் காட்டுது பார்!

இயற்கை அன்னை இங்கெங்கும்
இணைத்துத்தந்த அழகைப் பார்
செயற்கையாக எது வரினும்
இயற்கையை வெல்ல ஏது முண்டோ?

-பசறையூர் மல்லிகா பத்மநாதன்

மனதிலுறுதி வேண்டும்,
வாக்கினிலே யினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்,
நெருங்கின பொருள் கைபட வேண்டும்!
-சுப்பிரமணிய பாரதியார்.

## குட்டி ஆமையின் கெட்டித்தனம்

### பாப்பா முரசு சிறுகதை

"குழந்தை நன்றாகத் தூங்குகிறது. அது கண் விழிக்கு முன்னர் நாம் போய் இரை தேடிக்கொண்டு வந்து விடலாம்," என்றது அப்பா ஆமை.

"ஆமாம். வாருங்கள் சீக்கிரம் போயிட்டு வந்துவிடலாம்" என்றது தாய் ஆமை.

இரண்டு ஆமைகளும், உறங்கிக் கொண்டிருக்கும் தங்கள் குட்டி ஆமையை பாசத்துடன் பார்த்துவிட்டு குகையை விட்டு வெளியே வந்தன.

அது கடுமையான கோடை காலம். காலையிலேயே வெயில் சுட்டெரித்தது.

உணவை எளிதில் பெறவேண்டும் என்பதற்காகவே ஆமைகள் இரண்டும் ஆற்றங்கரையோரம் நாணல் புற்கள் உள்ள இடத்திலேயே தங்கள் வீட்டை அமைத்திருந்தன.

ஆமைகள் இரண்டும் உணவைத் தேடி ஆற்றின் கரையோரமாக நடந்து வெகுதூரம் சென்று விட்டன. எங்கும் அவற்றிற்கு உணவு கிடைக்கவில்லை.

"இவ்வளவு தூரம் வந்து விட்டோம். ஒன்றும் கிடைக்கவில்லை. இன்னும் சிறிது தூரம் சென்று பார்ப்போம்," என்றது தாய் ஆமை.

"எவ்வளவு தூரமானாலும் போய்த் தானே ஆக வேண்டும். குழந்தை பசியோடு இருக்கும்," என்றது அப்பா ஆமை.

அதே சமயம் குகையில்- குட்டி ஆமை உறக்கம் கலைந்து எழுந்தது. சுற்றிலும் பார்த்துத் தன் தாய் தந்தையரைத் தேடியது.

"அம்மா! அப்பா!" என்று குரல் கொடுத்துக் கொண்டே குகைக்கு வெளியே வந்து நின்று அங்கும் இங்கும் பார்த்தது. அதற்கும் ஒரே பசி.

அம்மாவும், அப்பாவும் உணவு தேடத் தான் சென்றிருப்பார்கள் என்று எண்ணிய குட்டி ஆமை, குகையை விட்டு வெளியே வந்தது.

அது சிறிது தூரம் தான் சென்றிருக்கும். திடீரென்று அதன் முன்னே ஒரு ஓநாய் வந்து நின்றது. பார்ப்பதற்கே பயங்கரமாய் இருந்தது. உடம்பு முழுக்க அடர்த்தியான ரோமமும், சிவந்த கண்களும், கூரிய பற்களையும் கொண்டிருந்தது அந்த ஓநாய்.

குட்டி ஆமை, அந்த ஓநாயைப் பார்த்து அப்படியே பயந்து போய் நின்று விட்டது.

"ஏ குட்டி ஆமையே! எங்கே போகிறாய்?" என்று கேட்டது ஓநாய்.

"நான்... நான் என் அப்பா, அம்மாவைத் தேடிச் செல்கிறேன்!" என்றது குட்டி ஆமை.

"எனக்கோ அகோரப்பசி. உன்னைச் சாப்பிடப்போகிறேன்!" என்றது ஓநாய்.

"ஓநாயே! நான் உனக்கு என்ன தீங்கு செய்தேன்? நீயோ இவ்வுலகில் பிறந்து எத்தனையோ இன்பதுன்பங்களை அனுபவித்திருப்பாய். ஆனால் நான் இந்த உலகத்தில் அனுபவிக்க வேண்டியது நிறைய உள்ளது. ஆகவே தயவு செய்து என்னைக் கொன்று விடாதே," என்று கெஞ்சியது குட்டி ஆமை.

"இதோ பார்! உன்னைப் பற்றி நான் கவலைப்பட்டால் இப்பொழுது பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான். வேண்டுமானால் உனது கடைசி ஆசை ஏதாவது இருந்தால் சொல். நிறைவேற்றி விட்டுப்பிறகு உன்னைக் கொல்கிறேன்!" என்றது ஓநாய்.



குட்டி ஆமைக்கு அதனிடமிருந்து தப்பிக்கவே முடியாது என்று தோன்றியது. தாய், தந்தையர் இல்லாத நேரத்தில் இப்படி வெளியே வந்து மாட்டிக் கொண்டோமே என்று நினைத்துக் கலங்கியது.

"குட்டி ஆமையே! என்ன பேசாமல் இருக்கிறாய்? உனக்குக் கடைசி ஆசை ஏதாவது இருக்கிறதா இல்லையா? சீக்கிரம் சொல்!" என்று உறுமியது ஓநாய்.

'கடைசி ஆசை...கடைசி ஆசை... எதைச் சொல்லலாம்... எதைச் சொல்லலாம்! இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தப்பிக்க ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்', எனச் சிந்தித்துக் கொண்டே சுற்றிலும் ஒரு முறை பார்த்தது.

ஆற்றில் ஓடிக்கொண்டிருக்கும் நீர் அதன் பார்வையில் பட்டது.

திடீரென்று அதற்கு ஒரு யோசனை தோன்றியது.

"ஓநாயே! எனது கடைசி ஆசையைச் சொன்னால் நிறைவேற்றுவாயா?" என்று பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்டது குட்டி ஆமை.

"என்னைக் கொல்லாதே என்பதைத் தவிர வேறு எதைக் கேட்டாலும் நிறைவேற்றி வைக்கிறேன்," என்றது ஓநாய்.

"நான் சாவதற்கு முன் இந்த ஆற்றில் இறங்கி நன்றாகக் குளிக்க வேண்டும்" என்றது குட்டி ஆமை.

"இவ்வளவு தானே! போ! போய்க்குளித்து விட்டு விரைவில் திரும்பி வா. பசி உயிர் போகிறது!" என்றது ஓநாய்.

குட்டி ஆமை ஒரே ஓட்டமாக ஓடி ஆற்றில் இறங்கியது. பிறகு அழகாக நீந்தி ஆற்றின் நடுப் பகுதிக்குச் சென்றது. அங்கிருந்தபடியே தலையைத் தூக்கி, கரையில் நாக்கைத் தொங்கப் போட்டபடி அமர்ந்திருக்கும் ஓநாயைப் பார்த்தது.

"ஓநாயே! என் கடைசி ஆசையை நிறைவேற்றி வைத்த உனக்கு நன்றி. நான் தப்பித்தேன்," என்று கூறி விட்டு விரைவாக நீந்திச் சென்றது.

குட்டி ஆமை தனது கெட்டித்தனத்தால் ஓநாயிடமிருந்து தப்பிக் கொண்டது. ●

## வாரம் ஒரு நாடு

### தென் கொரியா

**தலைநகர்** - சியோல்
**பரப்பு** - 98,859 சதுர கிலோ மீட்டர்
**மக்கள் தொகை** - 4.45 கோடி
**மொழி** - கொரியன்
**எழுத்தறிவு** - 92%
**சமயம்** - புத்தம், கிறிஸ்தவம், கன்பியூஸியனிஸம்
**நாணயம்** - வோன்
**தனிநபர் வருமானம்** - 6740 டொலர்.




**வரலாறு:**

1904 இல் ஜப்பானின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. இரண்டாம் உலகப் போரின் போது தென் கொரியாவில் அமெரிக்கா மற்றும் சோவியத் படைகளின் முன் ஜப்பான் சரணடைந்தது. இராணுவ இயக்கத்திற்காக கொரியா 38 வது அட்ச ரேகையில் இரண்டாகப் பிளக்கப்பட்டது. வடகொரியா 1950 இல் தென்கொரியாவை ஆக்கிரமித்தது. சீனாவும், வடகொரியாவுடன் சேர்ந்து கொண்டது. ஐ.நா.சபை 1953 இல் போர் நிறுத்தத்தை அமுலாக்கியது. தென்கொரியாவும் அமெரிக்காவும், தமக்குள் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கின. வடகொரியாவில் சோவியத் துணையுடன் ஒரு அரசு ஏற்கனவே செயற்பட்டு வந்தது. இரண்டு கொரியாவும் இணைய வேண்டும் என்பதற்கான பேச்சுவார்த்தைகள் 1980 முதலே ஆரம்பித்தது என்றாலும், அதனால் குறிப்பிடத்தக்க பலன் எதுவும் கிடைக்கவில்லை. 1990 இல் சிறிய சில நீக்குப்போக்குகளுக்கு இரண்டு கொரியாவும் தயாராகின. பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்னும் ஒப்பந்தத்தில் இரண்டு கொரியாவும் 1991 இல் கையெழுத்திட்டன. அதிபரைப் பொது மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

**பொருளாதாரம்:**

விவசாயம் முக்கிய தொழில். நெல் மற்றும் பழவகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடித்தல் சிறப்படைந்துள்ளன. அண்மைக் காலங்களில் தொழில் துறையில் மிக முன்னேற்றம் கண்டுள்ளது. சுற்றுலா சிறந்த வருமான மூலம். ●

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 27.01.1996.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 125
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 123

பரிசுக்குரியவர்:
பொ.விஸ்வநாதன்
பு/உடப்பு தமிழ் வித்தியாலயம், உடப்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ஷபிரா இக்பால்<br>முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு-4 | எச்.என்.பேகம்<br>அல்-அஸ்ஹர் மத்திய மகா வித், திஹாரிய. |
| செல்வி.ஜீவிதா பாலசிங்கம்<br>இ-மி-த-க-பாடசாலை, ஆரையம்பதி. | லி.ரஜீவ்<br>பரி.யோவான் தமிழ் ம.வி, இறக்குவானை. |
| ந.மௌலீசன்<br>மெதடிஸ்த மத்திய கல்லூரி, மட்டுநகர். | தாமோதரம் பிரதீவன்<br>கார்மேல் பாத்திமா தேசிய கல்லூரி, கல்முனை. |
| எம்.முஹம்மது நிலுாஜான்<br>ஜீலான்.மு.ம.கல்லூரி, ஹேனமுல்லை. | அ.முஹம்மத் அஸாம்<br>சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். |
| அ.சத்தியதாசன்<br>வேவெஸ்ச, தமிழ் வித்தியாலயம், பதுளை. | சுகந்தினிவேலுப்பிள்ளை<br>பூர்ணாவத்தை, கண்டி. |

## விடுகதைகளும் விடைகளும்

1. அண்ணனும் தம்பியும் இரண்டு பேர்; அவர்களைச் சுற்றிலும் பன்னிரெண்டு பேர். அது என்ன?
2. இரண்டு தோட்டம்- நான்கு வேலி- பூப்பூத்தால் பூந்தோட்டம் பாழ்- அது என்ன?
3. இரவும் பகலும் ஓய்வு இல்லை; படுத்தால் எழுப்ப ஆள் இல்லை. அது என்ன?
4. இந்த ஊரிலே அடிபட்டவன், அடுத்த ஊரிலே போய் சொல்லுவான். அவன் யார்?
5. கழுத்தை வெட்டுவான்; கையை வெட்டுவான்- அவனை ஏனென்று கேட்பார் யாருமில்லை. அவன் யார்?
6. தண்ணிரில் மிதக்கும் கப்பல் அல்ல; கனமாக இருக்கும் கல்லும் அல்ல; வெயிலில் உருகும் வெண்ணெயும் அல்ல. அது என்ன?
7. பச்சைக் கோழி இட்டது பச்சை முட்டை; பொரிச்சது வெள்ளைக்குஞ்சு. அது என்ன?
8. கரும்புத் தோட்டத்திற்குள் கறுப்புச் சிப்பாய்கள்; கையால் நசுக்க இஷ்டமில்லை. ஆனால் கண்ணில் படுவது கஷ்டம். அது என்ன?
9. அடிமேல் அடிபட்டும் அசராத சின்னப்பையன்; குறி வைத்த இடம் பார்த்து தப்பாமல் சேருகிறான். அவன் யார்?
10. ஓடிப்படர்வேன் கொடியல்ல; ஒளி மிக உண்டு நிலவல்ல; மனைகளை அலங்கரிப்பேன் மலருமல்ல. நான் யார்?

### விடைகள்

1. கடிகாரம் 2. கண்
3. இதயம் 4. தந்தி
5. தையல்காரன் 6. பனிக்கட்டி
7. பருத்தி 8. பேன்
9. கடிதம் 10. மின்சாரம்

- சி. கோகர்ணேசன் -

## பெரிய தட்டச்சு

தட்டச்சுக்களிலேயே (ரைப்ரைட்டர்) மிகப் பெரிய 'கீபோர்ட்' கொண்ட தட்டச்சு சீன நாட்டில் உள்ளது ஆகும். இந்தத் தட்டச்சின் நீளம் 24 அங்குலம். அகலம் 17 அங்குலம். இதில் 5850 சீன எழுத்துக்கள், எண்கள், அடையாளங்கள் ஆகியவை உள்ளன. ●



## நோபல் பரிசு

உலகிலேயே மிக மிக உயர்ந்த பரிசான நோபல் பரிசு முதன் முறையாக 1901ம் அண்டில் இருந்து வழங்கப்பட்டு வருகிறது. சுவீடன் நாட்டைச் சேர்ந்த அல்பிரட் நோபல் என்பவர் பெயரால் தான் இந்தப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. டைனமைட் எனப்படும் ஒரு வகை வெடிமருந்தைக் கண்டுபிடித்த அல்பிரட் நோபல் ஒரு வேதியல் நிபுணரும், பொறியியலாளரும் ஆவார்.

இவருடைய மரணத்திற்குப்பின், தனது உயிலில் இந்த நோபல் பரிசை வழங்குமாறு அறிவித்துள்ளார். இதற்காக இவர் விட்டுச் சென்ற சொத்தில் இருந்தே வருடாவருடம் இரசாயனம், பௌதீகம், மருத்துவம், இலக்கியம் மற்றும் அமைதி ஆகிய துறைகளில் மனித இனத்திற்காகப் பெரும் சேவை செய்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

முதன் முறையாக நோபல் பரிசு பெற்றவர்கள் யார் யார் தெரியுமா?



அல்பிரட் நோபல்

**ஹென்றி டுனன்ட், பிரடெரிக் பாசி** (அமைதி)
**வில்ஹெம் ரொண்ட் ஜென்ட்** (பௌதீகம்)
**எமில்வான் பெக்ரிங்** (மருத்துவம்)
**ஜக் கோபஸ் ஹென்றியஸ் வான்ட்ஹொப்** (இரசாயனம்)
**சாலி புருட்ஹோம்** (இலக்கியம்)

## ஐ.நா. தகவல்கள்



★ 1964ல் சைப்பிரஸில் கிறீஸ்-துருக்கி மோதியதன் விளைவாக அமைதிப்படை அனுப்பப்பட்டு போர் நிறுத்த எல்லையைக் காவல் காக்கத் தொடங்கியது. இன்றும் இது தொடர்கிறது.

★ அணு ஆயுதப் பரவலுக்கு எதிரான ஒப்பந்தம் ஒன்றை பொதுச்சபை(ஜெனரல் கவுன்ஸில்), 1968ல் ஏற்றுக் கொண்டது.

★ 1971ல் 75 கோடி மக்கள் தொகையைக் கொடிருந்த மக்கள் சீனக் குடியரசு ஐ.நா.சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.





படிப்பகம்

www.padippakam.com

# விலை உயர்ந்த குற்றம்

பிரபாகர்
பட்டுக்கோட்டை

அந்த வீட்டில் உள்ள எட்டு வயதுச் சிறுவன் ராபர்ட்டும், வெஸ்லியின் மகன் ஜிம்மியும் ஒரே பள்ளியில் படிக்கிறார்கள். நாளை பள்ளி விடுமுறை. நாளை மறுநாள் பள்ளி உண்டு. அப்போது பள்ளிக்கு வந்தால், ஜிம்மியைக் காட்டுகிறேன் என்றான் ராபர்ட்.

பள்ளி விலாசம், வகுப்பு எல்லாம் குறித்துக்கொண்டு அவனுக்கு ஒரு முத்தம் கொடுத்து விட்டு, சுசிலா வைத்திருந்த பட்டை சாக்லேட்டையும் கொடுத்து விட்டு விடை பெற்றார்கள்.

"அப்புறம்?" என்றான் பப்பு.

"போதும். நேரா ஹில்டன் ஹோட்டல் தான்" என்றான் பரத்.

"பப்பு, எல்லாம் ஆனதும் என்னை ஷாப்பிங் அழைச்சுட்டுப் போறியா? இவரை நம்ப முடியாது" என்றாள் சுசிலா.

"உங்களுக்கு என்ன வாங்கணும்?"

"ரெண்டு சூட்கேஸ் நிறைய வாங்கணும். எங்களோடதானே தங்கறே?"

"ஆமாம்" என்றான் பப்பு, "பாஸ்டன் போய்ட்டு திரும்ப காலைல வரதுன்னா போர்."

ஹோட்டலில் நியூட்டனும், பிரான்சிஸ் கென்னடியும் வந்திருந்தார்கள். தங்கள் முயற்சியில் பலன் இல்லை, நான்கு நண்பர்களை விசாரித்தும் யாருக்கும் பார்க்கர் ஸ்மித்தின் தற்போதைய முகவரி தெரியவில்லை என்றார்கள்.

பரத் தங்கள் அலைச்சலை விவரித்தான்.

"வெரிகுட்" என்றார் கென்னடி.

நாளைய நிகழ்ச்சி நிரலைப் பார்த்த நியூட்டன், "நல்ல வேளையாக மூன்று நிகழ்ச்சிகளும் வெவ்வேறு நேரங்களில் இருக்கிறது. ஒன்று முடித்து மற்றொன்று என்று போகலாம். இந்த ஆனியைப் பிடித்துவிட்டோம் என்றாலே பாதி வேலை முடிந்தது."

"நாளை இந்த மூன்று நிகழ்ச்சிகளுக்கும் நாம் அனைவருமே போகிறோம். ஆனால் நாங்கள் மூவரும் ஒரு பகுதியிலும் நீங்கள் இருவரும் ஒரு பகுதியிலும் அமர்ந்து கொள்வோம். ஆனி வந்தி

19

ருந்தால், சூழ்நிலைக்குத் தக்கபடி சமயோசிதமாக அவளை மடக்க வேண்டும். எங்களிடமிருந்து அவள் தப்பி விட்டால் நீங்களும், உங்களிடமிருந்து தப்பிவிட்டால் நாங்களும் அவளை மடக்க வேண்டும். எனக்கு ஒரு பிஸ்டல் வேண்டும் - தற்காப்புக்காக" என்றான் பரத்.

"நாளை எடுத்து வருகிறேன்" என்றார் கென்னடி.

"இன்னொரு தகவல் -இன்றிரவுக்குள் சேகரிக்க முடியுமா என்று பாருங்கள்."

"என்ன?"

"வெஸ்லி ஒரு டிரைவர். ப்ராஃபெஷனல் டிரைவர். அவனும் எதற்காக திடீரென்று வீட்டைக் காலி செய்ய வேண்டும்? ஏதோ ஒரு வகையில் அவனும் இந்தக் கடத்தலில் ஈடுபட்டிருக்க வேண் டும். டிரைவிங் லைசென்ஸ் வழங்கும் அலுவலகத்தில் அவன் புதிய விலாசம் கொடுத்திருக்கிறானா என்று விசாரிக்க வேண்டும்."

"விசாரித்து விடுகிறேன்" என்றார் கென்னடி.

"நாளை மறுநாள் அந்தப் பள்ளிக்குப் போய் வெஸ்லியின் மகன் ஜிம்மி மூலம் புதிய விலாசம் தெரிந்து கொள்ளும் முயற்சியை வைத்துக் கொள்ளலாம்."

மேலும் விவாதித்து விட்டு கென்னடி புறப்பட்டுப் போனார். உடம்பெல்லாம் வலிக்கிறது என்று குட்நைட் சொல்லி படுக்கப் போனார் நியூட்டன். பப்பு ஹாலின் சோபாவில் படுத்துக் கொள்ள, சுசிலாவும், பரத்தும் வெகு நேரம் வேறு, வேறு சானல்கள் மாற்றி, மாற்றி டி.வி. புரோக்ராம்களை ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

ஹாலிவுட்டில் தயாராகிக் கொண்டிருக்கும், வர இருக்கும் திரைப்படங்களின் விளம்பரங்களே சுவாரசியமாக இருந்தன. எதைத் தொட்டாலும் பிரம்மாண்டமாகத் தொடுகிற நேர்த்தி ஒவ்வொரு புரோக்ராமிலும் தெரிந்தது. தத்தம் அறைக்குப் படுக்கப் போகும் முன் பப்பு உறங்கி விட்டானா என்று பார்த்துக் கொண்டு சுசி ஒரு குட்நைட் முத்தம் கொடுக்க... தித்திப்பாக உறங்கினான் பரத்.

* * *

காலையில் பனி சுலபத்தில் விலகுவதாக இல்லை. அதன் பிடிவாதத்தில் எட்டு மணி என்பதை நம்பாமல் மீண்டும் கடிகாரம் பார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டியிருந்தது. ஜன்னலைத் திறந்து வைத்துக் கொண்டு, ஸ்வெட்டருக்கு மேலும் குளிரில் ஸ்ஸ்ஸ் என்று பாம்புச் சத்தம் செய்து கொண்டு கடமையைப் புறக்கணித்து கவிதை தயாரிக்கலாம் போல ஆசை வந்தது. பூமியைத் தழுவிய பனிப் பிசாசு என்றெல்லாம் வரிகள் ஓடின.

குளித்து, உடுத்தி ரெஸ்ட்டாரண்டில் உண்டு திரும்பி, பேப்பர் பார்த்து...

ஒன்பதரைக்கு கென்னடி வந்து விட்டார். பரத்திற்கு பிஸ்டல் கொடுத்தார். லைசென்ஸ் வழங்கும் அலுவலகத்தில் புதிய விலாசம் வெஸ்லி தரவில்லை என்று குறிப்பிட்டார்.

சுசிலா அட்டகாசமாய் அலங்கரித்துக் கொண்டு ப்ளட் ரெட்டில் டாப்ஸ் அணிந்து டாப்ஸில் 'JACK AND CHILL' என்று வசன மணிந்து புறப்பட்டாள்.

ஏற்கனவே ரிஸப்ஷனில் விசாரித்ததில் மூன்று நிகழ்ச்சிகளில் டோனி பென்னட்டின் இசை நிகழ்ச்சிக்கு மட்டும் முன்கூட்டியே டிக்கெட்டுகள் ரிசர்வ் செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட.. ஐந்து டிக்கெட்டுகள் ரிசர்வ் செய்து தருமாறு பொறுப்பை அவர்களிடமே தந்து விட்டு இரண்டு கார்களில் புறப்பட்டார்கள்.

நேராக லிங்கன் செண்ட்டர் வந்தார்கள். அதில் எந்த ஹால் என்று விசாரித்துக் கொண்டு எண்ட்ரன்ஸ் பாஸ் வாங்கிக் கொண்டு நுழைந்தார்கள்.

அவ்வளவாகக் கூட்டமில்லை. ஹால் முழுவதிலும் மொத்தம் நாற்பது பேருக்கு மேல் இல்லை. எவர்சில்வர் ஸ்டாண்டுகளில் ஜான் ஹூப்பரின் ஓவியங்கள் பிரேம் செய்யப்பட்டுப் பார்வைக்கு இருந்தன. ஒரு பக்கமாக மேடை ஒன்றும், மேடையில் வட்டமாக நாற்காலிகள் போட்டுக் கொண்டு அமர்ந்து பிரதானமாக அமர்ந்திருந்த தொப்பி வைத்த, தாடி வைத்த, கழுத்தில் உருத்திராட்சக் கொட்டை போல தடிமனான ஒரு மணி மாலை அணிந்த நபரை வாயருகில் மைக் நீட்டி கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"அவன் தான் ஜான் ஹூப்பர் போலிருக்கு" என்றாள் சுசிலா.

"கிட்டப் போயி அந்த நிருபர்கள் கூட்டத்தில் ஆனி இருக்காளோன்னு பார்க்கணும்."

பார்த்தார்கள். இல்லை. ஸேல்ஸ் கவுண்டர் ஒன்று அமைக்கப்பட்டு அங்கே ஒரு பெண் சிகரெட் பிடித்துக் கொண்டு ஒரு ஓவியத்தைப் பார்சல் செய்து கொண்டிருக்க அவளிடம் சென்று, "நியுயார்க்கர் பத்திரிகையின் நிருபர் ஆனி வந்தார்களா?" என்றாள் சுசிலா.

"இதுவரை இல்லை."

"வருவதாகத் தகவல் ஏதும்..."

"இல்லை."

"ஒருவேளை வந்தால்... என்னைச் சந்திக்கச் சொல்ல முடியுமா? நான் இங்கேதான் ஓவியங்களைப் பார்த்துக் கொண்டிருப்பேன்-மூடப்படும் வரை. ஒரு முக்கியத் தகவல் இருக்கிறது. சொல்வீர்களா?"

"சொல்கிறேன்."

ஒவ்வொரு ஓவியத்தின் முன்பும் பத்து நிமிடத்திற்கு மேலாக நின்றார்கள். பெரும்பாலும் மாடர்ன் ஆர்ட் வகைகள். கொஞ்சூண்டு புரிந்தது. தலைப்பை வைத்து





மிச்சத்தை சம்மந்தப்படுத்திப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டியிருந்தது. அடிக்கடி மேடையைப் பார்த்துக் கொண்டார்கள். பேசிக் கொண்டபடி பப்பு ஹாலின் வெளிவாசல் அருகிலும், நியூட்டன் ஸேல்ஸ் கவுண்டர் அருகிலும், கென்னடி மேடை அருகிலுமே அதிகமாக நின்றார்கள்.

ஜான் ஹூப்பர் இப்போது தனித்து விடப்பட்டிருந்தான். எதிரே யாருமே இல்லாதிருக்க, திடீரென்று சிரித்துக் கொண்டான். பிறகு எழுந்து கைகளைப் பின்பக்கமாகக் கட்டிக் கொண்டு ஹால் முழுக்க உலாத்தினான். அவனாகவே சில பார்வையாளர்களுக்கு விளக்கம் கொடுத்தான். என்னவோ சொன்ன எவனையோ மார்பில் கை வைத்துக் கோபமாகத் தள்ளினான். மறுபடி மேடை நாற்காலிக்கு சென்று அமர்ந்து கொண்டு அங்கிருந்தே கீழே தள்ளினவனை அவன் தாயாரைச் சம்மந்தப் படுத்தியெல்லாம் திட்டினான்.

நிமிடங்கள் நழுவிக் கொண்டிருந்தன.

கண்காட்சி மூடுகிற நேரம் வந்து விட... இவர்கள் வெளியேறினார்கள். கார்களுக்கு நடக்கும் போது சுசிலா, "சரி, ஆனிதான் வரலை. ஓவியங்களை ரசிக்கலாம்னா எதாச்சும் புரியுதா?" என்றாள்.

நியூட்டன் சிரித்து, "இப்படித்தான் ஒரு தடவை மெட்ராஸ்ல நடந்த ஆர்ட் எக்ஸிபிஷனுக்கு அழைச்சிட்டுப் போயிருந்தப்ப வந்தனாவும் சொன்னா."

"இதைச் சொல்லிவிட்டு உடனே வயித்தைப் பசிக்குதுன்னு சொன்னாங்களா?" என்றாள் சுசிலா.

"இல்லையே, ஏன்?"

"நான் சொல்றேன் இப்ப வயித்தைப் பசிக்குது."

"பிரெட், பிஸ்கெட்ஸ் இப்படி பாக்கெட்டுகள் வாங்கிக்கலாம் சுசி. ரெஸ்ட்டாரெண்ட் போனா நேரம் இழுத்துடும். ஐஸ் ஷோ போட்டி ஆரம்பிச்சிடும். இப்பவே மணி ரெண்டு, அஞ்சி." என்றான் பரத்.

அதன்படி வாங்கிக் கொண்டு மேடிஸன் ஸ்கொயர் கார்டன் வந்தார்கள்.

போட்டிகள் முடியும் வரை இருந்தார்கள். அங்கும் ஏமாற்றமே. ஆனி வரவில்லை. நேராய் ஹோட்டல் வந்து இசை நிகழ்ச்சிக்காக அவர்கள் ரிஸர்வ் செய்திருந்த டிக்கெட்டுகளைப் பெற்றுக் கொண்டு ஒரு ரெஸ்ட்டாரண்ட்டில் லைட்டாக சாப்பிட்டுவிட்டு கார்னெஜி ஹாலுக்கு சரியான நேரத்தில் வந்து விட்டார்கள்.

இன்னும் நிகழ்ச்சி ஆரம்பமாக இல்லை. மேடையின் திரை விலகவில்லை. நாற்காலிகள் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் நிறைந்து கொண்டிருந்தன. இவர்களுக்கு வரிசையாக ஆறாவது வரிசை இடம் அமைந்திருந்தது. ஒரு வரிசைக்கு முப்பது நாற்காலிகள். பத்து நாற்காலிகள் - இடைவெளி - பத்து நாற்காலிகள்.

முதல் வரிசையில் இடது ஒரு பத்து நாற்காலிகள் 'PRESS' என்று குறிப்பிட்டு ஒதுக்கப்பட்டிருக்க... அங்கு தற்சமயம் ஒரே ஒரு நபர் அமர்ந்து கையடக்க நாவல் படித்துக் கொண்டிருந்தான்.

பரத் பத்திரிகையாளர்கள் பகுதியைத் தவிரவும் சுற்றிலும் கண்களை ஓட்டினான். சந்தேகம் ஏற்படும் போதெல்லாம் பாக்கெட்டில் இருந்து - ஆனியின் புகைப்படம் எடுத்து பார்த்துக்கொண்டான். பப்பு ஒருத்தியை ஹாய் என்றான். எக்ஸ்கியூமி சொல்லி எழுந்து அவளிடம் போய் விரிவாகச் சிரித்துப் பேசிவிட்டு வந்து "என் ஃபிரெண்ட்" என்றான்.

"ஆனி வருவாளா சுசி?"

"மூணு நிகழ்ச்சில எதாச்சும் ஒண்ணைக் கவர் பண்ணச் சொல்லியிருக்காங்க. ரெண்டு நிகழ்ச்சிக்கு வரலை. இதுக்கு வந்துதானே ஆகணும்?"

"வராமயும் இருக்கலாம். சுசி. இது ஒண்ணும் கட்டாயமில்லையே..."

இப்போது அரங்கம் ஏறக்குறைய நிறைந்திருக்க... பத்திரிகையாளர்கள் பகுதியில் அந்த பத்து நாற்காலிகளும் நிரம்பியிருக்க அதில் இரண்டு பெண்கள், இருவரும் யாரோ. ஆனி வரவில்லை.

"ஹால்ல லைட்டை அணைச்சுட்டா, அதுக்கப்புறம் ஆனி உள்ளே வந்தாக்கூட நம்மால கண்டு பிடிக்க முடியாது. அதனால நானும், கென்னடியும் நம்ம கார்கிட்டே நிற்கிறோம்." என்று சொல்லிவிட்டு நியூட்டன் எழுந்து கொண்டார்.

நிகழ்ச்சி துவங்கியது. திரை விலகினதுமே வாத்திய கோஷ்டி மத்தியில் டோனி பென்னட் மைக்குடன் தயாராய் இருக்க... ஒன்,டூ,த்ரி செக், செக்... மைக் டெஸ்டிங் இதெல்லாம் நடக்கவில்லை. சபா சார்பாக யாரும் மாலை போடவும் இல்லை.

"குட் ஈவினிங் எவ்ரிபடி" யுடன் நேராக நிகழ்ச்சி ஆரம்பமாகி விட்டது.

பரத் மனம் ஒட்டாமல் ஹாலுக்கு உள்ள ஆறு வாசல்களையும் மாறி, மாறிப் பார்த்துக் கொண்டே இருந்தான். ஒரு மணி நேரத்தில் பிரேக் விடப்பட்டபோது, வாச லுக்கு வந்து நியூட்டனைப் பார்க்க... அவர் உதடுகளைப் பிதுக்கினார்.

"ஒரு வேளை நாம அவளைத் தேடறது தெரிஞ்சி போயிருக்குமா?"

"சான்ஸே இல்லை" என்றாள் சுசி. "ஆனி பத்திரிகை ஆஃபிசைத் தொடர்பு கொண்டிருந்தாக்கூட, அவங்க எங்க ரீலை எடுத்து விட்டிருந்தாக்கூட அதில சந்தேகத்துக்கு எதுவும் இல்லை."

"ஏன் இல்லை? சுசி, டெல்லில அவளை சந்திச்சதா சொல்லியிருக்கோம். ஆனி இந்தியாவுக்கே வந்ததில்லைன்னு வச்சிக்க, சந்தேகப்பட மாட்டாளா?" என்றான் பரத்.

"மிஸ்டர் கென்னடி, நான் ஒரு யோசனை சொல்கிறேன். செயல்படுத்த முடியுமா?

"என்ன சொல்லுங்கள்."

"இப்போது பிரேக் டைம்தானே? நியுயார்க் பத்திரிகை ரிப்போர்ட்டர் மிஸ் ஆனி இங்கு வந்திருந்தால் உடனே அலுவலக அறைக்கு வரவும் என்று ஒரு அறிவிப்பை ஹாலில் ஒலிக்கச் செய்யலாமா? அவள் மேக்கப் மாற்றிக் கொண்டு வந்திருந்தால், இதன்படி அலுவலகத்திற்கு வரலாமில்லையா?"

"அரங்கத்தில் ஆனி இல்லை என்றே படுகிறது. ஆனாலும் இந்த யோசனையை செயல் படுத்திப் பார்க்கலாம்."

கென்னடி விரைந்து செல்ல... சில நிமிடங்களில் அந்த அறிவிப்பு இரண்டு முறை ஹாலில் ஒலித்தது. அலுவலக அறையில் காத்திருந்தார்கள். யாரும் வரவில்லை.

மறுபடி நிகழ்ச்சி துவங்கி தொடர்ந்து கொண்டிருக்க..


இவர்கள் வெளியேறினார்கள். வாசலில் கடைசி எதிர்பார்ப்புடன் காத்திருந்தார்கள்.

ஆனி வரவே இல்லை.

"இனி...? என்ன செய்யலாம்?"

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: ரி.சந்திரசேகரம்
வயது: 28
முகவரி: 48, புவக்வத்தை ரோட், ஹெந்தளை, வத்தளை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எம்.அன்னேஸ்வரி
முகவரி: 178, தங்கநகர், கிளிவெட்டி.
பொழுதுபோக்கு: வழமையானவை



பெயர்: எஸ். யோகநாதன்
வயது: 24
முகவரி: P.O.Box-1118, YANBU, K.S.A.
பொழுது போக்கு: பத்திரிகை, புத்தகம், தொலைக்காட்சி.



பெயர்: எம். இப்ராஹிம்
வயது: 21
முகவரி: 35/1, ஹேனவத்தை, பேருவளை.
பொழுது போக்கு: பத்திரிகை கிரிக்கெட்.



பெயர்: முகமட் பசிர்
வயது: 22
முகவரி: 62/5, கல்யாணி ரோட், பாமன் கடை, கொழும்பு-6.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எம்.ஜுஹார்
வயது: 26
முகவரி: BLOCK No.2.HOUSE No.197, AL AYOON, JAHRA. KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை.

பெயர்: ஜ.ஹில்பாள்
வயது: 17
முகவரி: 19, மலாய் வீதி, கல்பிட்டி.
பொழுது போக்கு: பத்திரிகை, நண்பர் தொடர்பு.

பெயர்: ஏ. அர்சத்
வயது: 19
முகவரி: அகதி முகாம், கப்பலடி, தலவில.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: ஆர்.ராஜ்
வயது: 24
முகவரி: 64 பஸ் ஸ்டாண்ட் கொம்பிளெக்ஸ், வவுனியா.
பொழுது போக்கு: வானொலி கேட்டல்.

பெயர்: எஸ்.அன்டனி
வயது: 26
முகவரி: ரேந்தகொட எஸ்டேட், தெல்விட்ட போஸ்ட், குருநாகல்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: சில்வா
வயது: 24
முகவரி: P-F-1909 ,6020 E- BRUCKE/2, SWITZERLAND.
பொழுது போக்கு: பத்திரிகை, சினிமா.

பெயர்: எம். ரபீக்
வயது: 17
முகவரி: மத்திய வீதி, புதிய காத்தான்குடி-3.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனா நட்பு.



படிப்பகம்

www.padippakam.com

# 60

# தாய்

# மக்சீம் கார்க்கி

"அம்மாடி! இந்த உலகம் எவ்வளவு பெரிதாயிருக்கிறது!" என்று அவள் ஒரு நாள் நிகலாயிடம் வியந்துபோய்க் கூறினாள்.

அவளுக்குப் பூச்சி பொட்டுக்களின் சித்திரங்களைப் பார்ப்பதில் பேரானந்தம்; அதிலும் வண்ணாத்திப் பூச்சிகளைக் காண்பதில் ஓர் அலாதி ஆசை. அவற்றின் சித்திரங்களை வியப்போடு பார்த்துக் கொண்டே அவள் பேசுவாள்:


"நிகலாய் இவானவிச்! இவை அழகாயில்லை? இந்த மாதிரியான அற்புத அழகு எங்கெங்கெல்லாம்தாம் பரந்து கிடக்கிறது. ஆனால், நமது கண்ணுக்கு இவை படுவதேயில்லை. நாம் இவற்றைக் கவனிக்காமலேயே விட்டு விடுகிறோம். எதையுமே அறிந்து கொள்ளாமல், தங்களது கண்களைக் குளிரவைக்கும் காட்சிகளைக் காணாமல், அவற்றைத் தெரிந்து கொள்வதற்கு நேரம் இல்லாமல், ஆசை கூட இல்லாமல், மனிதர்கள் பரபரத்துத் திரிகிறார்கள். இந்த உலகத்திலே எத்தனை செல்வங்கள் இருக்கின்றன, எத்தனை எத்தனை அற்புதமான உயிரினங்கள் இருக்கின்றன என்பதை மட்டும் நாம் தெரிந்து கொண்டால் நமக்கு எவ்வளவு ஆனந்தம் ஏற்படும்? ஒவ்வொரு பொருளும் ஒவ்வொருவருக்காக இருக்கிறது; ஒவ்வொன்றும் எல்லாருக்காகவும் இருக்கிறது – நான் சொல்வது சரிதானே?"

"ஆமாம், ரொம்ப சரி" என்று புன்னகை செய்து கொண்டே கூறிய நிகலாய் தாய்க்கு இன்னொரு படப் புத்தகத்தைக் கொண்டு வந்து கொடுத்தான்.

இரவு நேரங்களில் அவனைப்பார்க்க எத்தனையோ பேர் வந்து போவார்கள். அவனது விருந்தாளிகளில் சிலர் முக்கியமானவர்கள். அலெக்சி வசீலியவிச் – அவன் வெளுத்த முகமும் கறுத்த தாடியும் கொண்டவன், அழகானவன்; ஆனால் மிகுந்த அழுத்தமும் அடக்கமும் கொண்ட ஆசாமி. ரமான் பெத்ரோவிச் – பருக்கள் நிறைந்த உருண்ட முகத்தை உடையவன்; எதற்கெடுத்தாலும் கசந்துபோய் நாக்கை அடிக்கடி சப்புக் கொட்டுவான். இவான் தனிலவிச்–மெலிந்து ஒடுங்கிய குள்ளப் பிறவி; கூரிய தாடியும் மெலிந்த குரலும் உடையவன்; அவசரமாக கீச்கீச்சென்றும் குத்தலாகத் துளைத்துத்துளைத்தும் பேசுவான். இகோர் – இவன் தன் உடம்பிலே வளர்ந்துவரும் நோயை நினைத்தும், தன் தோழர்களைப் பார்த்தும், தன்னைப் பார்த்துமே எப்போதும் சிரித்த வண்ணமாயிருப்பான். எங்கெங்கோ தூரந் தொலை நகரங்களிலிருந்தெல்லாம் பலரும் அங்கு வந்து போவதுண்டு. நிகலாய் அவர்களோடு நெடுநேரம் அமைதியாகப் பேசுவான். ஆனால் அவன் பேசுவதோ ஒரே ஒரு விஷயத்தைப் பற்றித்தான் – உலகத் தொழிலாளி மக்கள் பற்றித்தான்! அவர்கள் விவாதிப்பார்கள்; விவாத வேகத்தால் உத்வேகம் பெற்றுக் கைகளை ஆட்டிக்கொள்வார்கள்; அமிதமாகத் தேநீர் பருகுவார்கள். ஒரு புறத்தில் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே நிகலாய் என்னென்ன அறிக்கைகள் வெளியிட வேண்டும் என்பதை யோசித்து எழுதுவான். பிறகு அவற்றைத் தன் தோழர்களிடம் வாசித்துக் காட்டுவான். அவர்கள் உடனே அந்த அறிக்கையினைப் பிரதி எடுத்துக் கொள்வார்கள்; அதன் பிறகு அவனால் கிழித்துப் போடப்பட்ட நகல் காகிதப் பிரதிகளின் துண்டு துணுக்குகளையெல்லாம் பொறுக்கி யெடுத்து அவற்றை எரித்துப் பொசுக்கி விடுவாள் தாய்.

அவர்களுக்குத் தேநீர் பரிமாறும் போதே தாய் அவர்களைப் பார்ப்பாள்: தொழிலாளி மக்களின் வாழ்க்கை பற்றியும், விதியைப் பற்றியும், அவர்களுக்கு எப்படி உண்மையை மேலும் சிறப்பாகவும் விரைவாகவும் உணர்த்தி, அவர்களது உள்ளங்களை ஒன்றுபட்டு ஓரணியில் நிற்கச் செய்வது என்பதைப் பற்றியும் அவர்கள் உற்சாகத்துடன் பேசுவதைக் கண்டு தாய் வியப்படைவாள். அவர்கள் அடிக்கடி கோபாவேசமடைந்து, பல்வேறு அபிப்பிராயங்களையும் ஆதரித்துப் பேசுவார்கள்; ஒருவரை யொருவர் கடுமையாகவும் கண்டிப்பாகவும் குறை கூறிக் கொள்வார்கள்; ஒருவருக்கொருவர் மனம் புண்படும்படி பேசுவார்கள்; காரசாரமாக விவாதிப்பார்கள்.

அவர்கள் அறிந்து கொண்டதை விட, தொழிலாளர்களின் வாழ்க்கையைப் பற்றித் தனக்கே அதிகம் தெரியும் என்று உணர்ந்தாள் தாய். அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள பணியின் மகத்துவத்தை அவர்களைவிடத் தானே தெள்ளத் தெளிவாகக் காண்பதுபோல அவளுக்குத் தோன்றியது. இந்த உணர்ச்சியால், கணவன், மனைவிக்கிடையே நிலவும் உறவு என்னவென்று அறியாத குழந்தைகள், கணவன் மனைவி விளையாட்டு விளையாடுவதைப் பார்ப்பது போலத் தான் அவள் அவர்களைப் பார்த்தாள். தன்னையுமறியாமலே அவள் அவர்களது பேச்சை



பாவெல், அந்திரேய் முதலியோரது பேச்சுக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தாள். அந்த ஒப்பு நோக்கினால் இரண்டுக்கும் ஏதோ வித்தியாசம் இருப்பது போலத் தோன்றினாலும், அது என்ன என்பது மட்டும் அவளுக்குப் புரியவில்லை. சமயங்களில், தான் குடியிருந்த தொழிலாளர் குடியிருப்பிலுள்ள வீட்டில் பேசுவதைவிட, இவர்கள் ஒரேயடியாய் உரத்துக் கூச்சலிட்டுப் பேசுவதுபோல் அவளுக்குத் தோன்றியது. அதற்குத் தனக்குத் தானே விளக்கமும் கூறிக்கொண்டாள்:

"இவர்களுக்கு அதிக விஷயம் தெரியும்; எனவே அதிகமாகச் சத்தம் போட்டுப் பேசுகிறார்கள்; அவ்வளவுதான்."

ஆனால் அடிக்கடி அவள் மனத்தில் ஒரு எண்ணம் தோன்றியது. அந்த மனிதர்கள் வேண்டுமென்றே ஒருவரை யொருவர் கிண்டிக் கிளறிவிட்டுப் பேசுவதாகவும், தங்களது ஆர்வத்தை வேண்டுமென்றே பெரிதாக வெளிக்காட்டிக் கொள்வதாகவும், ஒவ்வொருவனும் மற்றவனைவிட, தான்தான் உண்மையை நன்கு உணர்ந்து அதைச் சமீபித்து விட்டதாக நிரூபிக்க முயல்வது போலவும், அப்படி ஒருவன் பேசும் போது, மற்றவர்கள் ஒவ்வொருவரும் தாம்தான் உண்மையை நெருங்கி, அதைத் தெளிவாக உணர்ந்து விட்டது போல் காரசாரமாக, உத்வேகத்தோடு பேசிக் கொள்வது போலவும் தாய்க்குத் தோன்றியது. ஒவ்வொருவனும் அடுத்தவனைவிட ஒருபடி மேலே தாவிச் செல்ல விரும்புவது போல் அவள் மனத்தில் பட்டது; இந்த உணர்ச்சி அவளது மனத்தில் ஒரு சோகச் சலனத்தை ஏற்படுத்தியது. துடிதுடிக்கும் புருவங்களோடும் இரங்கிக் கேட்கும் கண்களோடும் அவள் அவர்களைப் பார்ப்பாள். பார்த்தவாறே தனக்குத் தானே நினைத்துக் கொள்வாள்:

"இவர்கள் அனைவரும் பாஷாவையும், அவனது தோழர்களையும் மறந்தே போய் விட்டார்கள்...."

அவர்களது விவாதங்கள் அவளுக்குப் புரியாவிட்டாலும் அவள் அவற்றைக் கவனமாகக் கேட்டாள். ஆனால், அந்த வார்த்தைகளுக்குப் பின்னால் மறைந்திருக்கும் உணர்ச்சியைத் தான் அவள் உணரமுயன்றாள். எது நல்லது என்பதைப் பற்றித் தொழிலாளர் குடியிருப்பில் பேச்செழுந்த காலங்களில் ஏதோ ஒரு முழு உருவம் போல்கருதி அனைவரும் அதை ஒப்புக் கொள்வார்கள்; ஆனால் இங்கு அவர்கள் அதைப் பற்றிப் பேசும் போதோ அந்த நல்ல தன்மை துண்டு பட்டுச் சிதறி, சிறுமையடைந்து போவதுபோல் அவளுக்குத் தோன்றியது. அங்கு அவர்களது உணர்ச்சிகளோ ஆழமும் உறுதியும் வாய்ந்தனவாயிருந்தன; இங்கோ, இவர்களது உணர்ச்சியோ வக்கிர புத்தி படிந்து, எதையுமே வெட்டிப் பேசுவதாக இருந்தது. இங்கு அவர்கள் பழமையைத் தகர்த்தெறிவதைப் பற்றித் தான் அதிகமாகப் பேசினார்கள். அவர்களோ புதுமையை உருவாக்குவதைப் பற்றியே அதிகமாகக் கனவு கண்டார்கள். இந்தக் காரணத்தினால்தான் அவளது மகனது பேச்சும் அந்திரேயின் பேச்சும் மிகுந்த ஆழம் பொருந்தியதாகவும், அவளுக்கு மிகவும் பிடித்துப் போனதாகவும் இருந்தன.

தொழிலாளர்களிடமிருந்து யாரேனும் நிகலாயைப் பார்க்க வந்தால் அவன் அவர்களிடம் மெத்தனமாகவும் அநாயாசமாகவும் நடந்து கொள்வதையும் அவள் கண்டாள். அவனது முகத்தில் இனிமை ததும்பும் ஒரு நயபாவம் தோன்றும்; அவனும் ஏதோ இயற்கைக்கு மாறான மாதிரி அவர்களிடம் இஷ்டப்படியெல்லாம் சில நேரங்களில் கவனக்குறைவாகவும் சில நேரங்களில் கொச்சையாகவும் பேசுவான்.

"இப்படிப் பேசினால்தான் அவர்களுக்குப் புரியும் என்று நினைக்கிறான் போலிருக்கிறது," என்று அவள் தனக்குள் நினைத்துக் கொள்வாள்.

ஆனால் இந்த எண்ணம் மட்டும் அவளைத் திருப்திப் படுத்த வில்லை. அவனைப் பார்க்க வந்த தொழிலாளியும் அவனிடம் மனம் விட்டுப் பேசாமல், எல்லாவற்றையும் உள்ளடக்கிக் கொண்டே பேசுவதாக அவளுக்குத் தோன்றியது. சாதாரணத் தொழிலாளி குடும்பப் பெண்ணான அவளோடு எவ்வளவு லகுவாகவும் தாராளமாகவும் அந்தத் தொழிலாளி பேசினானோ, அதே மாதிரி நிகலாயிடம் அவன் மனம் விட்டுப் பேசக்காணோம். ஒரு தடவை நிகலாய் அந்த அறையை விட்டுச் சென்ற சமயத்தில், அவள் வந்திருந்த இளைஞனைப் பார்த்து பேசினாள்:

"நீ எதற்காகப் பயப்படுகிறாய்? நீ என்ன உபாத்தியாயரிடம் பாடம் ஒப்புவிக்கின்ற சிறுவனா? இல்லையே!"

அந்த இளைஞன் பல்லைக்காட்டிச் சிரித்தான்.

"பழக்கப்படாத இடத்தில் நண்டும் கூட முகம் சிவக்கும்.....என்ன இருந்தாலும், இவர் நம்மைப் போன்றவரில்லையே."

சமயங்களில் சாஷா வருவாள். அவள் வந்தால் வெகுநேரம் தங்கமாட்டாள். சிரிப்பே இல்லாமல் வந்த விஷயத்தைப் பற்றி மட்டுமே இவள் எப்போதும் பேசுவாள். போகும் போது தாயிடம் மாத்திரம் ஒரு வார்த்தை கேட்டு விட்டுப் போவாள்.

"பாவெல் மிகாய்லவிச் எப்படியிருக்கிறான்?"

"சௌக்கியமாய்த்தானிருக்கிறான்; சந்தோஷமாகத்தான் இருக்கிறான்; எல்லாம் கடவுள் அருள்!"

"நான் விசாரித்ததாகச் சொல்லுங்கள்" என்று சொல்லி விட்டு, உடனே மறைந்து விடுவாள் சாஷா.

ஒரு முறை, பாவெலை விசாரணை செய்யாமலே அவனை அதிக காலமாகக் காவலில் வைத்திருப்பதைப் பற்றி அவளிடம் தாய் புகார் கூறினாள். சாஷா முகத்தைச் சுழித்தாள், எதுவும் பேசவில்லை; எனினும் அவளது கை விரல்கள் மட்டும் முறுகிப் பிசைந்து கொண்டன.

தாய்க்கு அவளிடம் அந்த விஷயத்தைச் சொல்லிவிட வேண்டும் என்று ஆசை எழுந்தது:

"அடி, கண்ணே! நீ அவனைக் காதலிப்பது எனக்குத் தெரியும்."

ஆனால் அதைச் சொல்வதற்கு அவளுக்குத் துணிவில்லை அந்தப் பெண்ணின் அழுத்தம் நிறைந்த முகமும், இறுகி உதடுகளும், வெட்டு ஒன்று துண்டு இரண்டாக விஷயத்தைப் பற்றி மட்டுமே பேசும் அவளது பேச்சும் தாயின் மனத்தில் எழும் அன்புணர்ச்சியை எதிர்த்துத்தள்ளின. எனவே அவள் பெருமூச்செறிந்தவாறே தன் கையினால் சாஷாவின் கையை அழுத்திப் பிடிப்பாள்; தனக்குள்ளாகவே நினைத்துக் கொள்வாள்:

"அடி என் கண்ணே! நீ ஒரு துர்ப்பாக்கியசாலி..."

ஒரு நாள் நதாஷா வந்தாள். வந்த இடத்தில் தாய் இங்கு வந்திருப்பதைக் கண்டு அவளுக்கு ஒரே பேரானந்தம். அவள் தாயை அணைத்து முத்தமிட்டாள். பிறகு திடீரென்று அமைதி நிறைந்த குரலில் பேசினாள்:

"என் அம்மா செத்துப்போனாள். பாவம், செத்துப் போனாள்...."

அவள் தன் தலையை நிமிர்த்திச் சிலுப்பி விட்டு, கண்களை விருட்டென்று துடைத்து விட்டுக் கொண்டு பேசினாள்:

"பாவம்! அவளுக்கு இன்னும் ஐம்பது வயது கூட நிறையவில்லை. அவள் இன்னும் ரொம்ப நாளுக்கு உயிர் வாழ்ந்திருக்கலாம். ஆனால், அவள் வாழ்ந்துவந்த வாழ்க்கையைவிட, அவள் செத்துப்போனதே நல்லது என்று தான் எனக்குப் படுகிறது. அவள் தன்னந்தனியாளாக, பக்கத்திலே யார் துணையுமின்றி, யாருக்கும் தேவையற்றவளாக, எப்போது பார்த்தாலும் என் தந்தையின் அதட்டலுக்கும் அடக்குமுறைக்கும் ஆளானவாறே வாழ்ந்தாள். இந்த மாதிரிப் பிழைப்பை வாழ்வென்று சொல்லமுடியுமா? மற்றவர்கள் ஏதோ நல்லகாலம் வரத்தான் போகிறது என்ற நம்பிக்கையிலாவது வாழ்கிறார்கள்; ஆனால் என் தாயோ நாளுக்கு நாள் அதிகப்படியான வசவுகளைக் கேட்டுக் கொண்டிருப்பதைத் தவிர, வேறு எதையுமே எதிர்பார்க்க முடியவில்லை; அந்த நம்பிக்கை அவளுக்கு இல்லை."

"நீங்கள் சொல்வது உண்மை, நதாஷா!" என்று சிந்தித்தவாறே சொன்னாள் தாய்; "நல்ல காலத்தை எதிர்பார்த்துத்தான் ஜனங்கள் வாழ்கிறார்கள். எந்தவித நம்பிக்கையுமே இல்லாவிட்டால், அது எந்த வாழ்வோடு சேர்த்தி?" அவள் அந்தப் பெண்ணின் கையைத் தட்டிக் கொடுத்தாள்: "அப்படி யென்றால் நீங்கள் இப்போது தனியாகத்தான் இருக்கிறீர்கள், இல்லையா?"

"ஆமாம். தன்னந்தனியாகத் தான்" என்று லேசாகச் சொன்னாள் நதாஷா.

"அதுசரி" என்று ஒரு கணம் கழித்துப் புன்னகை புரிந்தவாறே சொன்னாள் தாய். "நல்லவர்கள் என்றுமே அதிக நாட்கள் தனியாக வாழ்வதில்லை; நல்லவர்களோடு மற்றவர்கள் வந்து எப்போதுமே ஒட்டிக் கொள்வார்கள்."

★ ★ ★

ஒரு நெசவுத் தொழிற்சாலையைச் சேர்ந்த பள்ளிக்கூடத்தில் நதாஷா ஆசிரியை வேலை பெற்றாள்; தாய் அவளுக்கு அவ்வப்போது சட்டவிரோதமான பிரசுரங்களையும் பத்திரிகைகளையும் அறிக்கைகளையும் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வருவாள்.

இதுவே அவளது வேலையாகி விட்டது. மாதத்தில் எத்தனையோ தடவைகளில், அவள் ஒரு கன்னியா ஸ்திரி மாதிரியோ, அல்லது துணிமணி, ரிப்பன், லேஸ் முதலியனவற்றை விற்கும் அங்காடிக்காரி போலவோ, அல்லது செயலுள்ள பட்டணக்கரைக் குடும்பப் பெண் மாதிரியோ, பக்திமயமான புண்ணிய ஸ்தல யாத்திரிகை போலவோ மாறு வேஷம் தரித்துக் கொள்வாள்; தோளிலே ஒரு பையையாவது; கையிலே ஒரு டிரங்குப் பெட்டியையாவது தூக்கிக் கொண்டே அவள் அந்த மாகாணம் முழுவதும் சுற்றித் திரிந்தாள். ரயிலாகட்டும், படகாகட்டும், ஹோட்டலாகட்டும், சத்திரம் சாவடிகளாகட்டும், எங்கு போனாலும் அவள் தான் அங்குள்ள அன்னியர்களிடம் மிகுந்த அமைதியோடு முதன் முதல் பேச்சைத் தொடங்குவாள். கொஞ்சம் கூடப் பயமில்லாமல், தன்னுடைய அனுபவ அறிவினாலும், சுமுகமாகப் பழகும் தன்மையாலும் அவர்களது கவனத்தையெல்லாம் தன்பால் கவர்ந்துவிடுவாள்.

ஜனங்களோடு பேசுவதிலும் அவர்களது கதைகளையும் குறைபாடுகளையும், அவர்களைப் புரியாது மயங்க வைக்கும் விஷயங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்வதிலும் அவள் விருப்பம் கொண்டாள். வாழ்க்கையில் மிகவும் சலித்துப் போய், காலத்தின் கோலத்தால் தமது வாழ்க்கையில் அடிமேல் அடிவாங்கியதை எதிர்த்து, அவற்றைத் தவிர்ப்பதற்கு, தம் மனத்தில் எழும் தெள்ளத் தெளிவான கேள்விகளுக்கு விடையும் மார்க்கமும் தெரியாமல், அதைத் தெரிந்துகொள்வதற்கு இடைவிடாது துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கும் மக்களில் யாரையேனும் கண்டால், தாய்க்கு ஒரே ஆனந்தம் உண்டாகும்.

(தொடர்ந்து வரும்)

# அவனைப் பிடியுங்கோ

அந்த பிரபல்ய நகரின் வாரஇறுதிச் சந்தை அமைதியாகக் கூடியது. முன்பென்றால் சந்தைக்கு வரும் மக்கள் ஆற அமர யோசித்து, பொருட்களுக்கு பேரம் பேசி, அங்கு வருவோரை 'விடுப்பு' பார்த்து விட்டு வீடு போய்ச் சேர பல மணித்தியாலங்கள் விழுங்கப்பட்டு விடும். ஆனாலிப்போது?

வீட்டை விட்டு வெளியே வரும் போதே மரணக்குகைக்குள் நுழைவதைப் போல் அச்சம் மனதில் படர்கிறது. உயிருடன் திரும்பினால் சந்தோஷம்; இல்லா விட்டால் குடும்பத்தாருக்கு துக்கம். எங்கே- எப்போது- எது நடக்குமோ? மனிதவுயிர்கள் கேவலமாகி விட்ட காலமிது. சந்தைக்கு வரும் மக்களின் மனநிலையிலும் மாற்றம். ஏதோ அகப்பட்டதை பேரம் பேசாமல் வாங்கிவிட்டு சந்தையை விட்டு வெளியே வந்ததும், "அப்பாடா" என நிம்மதிப்பெரு மூச்சுக்கள் வாடிக்கையாக வெளியேற்றும் மனித இயந்திரமாக மாறி வருகின்றனர்.

அமைதியாக கூடிய சந்தையில் திடீர் ஆரவாரம்.

"அவனைப் பிடியுங்கோ, அவன் தன்ர சாறத்தில அதைக் கட்டியிருக்கிறான்."

ஒரு வயோதிப வியாபாரியின் அலறலால், மக்கள் கிலி கொண்டோடினர், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உஷாரானார்கள். சந்தையின் வாசற் கதவுகள் இழுத்து மூடப்பட்டன. "யாரும் அசையாம நின்ற நின்ற இடத்தில நிற்கவேணும்" அதிகாரக் குரலால் பொலிஸ் உத்தியோகத்தரொருவர் கட்டளையிட, ஏனைய பொலிஸார் "மனிதக் குண்டை" கண்டு பிடிக்கும் நடவடிக் கையிலீடுபட, அப்பாவி மக்களோ, தம் உயிரை கையில் பிடித்தவாறு, எப்போது தாமும் வெடிப்போமென்ற பீதியில் இறுதி நிமிடங்களை எண்ணிக் கொண்டிருக்க... பல நிமிடப் போராட்டத்தின் பின், அந்த மனிதக்குண்டு கண்டு பிடிக்கப்பட்டதும் பரபரப்பலை சற்று ஓய்ந்தது.



அந்த மனிதக் குண்டின் பிரதிபலிப்பு அப்பாவியாக, பைத்தியக்காரனாக வெளிப்பட, அவன் விசாரணைக்காக இழுத்துச் செல்லப்பட்டான். அவன் ஆடைகள் களையப்பட, இடுப்பில் செருகியிருந்த சாறத்தில் 'அதைக்' கண்டதும், பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு லேசாக தலைச்சுற்றலெடுத்தது. பலமாக சத்தமிட்டு, சந்தையை 'கலக்கு கலக்கிய' அந்த வியாபாரி மனிதக் குண்டாக கருதப்பட்ட அம்மனிதனின் அருகில் ஓடி வந்து அவனின் இடுப்பில் செருகப்பட்டிருந்த அந்த குண்டுகளை, 'சொறி...' இரண்டு மாம்பழங்களையும் இழுத்தெடுத்தான். "கள்ள ராஸ்கல்..காசு குடுக்காம, ஓடப் பார்க்கிறியா? உன்ன அடிச்சு நொறுக்கணும்" -முணு முணுத்தான்.

சூழ இருந்தவர்களோ விழித்தார்கள். யாரை யார் அடிப்பது? களவெடுத்தவனையா? இல்லையென்றால் அமைதியான நிமிடங்களை திகிலாக்கிய கிழவனையா? தம்மையெல்லாம் 'பேய்க்' காட்டிய அந்த கிழவனை உதைத்துத் தள்ள இளம் இரத்தமொன்று துடிக்க, கிழவனோ நிதானமாக சிரித்தார்.

## ஜென்ஸி கபூர்

– அநுராதபுரம் –

"ஏன் தம்பீ..கோபிக்கிறாய்? நான் அவனப் புடிக்கச் சொல்லித்தானே சத்தம் போட்டேன். அவனிட்ட குண்டிருக்குது என்று சொன்னேனா? நீங்களெல்லாம் ஏமாந்ததற்கு நானா பழி?" என்றவாறு கிழவன் கூட்டத்தை விலக்கியவாறு வியாபாரத்தைக் கவனிக்க நடந்தான்.

"மருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்ற பழமொழி புது வடிவம் பெற்றது. எனக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டேன் இப்படி:

"மருண்ட கண்களுக்குள் தெரிவதெல்லாம் மனிதக் குண்டுகள்."



படிப்பகம்

www.padippakam.com

# உனக்கென்று ஒருத்தி

"டேய் தினேஷ்... நீதான் எனக்கு ஹெல்ப் பண்ணணும்டா. நீ எனக்கு இந்த ஹெல்ப் மட்டும் பண்ணித் தந்தியானா என் ஆயுசுக்கும் உன்னை மறக்க மாட்டேன். 'ப்ளீஸ்'டா"– சங்கர் கெஞ்சினான்.

"ஆமாடா இப்படித்தான் எல்லோரும் சொல்லுவீங்க; பின்னால ஒண்ணு வந்திருச்சினா எங்களுக்கு 'டாடா' காட்டிருவிங்க." தினேஷ் மறுத்தான்.

"தினேஷ், நீ சரியான 'ஃபூல்'டா.



## மாத்தளை-சிவாஜினி சதாசிவம்

உனக்காகவும் ஒருத்தி காத்திருப்பாடா. இப்ப எனக்கு சாமி கண்ண திறந்திருக்கு. எப்பவும் வழியில வர்ற சீதேவிய காலால உதைக்க கூடாதுடா. உனக்குத்தான் எவ்வளவு சொன்னாலும் புரிய மாட்டேங்குதே."

"ஆமா நா 'ஃபூல்'தான்."

"தினேஷ் நீ எவ்வளவு காலமா என்னோட பழகிட்ட; இந்த விஷயத்தில என்னப் புரிஞ்சிக்காம பேசுறியே! (?).

"ரைட். ஓகே. இப்ப உனக்கு என்ன செய்யணும்? உன் தேவதைகிட்ட ஐ மீன், சீதேவிகிட்ட தூது போகணும்... அவ்வளவு தானே?"

"என்ர தினேஷ்னா தினேஷ்தான்டா."

"'அச்சா படவா'." சங்கர் தினேஷை ஆரத் தழுவினான்.

"போதும் உன்ர 'சொதப்பல்'– (எங்கேயோ படித்த ஞாபகத்தில் சொல்லி விட்டான்) நா நாளைக்கு சரியா 'டு தர்ட்டிக்கு' 'ரியூட்டரி' வாசல்ல நிற்பேன்– வந்திரு. 'நீட்டா டிரஸ்' பண்ணிக்கோ."

தினேஷ் சொல்லிவிட்டு போய்விட்டான்.

மறு நாள் தினேஷ் சொன்ன இடத்திற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னரே சங்கர் வந்துவிட்டான்.

முடியை 'சல்மான்கான்' 'ஸ்டைலில்' வெட்டியிருந்தான். இவ்வளவு நாளும் 'சென்ட்' என்றாலே முகத்தை சுளிக்கும் சங்கர் 'சென்டை' கமகமவென்று அடித்துக் கொண்டு வந்திருந்தான். தினேஷிற்கு ஆச்சரியமாக இருந்தது.

சரியாக 2.45.'ரியூட்டரி'யிலிருந்து அலை அலையாக கூட்டம் வெளிவந்தது.

சங்கருக்கு இதயம் 'படக் படக்' என வழமைக்கு மாறாக அடித்துக்கொண்டது.

வருகிறாள், அவள் வந்துவிட்டாள். இன்னும் ஐந்து அடிகள் வைத்தால் சங்கரையும் தினேஷையும் தாண்டி விடுவாள்.

சங்கர் பார்த்துக் கொண்டே இருந்தான்.

'ரியூட்டரி'. வாசலில் பதித்திருந்த கண்களை சுழலவிட்டான் தினேஷ். எல்லா மாணவிகளும் போய்விட்டார்கள். சங்கருக்கு என்ன நடந்தது?

சங்கரின் கனவில் 'பருவத்தின் வாசலிலே'யில் பாலசுப்பிரமணியம் வந்து "கோயிலின் தேரென தேவதை வருகையோ" பாடிவிட்டு போய்விட்டார்.

"ஆய், ஐய்யோ அம்மா..." தினேஷ் சங்கரின் கால்களை 'பூட்ஸால்' அழுத்தினான்.

"டேய் தினேஷ் வலிக்குதுடா!"

"ஆமா வந்த விஷயம் என்னாச்சு?"

"ஐயையோ போச்சுடா... எல்லாம் போச்சு அவ பிரண்ஸோட போயிட்டாடா. நீ...நீ.. கவனிக்கலியா?"

"என்ன... என்னடா சொல்ற...? நீதானே அவள காட்டறேன்னு கூப்பிட்ட.." தினேஷ் அதிர்ச்சியாய் சங்கரைப் பார்த்தான்.

"சரி வா நாளைக்கு பார்க்கலாம்...!" சங்கர் தினேஷின் தோள்களில் கை போட்டபடி நடந்தான்.

இப்படியே ஒரு வாரமும் காத்திருப்புக்கள் ஏமாற்றமாயின. 'அவள்' நண்பிகளோடு வந்து போனாள்.

தினேஷ் ஒருநாள் ரியூட்டரி வழியே வந்து கொண்டிருந்தான்.

"ஹலோ, ஹலோ' கொஞ்சம் நிற்கிறீங்களா?" சங்கரின் 'தேவதை' வந்தாள். 'பழம் நழுவி பாலில் விழப் போகிறது', வழியில வர்ற சீதேவியை காலால் உதைக்க கூடாது என்று சங்கர் சொல்லியிருக்கிறான். சரி கதைத்துத்தான் பார்ப்போமே!" என்று தினேஷ் ஒரு முடிவெடுத்தான்.

"நீங்க எந்தநாளும் காத்திருக்கிறது புரியுது. 'பிரண்ட்ஸ்' வர்றதால பேச கிடைக்கல. அதோட உங்களோடயும் ஒரு 'வால்' சுத்திக்கிட்டே இருந்ததா– அதுதான்...! நா...நா... உங்கள விரும்புறன்!"

சங்கரின் 'தேவதை' சொல்லிவிட்டுப் போய் விட்டாள். தினேஷிற்கு தலை சுற்ற ஆரம்பித்தது.

# சிறுகதை

# விட்டில் பூச்சி



## கனகசபை தேவகடாட்சம்

**வி**மான ஏணிப்படிகளால் மெதுவாக இறங்குகிறாள். புதிய இடம். சுற்றும் முற்றும் நோக்குகிறாள். 'ஜித்தா'! தனக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தால் வாசித்து அறிந்தாள். 'முக்காட்'டை ஒரு தரம் சரிசெய்து கொண்டு நடக்கிறாள். பக்குவமாக தன் பாஸ் போட்டை பார்த்து மனதுக்குள் பேரை கூறிக்கொள்கிறாள். 'சித்தி சுலைகா'! உள்ளூர ஒரு சிரிப்பும்–பய உணர்வும்!

பால வயதுடைய இருபிள்ளைகள் கொண்ட அடக்கமான குடும்பம் அது! இருபிள்ளைகளையும் அணைக்கிறாள். தன் பிள்ளைகளின் உருவம் பிரதிபலிக்க கண்ணீர் ஆறாகிறது. தனக்காக ஒதுக்கப்பட்ட அறைக்கு சென்றவள் தன் பொருட்களை வைத்துவிட்டு குளிக்கிறாள்.

இப்போது அவளுக்கான 'அபாத்தி' (முக்காடு) 'ஹபாயா' (கைமுடியுடைய உடை) உடைகள் வீட்டுக்காரரால் வழங்கப்பட்டு விட்டது. அடுத்தது தொழுகை. இதில்தான் அவள் இங்கு பணிபுரிவது தீர்மானிக்கப் படவுள்ளது. மெதுவாக கைகளும் பொத்திமிருந்த பேப்பரில் எழுதிவைத்திருந்த வாசகங்களை மீண்டும் மனனம் செய்து கொண்டாள். அவள் தொழுகையின் ஆரம்ப புனித வாசகங்கள் அந்த அராபிய குடும்பத்தினரின் செவிகளில் அமைதியாக ஒலித்தன.

இப்போது அவளை அந்த அரேபிய குடும்பம் ஏற்றுக் கொண்டுவிட்டது. தன்னை அனுப்பிய இலங்கை ஏஜென்சி கூறியபடி நடித்துவிட்டாள்.

இப்போது ஒரு வாரகாலத்தைக் கடந்து விட்டது. அன்று வெள்ளிக்கிழமை! அவளின் வீட்டுக்கார குடும்பம் தமது உறவினரை சந்திப்பதற்காக வெளியில் செல்கிறார்கள். அவள்... அதாவது... மாறுவேட சித்தி சுலைகா மட்டும் வீட்டில்! ஒருவாரமாக கட்டுப்படுத்தியிருந்த உண்மை உணர்வுகள் உயிர்க்கின்றன. தன் பெட்டியைத் திறந்து வெளியில் எடுக்கிறாள் அந்த கைநூலை. ஆறுதலாக இருந்து சத்தமாகப் படிக்கிறாள் அந்த கந்தசஷ்டி கவசத்தை! 'துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம்! நெஞ்சில் பதிப்போர்க்கு செல்வம் பலித்துக் கதித்தோங்கும்'.....பாடிக் கொண்டே நிமிர்ந்தாள். கதவு நிலையில் சாய்ந்தவாறு நின்றிருந்தான் அந்த வீட்டுக்காரன்!

அவள் கண்கள் இருண்டன. உலகம் சுற்றியது. அவனது அரைகுறை ஆங்கிலமும், சைகையும், அவளுக்குப் புரிந்தது. "நான் இந்துதான்! எனது இரு பிள்ளைகளின் வயிறுப்பசியைப் போக்கவே இப்படிவர வேண்டியதாயிற்று. அத்துடன் கடந்த கலவரத்தில் கணவனை கடத்திக் கொண்டு சுட்டுவிட்டார்கள். நான் ஒரு விதவை." கதறிக் கதறி கூறிக்கொண்டு இருக்கிறாள் அவள்.

எப்படிக் கூறியும் ஆத்திரம் அடங்குவதாக இல்லை. ஒரு முடிவுக்கு வந்தான் வீட்டுக்காரன்! புரிந்தது அவளுக்கு! அதாவது, 'அவளை சுர்தேஷமாக' வைத்திருந்தால் அவள் தொடர்ந்து பணியாற்றலாம். சம்பளமும் அதிகரித்து வழங்கப்படும். இணக்கம் காணப்படாவிட்டால் சுணக்கமின்றி சொந்த ஊர்! கெஞ்சிக் கெஞ்சி அழுதாள்! முடியவில்லை. திரும்பிச் சென்றால் கட்டிய பணம் என்னாவது? அவளின் வறுமை நிலை! கடன் தொல்லை. சீ. நாட்டின் கலவரங்கள் எம்மையெல்லாம் எப்படியான படு குழியில் தள்ளுகிறது. மனம் வெதும்புகின்றாள். எந்த முடிவும் எடுக்க முடியாத நிலையில், அருகில் இருந்த கதிரையில் அமர்ந்தவாறு மீண்டும் திறக்கிறாள் கந்தசஷ்டி கவசத்தை!

'சிற்றிடை அழகுற செவ் வேல்காக்க
நாண் ஆம் கயிற்றை நல் வேல்காக்க
ஆண் பெண் குறிகளை அயில் வேல்காக்க
பிட்ட மிரண்டும் பெரு வேல்காக்க!

# கண் திறந்தபோது

'என்ன என்ன சிற்பங்கள்
என்ன என்ன வண்ணங்கள்
என் கண்கள் அறியாது
என் கைகள் அறியாதோ...?'

**எ**ன்ற சினிமாப் பாடலை முணுமுணுத்துக் கொடிருந்த சங்கர் தோளில் கைவிழ திடுக்கிட்டு யாரென வினவினான். "சங்கர் நான் ஆனந்த்" என்று டாக்டர் ஆனந்த் கூற, "வா ஆனந்த் எப்ப வந்த?"



"நீ பாட்டுப்பாட ஆரம்பித்ததில் இருந்தே வந்துவிட்டேன். சங்கர் உன் கண்கள் பார்வையற்று இருந்தாலும் உன் மனசில அன்பான ஒளி இருக்குடா! அதுவே போதும் உன்னை முழுமனிதனாக வாழவைக்க" என்ற ஆனந்தின் கைகளை இறுக்கமாக பிடித்தான் சங்கர்.

"டேய் ஆனந்த்! நீ என் நண்பன். அதுவும் அன்பான டாக்டர் நண்பன். உனக்கு வேண்டுமென்றால் என் குருடு ஊனமா தெரியாம இருக்கலாம். ஆனா இந்த உலகத்திற்கு நான் குருடன் தானேடா? உலகமே இருட்டாக தெரியும் எனக்கு எல்லாமே வெறுப்பாக இருக்குடா. உன்னால் தான் வாழ்கிறேன். நீ தந்த நம்பிக்கை தான் என்னை இந்த உலகத்தில் மனிதனாக வாழவைத்தது". என்றவனை ஆதரவாக அணைத்த ஆனந்தின் கண்கள் கலங்கின. அக்கணத்தில் கலங்கி நின்ற ஆனந்தும் சீரியசாகி..

"சங்கர்! ஒரு சந்தோசமான விசயம் சொல்ல வந்தேண்டா."

"என்னடா எனக்கு சந்தோசமான விசயம்?"

"ஆமா சங்கர் நாளைக்கு டாக்டர் வில்லியம் அமெரிக்காவில் இருந்து வருகிறார். அடுத்த கிழமை உனக்கு கண் ஆபரேஷன். டாக்டர் வில்லியம் மிகவும் திறமையானவர் நிச்சயம் உனக்கு பார்வை கிடைக்கும்."

"ஆனந்த் நீ என்னடா சொல்ற?"

"நிஜமாத்தான் சொல்றன். நாளைக்கே ஹொஸ்பிட்டல் போகணும். ரெடியாக இரு!"

"ஆனந்த் எனக்கு பயமாக இருக்குடா"

"என்னடா இது? ஆறடி உயரத்தில் கம்பீரமாக வளர்ந்து நிற்கிறாய்– இப்படி பயப்படுகிறாய்? அதைவிட நான் இருக்கும் போது ஏண்டா பயம்? எதையும் பெரிதாக எடுக்காதடா. டேக் இட் ஈசி" என்ற ஆனந்தைக் கட்டிக் கொண்டான் சங்கர்.

"ஆனந்த் இப்பவே சொல்லி வைக்கிறேன். எனக்கு கண் ஆபரேஷன் முடிந்தவுடன் என் கண்களால் உன்னைத்தான் நான் முதலில் பார்ப்பேன். நீ என் பக்கத்தில்

## கே.பிரியா திருமலை

தான் இருக்க வேண்டும். ஏன் தெரியுமா? நீ எப்படி இருப்பாய் என்றே எனக்கு தெரியாதுடா!" என்ற சங்கரை ஆதரவுடன் அணைத்துக்கொண்ட ஆனந்த் "டோண்ட் வொறி சங்கர்! நான் எப்போதும் உன்னோடு தான் இருப்பேன். நான் வரட்டுமா" என்றவன் போய் விட்டான்.

❖❖❖

**அ**ன்று சங்கரின் கண் கட்டு அவிழ்க்கும் நாள். அருகில் இருந்த டாக்டரிடம் ஆனந்த் எங்கே என்று கேட்டான் சங்கர். அவரும் "மிஸ்டர் சங்கர்! ஆனந்த் இன்றைக்கு டியூட்டிக்கே வரல்ல. நீங்க கண் கட்டை அவிழ்க்கலாம்."

"நோ...டாக்டர்! என் நண்பன் வரட்டும். அவன் வந்த பிறகுதான் நான் கண்ணைத் திறப்பேன். ஆனந்தை தான் நான் முதலில் பார்ப்பேன்". என்றவனை இடைமறித்த டாக்டர், "அப்படியென்றால் உங்க வாழ்க்கை பூரா இப்படியேதான் இருக்க வேண்டும்."

"டாக்டர் நீங்க என்ன சொல்றீங்க?"

"முதலில் கட்டை அவிழ்க்கலாம்."

"இல்லை டாக்டர் என் நண்பன் வராமல் நான் எதுவும் செய்யமாட்டேன்" என்ற சங்கரை டாக்டர் பார்த்த பார்வையில் பரிதாபமிருந்தது.

"என்ன விளையாடுறீங்களா? உங்க நட்பும் அன்பும் உங்களுடனே இருக்கட்டும். எங்க கடமையை செய்ய விடுங்க" டாக்டரின் அதிகார குரல் சங்கரை பணியவைத்தது. பார்வை கிடைத்த சங்கரின் கண்கள் ஆனந்தை தேடின. நண்பனை காணாத ஆற்றாமை கண்ணீராய் வெடிக்க கைகளில் முகம் புதைத்து சிறு குழந்தை போல் அழுத சங்கர் டாக்டரின் அழைப்பில் நிமிர்ந்தான். டாக்டர் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

"மிஸ்டர் சங்கர்! இப்போதுதான் உங்களுக்கு ஆபரேஷன் நடந்தது. அதனால அதிகம் டென்ஷன் ஆகாம நான் சொல்றத பொறுமையாக கேளுங்க. சங்கர்! கடவுள் உங்கள் வாழ்க்கையில் ஒளியையும் இருளையும் ஒரே சமயத்தில் கொடுத்து இருக்கிறார். ஆமா சங்கர்! கண் பார்வை கிடைத்த உங்களுக்கு நண்பனை பார்க்க கொடுத்து வைக்கல்ல. உங்க நண்பர்–அதாவது டாக்டர் ஆனந்த். வீட்டில் இருந்து வரும்போது எதிர்பாராத விதமாக நடந்த விபத்தில் அவர் இறந்து விட்டார். ஆனந்தின் உடம்பு கூட முழுசாகக் கிடைக்கல்ல. என்னசெய்வது? நீங்க நல்ல நண்பனை இழந்திட்டீங்க. நாங்க திறமையான ஒரு டாக்டரை இழந்திட்டோம்." என்ற டாக்டரின் குரலை கேட்பதற்கு சங்கர் சுய நினைவில் இருக்கவில்லை. மயங்கிக் கிடந்த சங்கரை தூக்கிய டாக்டர் அதிர்ச்சியில் உறைந்து போனார்.

விபத்தில் பலியானதாக சொல்லப்பட்ட ஆனந்த், முகம் முழுக்க சிரிப்போடு அப்போது அங்கே வந்து கொண்டிருந்தான்.

காலடிச்சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்த டாக்டருக்கு இன்னொரு அதிர்ச்சியும் காத்திருந்தது.

டாக்டர் தடுமாறிப் போனார். "ஆனந்த் உங்களுக்கு?"

"ஒன்றும் ஆகல்ல டாக்டர்! என் நண்பனின் அன்பு எப்படி என்று அறிய "ஒரு சின்ன விளையாட்டு" என்று மேலும் சிரித்தவனை கவலையோடு நோக்கிய டாக்டர், "ஆனந்த் ஒரு நண்பனாக இருந்தும் சங்கரின் மனசை நீங்க புரிந்து கொள்ளவில்லையே." என்றார் குரல் கம்மியது.

"நீங்க என்ன சொல்றீங்க டாக்டர்?"

"லுக் ஆனந்த்! இனி உங்க நண்பனை அந்த ஆண்டவன் நினைத்தாலும் காப்பாற்ற முடியாது."

"டாக்டர்?!"

"யெஸ்! அதிர்ச்சி தாங்க முடியாமல் அவர் இறந்து இரண்டு வினாடிகள் ஆகிவிட்டது."

ஆனந்த் மூர்ச்சையற்று சரிய முன்னே நகர்ந்து அவனைத் தாங்கிக் கொண்டார் டாக்டர்.

# எதிர்பாராதது!

**வ**ந்து நின்ற பிறைவட் பஸ்ஸில் முண்டியடித்துக் கொண்டு ஏறி காலியாக கிடந்த சீட்டில் வசதியாக அமர்ந்து கொண்டேன். முன்னால் அமர்ந்திருந்த மனிதர் கவலையேயில்லாமல் 'திவயின'வை விரித்து வைத்துக்கொண்டு சந்திரிக்காவின் சிரித்த முகத்தை இரசித்துக் கொண்டிருக்க, எனக்கு என் அபிமான 'தினமுரசு' நினைவுக்கு வந்தது. பையைத் திறந்து அழகாக மடித்து வைத்திருந்த முரசை விரித்து அசத்தலான அட்டைப்படத்தை கண்களுக்குள் வாங்கிக் கொண்டு, கடைசி பக்கத்தை புரட்டுகிறேன். கண்களால் குறுக்கெழுத்து போட்டியை நிரப்பி, சிந்தியா கேள்வி பதிலில் நம்ம ஊர் ஆட்கள் இருக்கிறார்களாவென ஆராய்ச்சி நடத்தி, இலக்கிய நயத்தை வீட்டில் இனிமையாக வாசிக்கலாம் என்ற நினைப்போடு அடுத்த பக்கத்தினுள் நுழைந்து, என் அபிமான ரிஸ்கி ஷெரீப்பின் 'சிதையாத இதயத்துக்குள்' அமர்கிறேன்.

இராணுவ வீரனின் இதய போராட்டம் ஆரம்பத்திலேயே ஆழமாக சித்திரிக்கப்பட்டதாலோ என்னவோ உள்ளத்துக்குள் ஏதோவொரு நெருடல். இனம்புரியாத சோகம் அதே நேரத்தில் பின்னாலிருந்து என் பாதத்தை யாரோ உரசுவது போல் இருக்க, கால்களை முன்னால் இழுத்து வைத்துக்கொள்கிறேன். மீண்டும் அதே சேஷ்டை. கோபத்துடன் பின்னால் திரும்ப, எதுவும் அறியாத குழந்தையைப்போல் அந்த மன்மதன் கண்ணாடி வழியாக வெளியே இரசித்துக் கொண்டிருந்தான்.



'ச்சீ! சகோதரரோடு பிறவாத காட்டு மிராண்டிகள். செய்வதை செய்துபோட்டு எப்படி நடிக்கிறான். இடியட்!' மனதில் திட்டியபடி திரும்புகிறேன். சிலநிமிடங்களின் பின் மீண்டும் உரசல். கோபம் உச்சந்தலையில் ஏற, எழுந்த வேகத்தில் என் கரம் அவன் கன்னத்தை ஆழமாக பதம் பார்க்க, நிலைகுலைந்து போனான் அவன். பஸ்ஸினுள் இருந்த அனைவரும் வேடிக்கை பார்க்கத் தொடங்கிவிட்டனர். வெட்கம் பிடுங்கித்தின்றிருக்க வேண்டும், மௌனமாக தலையை குனிந்துகொள்ள, நான் மனத் திருப்தியுடன் அமர்ந்துகொள்கிறேன்.

பஸ்இராணுவ முகாமருகே நிறுத்த தற்செயலாக திரும்பி கண்ணாடி வழியே பார்த்த நான் திடுக்கிட்டேன். அவன் சென்று கொண்டிருந்தான். கால்களில் ஒன்றை இழந்து தடியிரண்டையும் ஊன்றியப்படி அந்த இளைஞன் முகாமை நோக்கி தடுமாறியபடி சென்று கொண்டிருந்தான். நிமிர்ந்து நான் எதிரேயிருந்தவர்களின் கோபக் கனலை தாங்கிக் கொள்ள முடியாது குனிந்துகொள்கிறேன்.

## இரத்தினபுரி–கோகிலா குமாரவேல்



படிப்பகம்

www.padippakam.com

# அவள் சொன்ன விளக்கம்



## இலக்கிய நயம்

### தருவது-ரசிகன்

இடுப்பொடிய உழைத்தால்தான் இல்லத்தில் உலை பொங்கும்.

வயல் உயர வாழ்வுயரும். கதிர் செழிக்க மனதுக்குள் மகிழ்வுயரும்.

உழைப்பிலே உள்ள சுகம் உவகையோடு உழைப்பவனுக்கு மட்டும்தானே தெரியும்.

தையும் பிறந்து விட்டது. பொங்க விட்டு பூரித்தாகிவிட்டது.

உழைப்புக்கு ஏது ஓய்வு. வளவன் மேனியில் வியர்வை முத்துக்கள்.

இல்லம் திரும்ப இனிய புன்னகை. அது ஒன்றே போதுமே பட்ட கஷ்டமெல்லாம் பஞ்சாய் பறந்துவிடும்.

"இன்று ஏன் தாமதம். வேலை அதிகமோ?"

"உழைப்புக்கு வரையறை இல்லையல்லவா?"

"ஒரு நாள் கூட ஓய்வு வேண்டாமா?"

"போதும் என்று ஓய்ந்துவிட்டால் நாளைய பொழுது நல்ல பொழுதாக இருக்குமா?"

"அதற்காக இப்படியா?"

"ஒன்றை இழந்தால்தானே இன்னொன்று கிடைக்கிறது. இரத்தம் சிந்தாமல் யுத்தத்தில் வெற்றியில்லை. வியர்வை சிந்தாமல் வயற்காட்டில் வளமும் இல்லை. உறக்கத்தை துறந்தால்தான் விழிப்பு. ஓய்வைத் துறந்தால்தான் உயர்வு."

"உடல் என்னாகும்?"

"இன்னும் சில நொடிகளில் உன் கைபட்டு பொன்னாகும்."

"வேறு வேலையே இல்லை உங்களுக்கு!"

"நீதானே சொன்னாய் ஓய்வு தேவை என்று!"

"அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?"

"பொங்கும் இன்ப வெள்ளத்தில் நீராடினால்தானே புத்தெழுச்சி!"

"வெள்ளம் எங்கே இருக்கிறது?"

"கையருகில், என் கண்ணெதிரில்!"

"இந்த வெள்ளம் பொங்காது!"

"அணையுடைத்தால் பொங்கும்!"

"அணையுடையாது!"

"அணைத்தால், இதழ் நனைத்தால், உள்ளே உயிர் துடிக்க தடை என்னும் அணையுடையும்!"

"பார்க்கலாம். பார்க்கலாம்!"

"சவாலா?"

"சங்கற்பம்!"

"என்னவென்று?"

"உடைவது இல்லையென்று!"

வளவன் அவள் அருகே அமர்ந்தான். கரும் மேகமாய் விரிந்த கூந்தலுக்குள் விரல்கள் செலுத்தி கோதிவிட்டான். நெற்றி வகிட்டில் முத்தமிட்டான்.

அவள் வேண்டுமென்றே அசைந்து கொடுக்காமல், தனக்குள் எந்த மாற்றமும் இல்லையென்பது போல அமர்ந்திருந்தாள்.

"காற்றின் கரம் பட்டால் கதிர் சிணுங்கும். என் கதிரே! நீ மட்டும் சிணுங்காமல், சில்லென்று அசையாமல் நட்டுவைத்த மரம் போல இருப்பதென்ன?"

"கட்டிலறைக்கு வந்தபின்பும் கதிரும், கழனியும், வயலும், வரப்பும்தான் உம் நினைப்பில். கதிரோடு போய் தூங்கும்."

"பொறாமைதானே!"

"போட்டி! நான் வேண்டுமா? நல் வயல் வேண்டுமா, அங்கு செழித்து நிற்கும் நெற்கதிர்கள் வேண்டுமா என்று?"

"வயலும் உனக்குத்தான். என் வாழ்வும் உனக்குத்தான். குயிலே உன் கோபம் வெறும் பிணக்குத்தான்!"

மெல்ல முதுகு வருடினான். வருடிய கரம் ஊர்ந்து இடை தொட்டது. உதடு அவளின் கன்னம் தொட்டு நகர்ந்து காது மடலில் ஈரம் உணர்த்தியது.

அணை உடையத் தொடங்கியதை அவளும் உணர்ந்தாள். எனினும் பிடிவாதம் விடக்கூடாதே என்று மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டதுபோல இருந்தாள்.

காதுமடலில் இருந்து நழுவி தோளில் முகம் புதைக்க செல்லும் வழியில் கழுத்தில் உதடுகளால் உழுதான்.

மூச்சுக்காற்று தீயாய் சுட்டது. கழுத்து நரம்பில் இரத்தம் வெப்பமானது.

வீணையின் தந்திகள் விபரமறிந்த விரல்களால் மீட்டப்படும் போது ராகம் எழாமல் இருக்குமா?

காலம் அறிந்து பயிர் செய்பவன், இங்கே மதன ஜாலம் அறிந்து விதை தூவினான்.

போட்டது முளைத்தது. அவள் உறுதி தளர்ந்து, அவன் தோளில் தலை சரிக்க, விதைத்தவனுக்கு விளைந்ததையெல்லாம் அறுவடை செய்யும் ஆர்வம் வந்தது.

என்றாலும் தனது வெற்றியை பிரகடனம் செய்யும் எண்ணமும் உதித்தது.

"அணை உடைந்துவிட்டது. அல்ல, அல்ல உடைக்கப்பட்டுவிட்டது" என்றான்.

அவள் சீறுவாள் என்று நினைத்தான். அவளோ அவன் மார்பில் விரல்களால் கோலம் போட்டபடி, இதழ்களில் பூ உதிர்த்தாள்.

"பரிசு தரவேண்டுமா?"

"மழை கண்ட வயலாவேன், தா, உடனே தா!" என்றான்.

பின் கழுத்ததை தன் கரங்களால் கட்டி வளைத்து, அவன் முகத்தை தன்னை நோக்கி இழுத்து இதழ்களால் அவன் மேலுதட்டை இனிய சிறையிலிட்டாள்.

இதழ் பிரித்து நா சுவைத்து, சித்தம் தடுமாற மனதில் பா இசைத்து, சிறை தொடரட்டும் என்று நினைத்திருக்க, இதழ் விடைபெற்றது.

"பாங்கான பரிசு. வெல்லப் பாகான சுவை. புது நெல்லில் பொங்கிய சர்க்கரைப் பொங்கலின் இதம். செழித்த கரும்பின் அடிப்பாகம் தோற்கும் பிடிப்பான இனிப்பு."

"மகிழ்ச்சிதானே?"

"முன்னுரை பிரமாதம். முடிவுரை வேண்டுமே. பாதியிலே கதை முடிந்தால், கள்ளுக்குள் விழுந்த வண்டு என்னானது என்று தெரியாமல் போகுமே."

"கள்ளுக்குள் விழுந்த வண்டு என்னாகும் என்றுதான் எல்லோருக்கும் தெரியுமே!"

"எனக்கு மட்டும் தெரியாதே!"

"நேற்றும் இதே கள். நேற்றும் இதே வண்டு. இன்றென்ன புதிதோ!"

"கலயம்தான் ஒன்று. தினமும் ஊறும் கள் புதிது. அதனால் அனுதினமும் புது அனுபவம். தினமும் புதிதாய் பிறக்கும் சுகவைபவம்."

அவள் இதழில் குறும்புப் பூ மலர்ந்தது. அதனை அந்த வண்டு உடனே மொய்த்தது.

மொய்த்து முடித்துவிட்டு மோகக் கடலில் மூழ்குவதற்கு முன்னர் ஒரு சந்தேகம் வந்தது கேட்டான்:

"கடலின் ஆழத்தையும் ஒரு வேளை கண்டறிந்து விடலாம். உன் அன்பின் ஆழத்தை அளந்தறிய முடியாது என்பதை நான் அறிவேன். அப்படியிருந்தும் அடிக்கடி பள்ளியறையில் என் மீது முட்களை வீசுவது ஏன்? சொற்களை கற்களாய் எறிவதும் ஏன்?"

"காரணத்தோடுதான்!"

"என்ன காரணம்?"

"சொன்னால் சுவை போய் விடும்!"



"சொல்லாவிட்டால் என் உயிர் போய் விடும்!"

"இதற்கேன் இந்த பெரிய வார்த்தை?"

"அப்படியானால் சொல்!"

"ஊடுதல்தான் கூடிக்கலத்தலுக்கு மோகம் ஊட்டும் முன்னுரை!"

"பாழாய்ப்போன ஊடல்!"

"ஊடலை வசையாதீர்கள். ஊடலுக்குள் உதவும் குணம் இருக்கிறது!"

"அப்படியா? அது என்னவாம்?"


"அதை திருவள்ளுவரே சொல்லுகிறார். **ஊடல் முடிந்தபின் கூடித் தழுவுதல் ஊடலுக்கு இன்பமாகிவிடுமாம்! பார்த்தீர்களா ஊடலுக்குள் உள்ள அரும் குணத்தை?"**

"பார்த்தேன். பார்க்கப் போகிறேன். ஊடலை நாமும் இன்பமாக்கப் போகிறோம்."

**"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்**
**கூடி முயங்கப் பெறின்."**

குறள்-1330, அதிகாரம்-133

## குறுக்கெழுத்துப் போட்டி இல-136



### இடமிருந்து வலம்

01. மண்ணிற் கிடைத்தாலும் மங்கையரின் மகிழ்ச்சிப் புன்னகைக்கு மெருகூட்டுவது.
02. இதனை உபயோகித்து உருவாகும் உணவுப் பண்டங்கள் ஆயுளை அதிகரிக்குமாம்.
04. சிறிதாகத் தானிருக்கும் ஆனால் காரம் குறையாது.
05. இங்கும் இப்பொழுது நாகரிகம் புகுந்து இயல்பினை மாற்றி விட்டது.
08. பல தசாப்தங்களாக நம் நாட்டில் தேடியும் இதனைக் கண்டு பிடிக்க முடியவில்லை.
09. கால நிலைகள் சீராக இருந்தால் இதுவும் சிறப்படையும்.
10. கடல் இவனுக்குப் பூந்தோட்டம்.

### மேலிருந்து கீழ்

01. புலவர்களை மகிழ்விக்க பண்டைய மன்னர்கள் வழங்கும் பரிசில்.
02. இதன் பிடி தளராது என்பர்.
03. விமானத்தின் அமைப்பை உருவாக்க உதவியதாம்.
04. சந்நியாசிகளின் உடமைகளில் ஒன்று.
06. மனிதர்களிடத்தில் இக்குணம் படைத்தவர்களும் உள்ளனர்.
07. சாதாரணமானதொன்றுதான்; ஆனால் கண்ணபரமாத்மாவையே மகிழ்வித்ததாம்.
08. கண்கண்ட தெய்வம்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 27.01.1996இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-136
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-134ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 தே | 2 ச | ம் | ■ | 3 தீ | 4 ப | ம் |
| ■ | 5 ம | ழ | லை | ■ | ரு | ■ |
| 6 பு | ர | ளி | ■ | 7 தா | வ | ணி |
| ■ | ச | ■ | 8 வீ | ர | ம் | ■ |
| 9 ந | ம் | 10 பி | க் | கை | ■ | 11 க |
| டி | ■ | ச | க | ■ | ■ | ர |
| கை | ■ | 12 கு | ம் | மா | ள | ம் |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 134இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. சி. சுரேஷ்குமார், கொள்ளுப்பிட்டி.
2. எச். பாத்திமா றிஸ்னியா, திக்வெல்ல.
3. எஸ். சகுந்தலாதேவி, அட்டன்.
4. எம். தில்சாத் மிப்றி, உக்குவளை.
5. கே. அருணன், வவுனியா.
6. திருமதி. சொர்ணா கனகரட்ணம், மொரட்டுவ.
7. பி.சர்மிலா, கல்முனை.
8. கே. தவநாதன், நுவெரெலியா.
9. செல்வி. தங்களா வாமதேவன், மட்டக்களப்பு.
10. எம். யசீர், புத்தளம்.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# சிந்தியா பதில்கள்

**★ இலங்கையில் சமாதானம் எப்போது வரும்?**

எஸ். தியாகன், வாழைச்சேனை.

*கடவுள் எப்போது வருவார் என்பதற்கு யார்தான் பதில் சொல்ல முடியும்!*

-0-

**★ தாஜ்மஹால் எதற்காக கட்டப்பட்டது?**

எம்.எஸ். பஸீலா, புல்மோட்டை.

*ஷாஜகான் என்றொரு மன்னன் இருந்தானாம். அவன் இதயத்தில் காதல் நிரம்பி வழிந்ததாம். அவன் கஜானாவில் பணமும் கொட்டிக் கிடந்ததாம். அதனால் தாஜ்மஹால் கட்டமுடிந்ததாம்.*

-0-

**★ கடமையைச் செய்யத் தவறுகிறவர்கள் பற்றி ஒரு சில வார்த்தைகள்?**

ஆர். சந்திரமோகன், திருமலை.

*முட்டையிட்டால்தான் கோழிக்கு மரியாதை. கூவினால்தான் சேவலுக்கு மரியாதை. கடமையைச் செய்தால்தான் மனிதனுக்கு மரியாதை.*

*(தத்துவம் எப்படி?!)*

**★ சமீபத்தில் ரசித்த புதுக்கவிதை ஒன்று?**

வி.பாபு, கொழும்பு-5.

*"லிங்கம் எடுப்பார் சுவாமி-*
*தொடர்ந்து*
*வாந்தி எடுப்பர் பெண்கள்!" (எழுதியவர் பெயர் மறந்தாச்...)*

-0-

**★ சிந்தியா! இந்த வருடத்திற்குள்ளாக அமைதி வந்து விடுமல்லவா?**

நஜிமுன்னிஸா, திருக்கோணமலை.

*உமது கேள்வி சிறந்த ஜோக்காக ஏற்கப்படுகிறது.*

-0-

**★ நாவடக்கம் பேணுவதற்கு என்ன செய்ய வேண்டும்?**

மா. பூரணி, மட்டக்களப்பு.

*(வள வள நண்பிகள் அதிகமோ பூரணி?) "வழி தவறிச் சென்றுவிட்டால் திரும்பி வரலாம். வாய் தவறிப் பேசிவிட்டால் திரும்பப் பெறமுடியாது" என்று யாரோ ஒரு மேதை சொல்லியிருக்கிறார். அதை மனதில் வைத்திருங்கள். மற்றவர்களுக்கும் சொல்லுங்கள்.*

-0-

**★ பெண்களை இறைவன் தங்கமாக படைத்திருந்தால்?**

தாஹா பயறூஸ், அக்கரைப்பற்று-06

*எடை கூடுவதற்கேற்ப சீதனச் சந்தையில் மரியாதையும் ஏறியிருக்கும்.*

-0-

**★ புலிகள் இயக்கம் அரசாங்கத்திற்கு எதிரி. அரசாங்கத்திற்கு புலிகள் எதிரி. இரண்டு தரப்புக்கும் யார் எதிரி?**

சேகர் பங்கயற்செல்வம், இரட்டைப்பாதை.

*யுத்தம்தான் எதிரி. இரு தரப்பையும் அதுதானே ஆட்டிப் படைக்கிறது!*

-0-

**★ இந்தியாவில் ஆயுதம் போட்ட மர்ம விமானம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

எஸ்.சந்திரசேகர், வவுனியா.

*விமானம் மட்டுமா? சமீபத்தில் ஒரு மர்மக் கப்பலும் இந்திய கேரளக்கடலில் நுழைந்திருக்கிறது. இந்தியாவை சுற்றி சதி வலை பின்னப்படுகிறது. இந்தியாவுக்கு தொல்லை கொடுக்க வலிமையான கை ஒன்று வித்தை காட்டுகிறது.*

-0-

**★ மாவின் விலை இன்னும் கூடுமா?**

ஏ.எஸ்.எம். நவ்சாத், அக்குறணை.

*யுத்தத்தின் பசி அதிகரிப்பதைப் பொறுத்து தீர்மானிக்கப்படும். எப்படிப்பார்த்தாலும் விலை அதிகரிப்பு விஷயத்தில் பின்வாங்கும் பேச்சுக்கே இடமில்லை. எப்போதுமே முன்னேறிப் பாய்ச்சல்தான்.*

-0-

**★ டியர் சிந்தியா! விசுவாசம், நம்பிக்கை, அன்பு இவற்றில் எது சிறந்தது?**

சு. அபிமன், உவர்மலை.

*முதலிரண்டும் இல்லாமல் மூன்றாவது இல்லையல்லவா?*

-0-

**★ டியர் சிந்தியா! சிறந்த நடிகனாக வர ஆசைப்படுகிறேன். அறிவுரை ஒன்று சொல்லுங்கள்?**

க. விஜயகுமார், மட்டக்களப்பு.

*அரசியல்வாதியாகிவிடுங்களேன்!*

-0-

**★ நம்நாட்டு தொலைக்காட்சிகளை நினைத்தால் சிரிப்பாக இருக்கிறது. "நாவந்துறையில் சிலரின் நடமாட்டத்தை அவதானித்த படையினர் தாக்குதலை மேற்கொண்டனர். பின்னர் அவ்விடத்தில் தேர்தல் நடத்தப்பட்டது?" இப்படி செய்தி வாசிக்கிறார்களே?**

வி. பிரதீப், எழுதுமட்டுவாள்.

*பந்தம் பிடித்து வருபவர்களால் பந்திகளைப் பார்த்து வாக்கியங்களை விளங்கி வாசிக்க தெரியவில்லை. கடந்த திங்கட்கிழமை (15.1.96) ஒரு பெண் அறிவிப்பாளர் ரூபவாகினியில் செய்தி வாசித்தார். மங்கள சமரவீராவின் அறிக்கையை அமங்களமாக்கிக் கொண்டிருந்தார்.*



**★ சந்தேகக் கண்கொண்டு பார்ப்பவர்களை எப்படித் திருத்துவது?**

என்.பாத்திமாசியானா, ஹொரொவ்பொதான.

*புறக்கண்ணில் கோளாறு என்றால் டாக்டர் மூலம் திருத்தலாம். அகக் கண்ணில் கோளாறு என்றால் அவர்களோடு பழகுவதைத் தவிர்க்கலாம்.*

-0-

**★ டியர் சிந்தியா! தொடர்ந்து சர்ச்சைகளில் சிக்கிவரும் முரளிதரனின் இன்றைய நிலை பற்றி?**

ஏ.எம். தாரிக், நுரைச்சோலை.

*காய்க்கும் மரத்திற்குத்தானே கல்லெறி படும். 'விக்கெட்டை சாய்க்கும் வீரருக்குத் தானே சோதனைகள் வரும்' என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டிருப்பார்.*

-0-

**★ சிந்தியா! இரவில் நித்திரை வராமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?**

எஸ். சசிகுமார், மட்/புன்னைச்சோலை.

*சுலபம்! காதலில் தோற்க வேண்டும்!*

-0-

**★ வாழ்க்கையில் மிக உயர்ந்த பதவி எது?**

எம்.எம். அஜர்தீன், நிக்கவெவ.

*கருவறையில் தரப்படும் அந்த பத்து மாதப் பதவி.*

-0-

**★ என்னை உயிருக்குயிராக நேசித்த என் காதலி இப்போது வெறுக்கிறாள். காரணம் என்னவாக இருக்கும்?**

க. மோகனதாஸ், அக்கரைப்பற்று-07.

*நீராகவே ஏன் இருக்கக்கூடாது? யோசித்துப்பாரும்.*

-0-

**★ தற்போதைய அரசின் லாப-நஷ்டம் என்ன?**

எஸ். சுபாஷன், கல்முனை-01

*இரண்டுமே யுத்தம்தான்.*



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம்

## அங்கம் 16

இன்பமும் துன்பமும், நன்மையும் தீமையும், தர்மமும் அதர்மமும் மாறி மாறி சுழன்று வருவது உலகியல்பு. இராமர் காதையிலும் உலாவரும் கதாபாத்திரங்களும் இத்தகைய இரு மாறுபட்ட அனுபவங்களை யும் சந்திக்கவே செய்கின்றனர்.

வெயிலின் கடுமையை அனுபவிக்கும் போது தான் நிழலின் தன்மையை உணர முடிகின்றது. இருளின் கொடுமையில் சிக்கித் திணறும் போதுதான் ஒளியின் சிறப்பினை உணர்கிறோம். அதே போல் கசப்பின்தன் மையைக் கண்டறிந்தால்தான் இனிமையின் சுவையை அறியக்கூடியதாகவிருக்கிறது.

இராமாயணத்தில் பாலகாண்டம் இன் சுவை நிரம்பியது. இராம-இலக்குமண-

# மந்தரையின் போதனையால்

பரத-சத்துருக்கனின் இளமைக்காலம் எத்தகைய இனிமையான காலமாக இருந்தது என்பதைக் கண்டோம். அவர்கள் குழந்தைகளாகத் தவழ்ந்து அந்தப்புரத்துக்கும் அரண்மனைக்கும் பெருமகிழ்ச்சியையூட்டினார்கள். அவர்களுடைய வளர்ச்சி கண்டு அரண்மனையிலுள்ளவர்கள் மட்டுமல்ல நாடே மகிழ்ச்சிக்கடலாடியது.

உரிய காலத்தில் அரசகுமாரர்கள் திருமணம் புரிந்துகொண்டு இல்லற வாழ்க்கையின் இனிமை துய்த்தனர். அது



வரை துன்பியல் அனுபவங்கள் தலை காட்டவில்லை. சாதாரண வாழ்விலும் வாலிபப்பருவம் வரை எத்தகைய துன்பமும் எவருக்கும் ஒரு பொருட்டாகத் தெரிவ தில்லை. குடும்பப்பாரம் சுமக்க ஆரம்பித்ததும் தான் வாழ்க்கைப் பளுவின் அழுத்தம் தெரிய ஆரம்பிக்கிறது.

இதேபோல்தான் இராமச்சந்திர மூர்த்தியின் இளமைப்பருவம் தெளிந்த நீரோடை போன்றிருந்தது. மனதுக்கேற்ற மங்கை நல்லாளும் இல்லத்தரசியாக வாய்க்கப் பெற்றாள்.

### கோலாகல ஏற்பாடுகள்

அரியணையில் ஏறுவதற்கான கால கட்டமும் அறிவிக்கப்பட்டு அதற்கான ஆயத்தங்களிலும் இராமர் ஈடுபடலானார். இராமருக்குப் பட்டாபிஷேகம் நடைபெறப் போகிறது என்ற செய்தி பரவியதும் அயோத்திமாநகர மக்கள் ஆனந்தக்களி நடம் புரிந்தனர். பட்டமளிப்பு விழாவுக்கு சில நாளிகைகள் மட்டிலுமே இடையிலுள்ளமையினால் அவசர அவசரமாகநகர வீதிகளனைத்தும் அலங்கரிக்கப்பட்டன. ஆலயங்களில் சிறப்பு பிரார்த்தனைகள் இடம்பெற்றன. அயோத்திமாநகரை அண்மித்திருந்த கிராமப்புறங்களுக்கும் செய்தி பரவியது. அங்கெல்லாமிருந்து மக்கள் ஆயிரக்கணக்கில் நகரத்துக்கு வரத் தொடங்கினர்.

வந்த விருந்தாளிகளுக்கு வசதி செய்து தருவதிலும் வரவிருக்கும் விருந்தாளிகளுக்குரிய ஏற்பாடுகளைச் செய்வதிலும் நகர மக்கள் ஈடுபட ஆரம்பித்தமையினால் நகர வீதிகளெங்கும் மக்கள் கூட்டம் அதிகரித்துக் காணப்பட்டன. அரண்மனையிலும் அந்தப் புரங்களிலும் கூட ஆரவாரங்கள் அதிகரித்தன.

கோசலையின் இல்லத்திலிருந்து இராமன் தன் மனைவி சீதையையும் அழைத்துக்கொண்டு தனது அரண்மனைக்குச் சென்றான். அப்போது வசிட்ட மா முனிவரும் அங்கு வந்து சேர்ந்தார். முனிவரின் இரதத்திலிருந்து கைலாகு கொடுத்து முனிவரை உள்ளே அழைத்துச் சென்ற இராமன் அவருக்கு ஆசனம் அளித்தான். கணவனும் மனைவியுமாக முனிவருக்குப் பாத பூஜை செய்தனர். அவரும் அன்று எவ்வாறு நோன்பு நோற்க வேண்டும் என்ற விளக்கங்களைக் கூறிவிட்டுப் புறப்பட ஆயத்தமானார்.

முனிவருடன் வாயில்வரை சென்ற இராமனின் வலது தோளை தனது வலது கரத்தால் இறுகப் பற்றிய முனிவர், "இராமா! உனக்கு நான் சொல்ல வேண்டியது எதுவுமில்லை. நாடகமான இந்த உலகத்திலே நாளை நடப்பதை யாரறிவார்?" என்ற பீடிகையுடன் ஒரு பெருமூச்செறிந்தார். அதற்கு இராமன் புன்முறுவல் பூத்தவராக, "எது நடந்தாலும் இன்முகத்தோடு எதையும் ஏற்கச் சித்தமாக இருக்கிறேன் குருவே!" என்றார். இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்தவர்களாக விடைபெற்றனர்.

### கூனியின் கூற்றால் குலைந்த அமைதி

இதே காலகட்டத்தில்தான் இராம காதையில் துன்பியல் நுழைவதற்கான திரையும் விலகியது.

தசரதமாமன்னரின் முன்றாவது மனைவியான கைகேயியின் அரண்மனை. கைகேயி தசரதரை மணம் முடித்து கேகய நாட்டிலிருந்து புறப்பட்டு வரும்போது அவளுடன் அயோத்தி வந்து சேர்ந்த- தாய் வீட்டுச் சொத்துச் சீர்வரிசைகளுடன் ஒட்டிக் கொண்டு வந்தாள்- நடுத்தர வயதுடைய மந்தரை என்ற மாது. இராமாயணத்தில் திருப்பு முனையாக அமைந்தவளும் அவளே!

கைகேயியின் தாய்க்கு ஒன்று விட்ட சகோதரியான மந்தரையைத் தாய்க்குத் தாய் போலிருந்து மகளைக் காக்கும்படி

## இராஜகுமாரன்

கைகேயியின் தாயே அனுப்பிவைத்தாள். வயதில் இளையவளாக இருந்தமையினால் வேண்டிய நேரம் வேண்டிய புத்திமதிகளைக் கூறி வழி நடத்துவதற்காகவும் மந்தரை அனுப்பப்பட்டாள், உடல் சற்றுக் கூனி இருந்தமையினால் மந்தரையை கூனி என்றே அழைப்பார்கள்.

கைகேயி மாளிகையின் உப்பரிகையிலே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கூனி, நகரம் புத்துயிர் பெற்றுப் புதுப்பொலிவுடன் விளங்குவதைக் கண்டாள். ஆடல் பாடல்கள், ஆரவாரங்கள் எங்கும் நிறைந்திருப்பதைக் கண்டாள். ஆலயங்களில் சிறப்புப் பூசைகள் நடைபெறுவதற்கான, மணி சேகண்டி, தாரை- தப்பட்டை, குழல் போன்றவற்றின் ஓசைகளைக் கேட்டாள். உப்பரிகையிலிருந்த வண்ணமே சக்கரவர்த்தியின் மூத்த மனைவி கோசலையின் அந்தப்புரவாசலையும் நோக்கினாள். அங்கு நீண்ட வரிசையில் வேதியர்களும் அந்தணர்களும் சென்று கொண்டிருப்பதையும் மற்றுமொருவரிசையில் பரிசுப் பொருட்களுடன் பலர் அந்தப் புரத்திலிருந்து வெளியேறுவதையும் கண்ணுற்றாள். அவளுக்கு எதுவுமே புரியவில்லை. அப்பக்கமாக புதுப்பட்டாடை உடுத்தி அணிகலன்களும் பூட்டி அகமும் புறமும் மலரச் சென்றுகொண்டிருந்த சேடிப் பெண்ணொருத்தியை அழைத்து காரணம் கேட்டாள்.

# மதியிழந்த மாதரசி

"அயோத்தி மாநகரமே அறிந்து குதூகலிக்கும் இச் செய்தி உனக்குத் தெரியாதோ மந்தரை? இராமச்சந்திர மூர்த்திக்கு நாளைக் காலை இளவரசுப்பட்டம் சூட்டப்படவிருக்கிறதே!" என்றாள் அந்தத் தாதிப் பெண். இதைக் கேட்ட மந்தரை தணலில் பட்ட புழு போல் துடித்தாள், வில்லை விட்டுக்கிளம்பும் பாணம் போல் ஒரே தாவில் கைகேயி இருந்த இடம் போய்ச் சேர்ந்தாள். "தசரதச் சக்கரவர்த்தியின் வைப்பாட்டிப் பெண்ணே! என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

மன்னரின் மனதில் வீற்றிருந்து ஆட்சி செலுத்தும் தன்னை வைப்பாட்டிச்சி என்று மந்தரை அழைத்ததைப் பொறுக்க மாட்டாத கைகேயி, "என்ன கூனி! உன் நாக்கு அளவுக்கு அதிகமாக நீண்டு விட்டது போலத் தெரிகிறதே?" என்று சினத்துடன் சீறினாள்.

"ஆமாமா! பட்டத்து மகாராணி அல்லவா? கோபம் பொத்துக் கொண்டு தானே வரும்! அசட்டுப் பெண்ணே! என்ன நடந்திருக்கிறது என்று உனக்குத் தெரியுமா? உன் மகன் பரதனை உன் கணவர் அவசர அவசரமாக ஏன் ஊருக்கு அனுப்பி வைத்தார் என்று உனக்குத் தெரியுமா? அல்லது இந்த அரண்மனையில் என்னதான் நடக்கிறது என்பதையாவது தெரிந்து வைத்திருக்கிறாயா? உன் சக்களத்தி கோசலையின் மகன் இராமனுக்கு நாளை உதயத்தின் போது இளவரசுப்பட்டம் சூட்டப் போகிறாராம் உன் அன்புக் கணவர்."

இராமருக்குப் பட்டாபிஷேகம் என்ற வார்த்தை காதில் விழுந்ததும் கைகேயி சீறிப்பாய்வாள் என்று மந்தரை எதிர் பார்த்தாள். ஆனால் செய்தி கேட்டதும் கைகேயி மகிழ்ச்சியில் முகம் மலர்ந்தாள். தன்னை தசரதரின் வைப்பாட்டி என்று மந்தரை குறிப்பிட்டபோது அவளுடைய முகத்தில் காணப்பட்ட கோப உணர்ச்சிகள் குதூகலமாகின. "என்ன சொன்னாய் மந்தரை? என் மகன் இராமனுக்கா பட்டாபிஷேகம்? இந்த மகிழ்வூட்டும் செய்தியைக் கூறிய உனக்கு இதோ..." என்று தனது கழுத்தை அணி செய்த முத்து மாலையைக் கழற்றி எடுத்து வந்து மந்தரையின் கழுத்தில் சூடினாள்.

### தசரதரளித்த வாக்குறுதி

தான் எதிர்பார்த்ததற்கு மாறாக கைகேயி மகிழ்ச்சியில் குதித்ததைக் கண்ட கூனிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. "உனக்கு அறிவு இருக்காடி கைகேயி? உன்னை ஒரு மாபெரும் தேசத்தரசனின் பட்டமகிஷியாக்கி உன் வயிற்றிலுதிக்கும் குழந்தையே பல நாடுகளையும் ஒரே குடைக்கீழ் கட்டி ஆளும் தகுதி பெற வேண்டும் என்று உன் தாயும் நானும் கனவு கண்டோமே! அதேபோல் ஆட்சிக்கொரு பிள்ளையை நீயே பெற்றுக் கொடுப்பாய்; அப்பிள்ளைக்கே அரியணை ஏறும் உரிமை பெற வேண்டும் என்று உன் தந்தை-உன்னை மூன்றாம் தாரமாக மணம் முடிக்க வந்த தசரதரிடம் சத்தியம் வாங்கினாரே! இதெல்லாம் உன் நினைவில் இல்லையா? உன் தந்தைக்குக் கொடுத்த வாக்குறுதிகளை தூர ஒதுக்கி விட்டு உன் கணவன் உன் சக்களத்தி மகனுக்கு நாளை பட்டாபிஷேகம் நடத்தப் போகிறாராமே!" இவ்வாறு கூறி ஒப்பாரி வைத்துப் புலம்பலானாள் மந்தரை. கைகேயி கொடுத்த முத்து மாலையையும் கழற்றி கைகேயியின் காலடியில் வீசி எறிந்தாள்.

மந்தரையின் புலம்பல் அந்த மாலை வேளையில் கைகேயிக்கு அபசகுனமாகப் பட்டது. "மந்தரை இராமன் சக்கரவர்த்தியின் மூத்த மகன். அரசாளும் தகுதியும் அவனுக்குண்டு. அவன் இளவரசுப்பட்டம் சூட்டிக் கொள்வதால் எல்லாருக்கும் நன்மைதானே ஏற்படும்?" என்றாள் கைகேயி.

"எதுவுமே அறியாத சின்னக் குழந்தை போல் பிதற்றுகிறாயே! உன் தந்தைக்கு உன் கணவர் செய்து கொடுத்த சத்தியத்தைப் பற்றி இராமர் தெரிந்திருப்பார். பரதன் இங்கிருந்தால் தன்பாட்டனாருக்குக் கொடுத்த வாக்குக்கொப்ப தனக்கே இளவரசுப்பட்டம் சூட்டவேண்டும் என்று உரிமைக்குரல் எழுப்பக்கூடும் என்பதனால்தான், உன் மகன் பரதனை அவசரமாக ஊருக்கு அனுப்பியிருக்கிறார். அதுமட்டுமல்லாமல் எவருக்கும் அழைப்புகளையும் அனுப்பிவைக்காமல் உடனடியாக பட்டமளிப்புக்கும் ஏற்பாடு செய்திருக்கிறார். உண்மையை உணர்ந்த இராமன் பரதனைத் தன் எதிரியாகவே கருதுவான். எப்போதாவது தனது பதவியைப் பறிக்கச் சூழ்ச்சி செய்யக்கூடும் என்று கருதி பரதனை கொலை செய்யவும் திட்டம் தீட்டி விடுவான்! இராமன் பதவிக்கு வந்தால், கோசலை- மன்னனின்- தாயார் என்ற அந்தஸ்தினைப் பெறுவாள். அவ்வாறானால் நீ அடிமைதானே! தசரத மன்னரோ வயதாகி வாடி விட்டார். இன்னும் சிறிது காலத்தில் அவரும்...." இவ்வாறு மந்தரை கூறிக் கொண்டிருக்கும்போது கைகேயி ஓடி வந்து அவளுடைய வாயைப் பொத்திக் கொண்டாள்.

"மந்தரை! பொழுது விடிந்தால் இராமனுக்கு பட்டாபிஷேகம் நடக்கப் போகிறது. மகன் பரதனும் இங்கில்லை. நான் என்னதான் செய்ய முடியும்? நாளையப் பட்டம் சூட்டு விழாவைத் தடுக்க முடியுமா? இராமன் அரசனானால் என்மகன் பரதனின் உயிருக்கு ஆபத்தில்லாமல் காப்பாற்ற முடியுமா? என்னால்- இந்த வேளையில் என்னதான் செய்ய முடியும்?" இவ்வாறு கைகேயி புலம்பத் தொடங்கினாள். தருணம் பார்த்து அந்த அபலைப் பெண்ணின் உள்ளத்தில் நஞ்சைப் பக்குவமாகக் கலக்கிவிட்டாள் கூனி.

இத்தகைய ஒரே செயலினால் தான் மந்தரை! இராமாயணம் தெரிந்த ஒவ்வொருவராலும் வெறுக்கப்படுகிறாள். சாதாரணமாக சில குடும்பங்களில் கலகம் விளைவிக்கும் கைங்கர்யத்தைப் புரியும் எந்தப் பெண்ணையும் 'கூனி' என்று கூறி இராமாயண கூனியை இன்றும் நினைவு கூருகிறார்கள்.

### ஒரே கல்லில் இரு கனிகள்



தான் விரித்த வலையில் கைகேயி விழுந்துவிட்டாள் என்பதை உணர்ந்த மந்தரை மேலும் அடிக்குமேல் அடி கொடுத்து அம்மியை நகர்த்துவதில் தாமதமில்லாமல் இறங்கிவிட்டாள்.

"பெண் நினைத்தால் எதையும் சாதித்து விடலாம் என்பதை மறவாதே! நீ வீசப் போகும் கல்லில் இருகனிகள் விழ வேண்டும். இராமனுக்குப் பட்டம் சூட்டுவதை உடன் நிறுத்த வேண்டும். உடனடியாக பரதனை வரவழைத்து, அயோத்தியின் அரியணை ஏற அருகதை உடையவன் அவனே என்பதை நிரூபிக்க வேண்டும், இது நிறைவேறுவதானால் இராமன் அயோத்தியில் இருக்கலாகாது. அவன் உடனடியாக கானகம் ஏக வேண்டும். பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்து பின்னர் வேண்டுமானால் திரும்பட்டும். அப்போது தான் அயோத்தி மக்கள் இராமன் மீது வைத்துள்ள நல்லெண்ணம் மறைவதுடன் அவனையும் நாட்டு மக்கள் மறந்துபோய் விடுவார்கள்."

இவ்வாறு ஒரு குட்டிப்பிரசங்கமே செய்தாள் மந்தரை. அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த கைகேயி சொன்னாள்: "மந்தரை உன் வார்த்தைகள் கேட்பதற்குச் சுவையாகத் தான் உள்ளன; ஆனால் இந்தக்காரியங்களை எவ்வாறு முடிப்பது? அதற்கும் வழியிருந்தால் சொல் பார்க்கலாம்."

"கைகேயி! யானைக்குத் தன் பலம் தெரியாது. அதுபோல் உன்னிடமுள்ள வலிமையினை நீ உணரவில்லை. மன்னர் உன்னிடம் அளவு கடந்த மோகம் கொண்டவரல்லவா? தன் உயிரின் மேலாக உன்னைக் கருதுகிறார். கடலுள் மூழ்கு என்று சொன்னாலும் தீயில் பாய் என்று சொன்னாலும் அவ்வாறே உன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு விடுவார். கோசலையிடமும் சுமத்திரையிடமும் எப்போதாவது ஒரு நாள் அல்லது இரு நாட்கள் மட்டும் போகும் மன்னர் உன்னிடம் ஒவ்வொரு நாள் இரவும் வருகிறாரே! ஏன்? உன் மீது அவருக்கு அளவு கடந்த காதல்! உன்னுடைய விருப்பத்தை நிறைவேற்ற அவர் தயங்கவே மாட்டார். இன்றும் அவர் உன்னிடம் வருவார். பக்குவமாக உன் கோரிக்கையை எடுத்து வை." இவ்வாறு கூனி சொன்னாள்.

இருப்பினும் இராமன் மீது தசரதமாமன்னர் வைத்திருக்கும் பாசத்தினை நன்குணர்ந்த கைகேயி, "மந்தரை! இராமனைத் தன் உயிரெனக் கருதும் மன்னர், இராமனைப் பிரிய மனம் ஒப்பமாட்டாரே! அது மட்டுமல்லாமல், பட்டம் சூட்டு விழாவுக்கு இன்னும் சில நாழிகைகளே உள்ளன. ஆயத்தங்கள் துரிதகதியில் நடைபெறுகின்றன. இந்நிலையில் என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு எவ்வாறு ஒப்புதலளிப்பார்?"

### மறுக்க முடியாத வரம்

மந்தரையின் மூளை பலமாக வேலை செய்ய ஆரம்பித்தது. கடுமையாக யோசித்து விட்டுத் துணிந்து சொன்னாள்: "கைகேயி! உன் மனதில் பற்றுக்கும் பச்சாதாபத்துக்கும் பாசத்துக்கும் இடம் கொடுத்தாயானால் உன் பரதனை உயிருடன் காணமாட்டாய். தன் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக- பரதன் அயோத்திக்குத் திரும்பும்போதே ஆட்களை ஏவி அவனைக் கொன்று விடுவான் இராமன். ஆகவே உன்னிடமுள்ள கடைசி ஆயுதத்தைப் பாவி!"

"ஆயுதமா? என்னிடமா?"

"அமாம்! உனக்கு நினைவிருக்கிறதா? உன் கணவன், இந்திரனுக்கு எதிரியான சம்பரன் என்ற மன்னனுடன் போரிடப் போன போது நீயும் உடன் சென்றிருந்தாயே? போரில் உன் கணவன் கடும் காயமடைந்து மயக்க முற்றிருக்கும்போது நீயே தேரினைச் செலுத்தி மன்னன் உயிரைக் காத்தாய். அப்போது இருவரங்களைக் கேட்கும்படி மன்னன் உன்னைக் கேட்டபோது, தேவைப்படும்போது பிறிதொரு சமயம் வரத்தைக் கோரிப் பெற்றுக் கொள்வதாய்ச் சொன்னாய் அல்லவா? அதே வரங்களை இன்றே மன்னனிடம் கேள்! ஒருவரத்தால் இராமனின் பட்டாபிஷேகம் நிறுத்தப்பட்டு- உன் தந்தைக்கு அளித்த வாக்குறுதியின்படி பரதனுக்கு பட்டாபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்யச் சொல். அடுத்த வரத்தால் இராமன் வனவாசம் ஏற்று பதினான்கு ஆண்டுகள் கானகம் ஏகப் பணிக்கச் சொல். உனக்களித்த வரத்தைத் தர முடியாது என்று சூரிய குலத்தரசனும் வீரசத்திரியனுமான தசரத மன்னன் ஒரு போதும் கூற மாட்டான். அது மட்டுமல்லாமல் தன் தந்தையின் கட்டளையை ஏற்க முடியாது என இராமனும் கூறமாட்டான். ஆக ஒரே கல்லில் இரு காய்களையும் வீழ்த்த உன்னால் முடியும்!"

இவ்வாறு கூனியான மந்தரை கூறி முடித்ததும் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தவளாக கைகேயி ஓடி வந்து மந்தரையைக் கட்டி அணைத்து முத்தமாரி பொழிந்தாள்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி இல—14**
**பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள்**

**சரியான விடை** பாலகாண்டம்

1. திரு.மு.தா.மு. அமீன். 31/2, தபாற்கந்தோர் வீதி, ப/ஹாலி-எல-8175
2. எம்.ஆர். கந்தையா உனுகல தோட்டம், எல்கடுவ.
3. செல்வி.ந. இந்திரமதி. கொம்பனித் தெரு, கொழும்பு-02.
4. மு.பிரியா முனுசாமி நயப்பனை தோட்டம், புசல்லாவ
5. எஸ்.சிவமனோகரி. கறுப்பளை, செவனப்பிட்டி.

**இராமாயணப் போட்டி 16**

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனுப்பினால் போதும். அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:-** தசரதனை படுகாயமடையச் செய்த மன்னன் யார்?

ஜனவரி 27ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி இல:16.
தினமுரசு வாரமலர்
த.பெ. இல— 1772
கொழும்பு.


படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O. (QD/24/NEWS/96)
www.padippakam.com

அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
436331

# சாயும் வரை குத்து



கறுப்பின பெண்ணோடு சில்மிஷம் செய்தவர் என்று சிறையிலடைக்கப்பட்ட மைக்டைசன் வெளியே வந்தபின்னர் முன்னரைவிட உற்சாகமாக இருக்கிறார். உற்சாகமாகக் குத்துகிறார்.

மூன்றுவருட சிறையின் பின்னர் வெளியே வந்து கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில் 19ம் திகதி டைசன் சந்தித்தது மைக் நீலியை.

அம்மன் ஜுவல்
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11
332033


89 செக்களில் மைக் நீலியை குத்திச்சாய்த்து ரசிகர்களுக்கு உச்ச சந்தோசம் கொடுத்தார் டைசன்.

அதன் பின்னர் இரண்டாவது களம். இம் முறை மைக்டைசனோடு மோதியவர் மாத்தியூஸ். (படத்தில் மஞ்சள் காற்சட்டையோடு)

மாத்தியூஸின் எடை 224 றாத்தல். வயது 25. டைசனின் எடை 219 றாத்தல். மோதல் ஆரம்பித்தது. ரசிகர்களின் ஆரவாரம் மத்தியில் டைசன் தனது யானைப் பலத்தை காட்ட ஆரம்பித்தார். 3வது சுற்றில் மாத்தியூஸ் சாய்க்கப்பட்டார். எடுத்துக் கொண்ட நேரம் 2 நிமிடம் 32 செக்கன்ட்.

மைக்டைசன் அடுத்து மோதப் போவது ப்ராங்க் புருனோவுடன். உலக குத்துச் சண்டை சம்மேளனத்தின் சாம்பியனாக இருக்கிறார் புருனோ. அந்த மலையும் சரியுமா? டைசனின் குத்து அசத்துமா?!

தருவது வியோடெ




# நீ....நீ....ளம்

படத்தில் இருப்பது கார்தான். ஆனால் உலக அதிசயமாக உள்ள ஒரேயொரு கார். உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் இந்தக் கார் பற்றிய விபரங்களை வெளியிட்டு வியப்பேற்றி இருக்கிறார்கள்.

காரின் நீளம் 100 அடி. சக்கரங்கள் 26. அமெரிக்காவின் கலிபோனியாவில் உள்ள ஜேய் ஓர்பேர்க் என்பவரால் வடிவமைக்கப்பட்டது.

காரின் உள்ளே நீச்சல் தடாகம், அலுவலக அறைகள், படுக்கை அறைகள், சமையலறை, குளியலறை போன்ற சகல வசதிகளும் உண்டு. ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குரிய சகல வசதிகளும் கிடைக்கும்.

இந்தமாதிரிக் கார்களை உலகின் மிகப் பெரிய கோடீஸ்வரர்கள்தான் வைத்திருக்க முடியும். அதனால் ஹெலிக்கொப்டர் இறங்கும் தளம் ஒன்றும் இதில் இருப்பதுதான் மிகப் பெரிய ஆச்சரியம். கோடீஸ்வரர்கள் நேராக வந்து இறங்கி கார்சவாரியை தொடர வசதி. 'லிமோ' ரகக் கார்இது. பணம் பத்தும் செய்யும்.



# ஒன்றுதான் ஒன்று

காதல் உணர்ச்சி மனிதர்களுக்கு மட்டும் பொதுவென்று குத்தகை கொடுக்கப்படவில்லை. அதுசரிதான். அதற்காக மனிதக் காதலர்கள் இதமாக காற்றாட அமர்ந்து காதல் செய்யும் இடங்களிலும் இப்படி குரங்குக் காதலர்கள் ஆக்கிரமிப்பு செய்யலாமா?


பொது இடங்களில் விஷமம் செய்யும் மனிதக் காதலர்களையும் சிலர் கோபத்தில் குரங்குகள் என்று தூற்றுவதை அறிந்துதான் உண்மையான குரங்குகளே வந்த விட்டதோ தெரியவில்லை.

மனிதர்கள் போலவே உடைதரித்து, 'இறுக்கி யணைச்சு ஒரு உம்மா கொடுப்பது, படப்பிடிப்புக்காக மட்டும்தான். எனவே மனிதக் காதலர்கள் பயம் கொள்ள வேண்டாம்.

வாரமலர் தினமுரசு



கடந்த உலகப் கோப்பை கிரிக்கெட் போட்டியில் எதிராளி வீழ்ந்த சந்தோசத்தில் துள்ளும் இயம் போத்தம்.



# பல முக வீரர்

கிரிக்கெட் வீரர்களில் சகல துறை ஆட்டக்காரர்கள் வரிசையில் முதலிரு இடங்களில் இருப்பவர்கள் கபில்தேவ் வும், இயன் போத்தமும்தான்

கபில்தேவ் மொத்தமாக குவித்த ரன்கள் 5248. வீழ்த்திய விக்கெட்டுக்கள் 434. பிடித்த காட்ச் 64. (1978 முதல் 94 வரை)

இங்கிலாந்து அணி வீரரான இயன் போத்தம் பிறந்தது 1955 இல். 1977 முதல் 92 வரை படைத்த சாதனைப்பட்டியலும் அபாரமானது.

மொத்தமாக குவித்தது 5200 ரன்கள். வீழ்த்திய விக்கெட்டுக்கள் 383. 120 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி 102 காட்ச்களை லபக் லபக் கென்று பிடித்தார்.

இயன்போத்தமுக்கு மற்றொரு சிறப்பும் உண்டு. 1978 இல் ஜனவரி 15 முதல் 19 வரை பாகிஸ்தானுக்கு எதிராக நடந்த டெஸ்ட் போட்டியில் ஒரே இன்னிஸில் 108 ரன்களை குவித்தார். 8 விக்கெட்டுக்களை சாய்த்தார். இந்தச் சாதனையை இதுவரை எவரும் முறியடிக்கவில்லை.

1980 ல் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இயன் போத்தம் குவித்த ரன்கள் 114. வீழ்த்திய விக்கெட்டுக்கள் 10. 1980 பெப்ரவரி 15முதல் 19வரை பம்பாயில் இந்த டெஸ்ட் போட்டி நடைபெற்றது.

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்ற பின்னரும் விளையாட்டுத் துறைக்கு டாட்டா காண்பிக்கவில்லை.

உதைபந்தாட்டம், கார்பந்தயம் என்பவற்றில் புகுந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்.

கார்பந்தயத்தில் முத்திரை பதிக்க ஆரம்பித்திருக்கிறார்.


படிப்பகம்